வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu வார மலர்




Email : news@eelanadu.lk | மலர் : 03 | 26.12.2021 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 21 | பக்கங்கள் : 20


08 சீனா - ஈழத் தமிழர் உறவை எவ்வாறு கையாள்வது?


09 அமெரிக்க விமானத்தில் ரஷ்யாவின் சிவப்பு நட்சத்திர சின்னமா?


10 முறிந்துபோன தனது காதல் கதைகளை பத்திரிகைக்கு எழுதி பிரபலமான பெண் எழுத்தாளரின் கதை


13 ஆயுள் கைதிகளின் விடுதலையை ஆராய தமிழக அரசு அமைத்த குழு

# இந்து ஆலயங்களில் திருடப்பட்ட 20 விக்கிரகங்கள் மீட்கப்பட்டன!

## காங்கேசன்துறை பொலிஸார் அதிரடி

யாழ்ப்பாணம், டிசெ. 26

காங்கேசன்துறை பொலிஸ் பிராந்தியத்தில் இராணுவ மற்றும் கடற்படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிகள் உள்பட பல இடங்களில் இந்து ஆலயங்களில் திருடப்பட்ட 20ற்கும் மேற்பட்ட இந்து விக்கிரகங்களை கொழும்பு சென்ற பொலிஸ் குழு மீட்டுள்ளது.

டிசெம்பர் 9ஆம் திகதிக்கும் நேற்று 23ஆம் திகதிக்கும் இடையே



தெல்லிப்பழை மற்றும் காங்கேசன்துறை பொலிஸ் பிரிவுகளில் உள்ள இந்து ஆலயங்களில் விக்கிரகங்கள் திருடப்பட்டன. இந்தச்

19

## பிள்ளையார் கோயில்களை அழிக்கும்

# கிறிஸ்தவர், முஸ்லிம்களுக்கு உரித்தான நாடல்ல இலங்கை!



## சிவசேனை தலைவர் சச்சிதானந்தம்

யாழ்ப்பாணம், டிசெ. 26

பிள்ளையார் கோயில்கள் சாத்தானின் கோயில்கள் எனக் கிறித்தவர் கருதினால், பிள்ளையார் கோயில்கள் உருவ வழிபாட்டு இடங்கள் காபிர்களின் உறைவிடங்கள் என முகமதியர் கருதினால், இலங்கை அவர்களுக்குரிய நாடு அல்ல.

அவர்கள் கருத்தும் அவர்கள் நோக்கமும் கொண்ட நாடுகள் பல உலகில் உள்ளன.

இவ்வாறு தெரிவித்துள்ளார் ஈழம் சிவசேனை அமைப்பின் தலைவரும் சைவப் பெரியாருமான மறவன்புலவு க. சச்சிதானந்தம்.

19

# சர்வதேச கண்காணிப்புடன்கூடிய பொதுசன வாக்கெடுப்பு நடத்துக!



## தமிழக - ஈழ புலம்பெயர் அமைப்புகள் அமெரிக்காவிடம் கூட்டாக வலியுறுத்து

நியூயோர்க், டிசெம்பர் 26

சர்வதேச கண்காணிப்புடன் கூடிய பொதுசன வாக்கெடுப்பு, தமிழர் தாயகப் பகுதியில் இடைக்கால சர்வதேச பாதுகாப்பு பொறிமுறை, இலங்கையின் ஆறாவது திருத்தச் சட்டத்தை நீக்குதல், இலங்கையில் இடம்பெற்றவை எனக் கூறப்படும் மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பான விவகாரத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு பரிந்துரைத்தல் மற்றும் இனப்படுகொலை குற்றத் தடுப்பு மற்றும் தண்டனை மற்றும் சித்திரவதைக்கு எதிரான தடுப்பு தொடர்பான மாநாட்டின் அடிப்படையில் சர்வதேச நீதிமன்றத்தில் இலங்கைக்கு எதிரான நடவடிக்கை - ஆகிய கோரிக்கைகள் உள்ளடங்கிய கடிதமொன்று, இலங்கைக்கான புதிய அமெரிக்க தூதுவருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

19

# மேலும் 19 பேர் மரணம்

கொழும்பு, டிச. 26

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றால் 19 பேர் உயிரிழந்துள்ளனர்.

சுகாதார சேவை

19

# மோடிக்கான கடிதம் நிறைவு புதனன்று கைச்சாத்தாகலாம்

## ஒருங்கிணைப்பாளர் சுரேந்திரன்



யாழ்ப்பாணம், டிசெ. 26

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்புவதற்காக தமிழ் பேசும் மக்களின் கட்சித் தலைவர்கள் தயாரித்த கடிதம் இறுதி செய்யப்பட்டுள்ளது. எதிர்வரும் 29ஆம்

19

# அரசைக் கவிழ்க்க திரைமறைவில் சதி

## ஒப்புக்கொண்டது சஜித் அணி; ஜே.வி.பியினருக்கும் அழைப்பு

கொழும்பு, டிச. 26

“எதிர்க்கட்சியினர் மாத்திரமின்றி ஆளுந் தரப்பிலும் அரசுக்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்டவர்களையும் இணைத்துக் கொண்டு பாரிய அரசியல் அரங்கைக் கட்டியெழுப்புவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தயாராகிக் கொண்டிருக்கின்றது. இது தொடர்பான பலதரப்பட்ட பேச்சுகள் முன்னெடுக்கப்படுகின்ற போதிலும், அதன் இரகசியத்தன்மையைப் பேணுகின்றோம்.”

19

## இலங்கை தொடர்பான பொறிமுறை:

# ஐ. நாவின் நிதி, ஆளணியை குறைப்பதற்கு சதி முயற்சி!

வாஷிங்டன், டிசெ. 26

ஐக்கிய நாடுகள் சபையின் 2022 ஆம் ஆண்டிற்கான வரவு, செலவுத்திட்டம் தொடர்பான விவாதம் நடைபெற்றுவருகின்றது. இந்த வரவு - செலவுத் திட்டத்தில் இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல் பொறிமுறைக்காக ஒதுக்கப்படவுள்ள நிதி மற்றும் ஆளணியை

HUMAN RIGHTS WATCH

குறைப்பதற்கு சீனா மற்றும் ரஷ்யா ஆகிய பாதுகாப்புச் சபை உறுப்புரிமை நாடுகளும் இலங்கையும் தீவிர முயற்சிகளை மேற்

## கிறிஸ்மஸ் விருந்தில் மோதல்:

# சக உத்தியோகத்தர்கள்மீது சூடு! நான்கு பொலிஸார் உயிரிழப்பு!!

திருக்கோவில், டிசெ. 26

திருக்கோவில் பொலிஸார் ஒன்றுகூடி நடத்திய கிறிஸ்மஸ் விருந்தில் சகஉத்தியோகத்தர்கள்மீது பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 4 பொலிஸார் உயிரிழந்தனர். நிலையத்தின் பொறுப்பதிகாரி உட்பட காயமடைந்த இருவர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அம்பாறை மாவட்டம் - திருக்கோவில்

19

# நியாயமாக நடந்துகொள்கின்றீர்களா?

## ஏழு மலையானை வணங்கிய மஹிந்தவிடம் மனோ கேள்வி



கொழும்பு, டிச. 26

"எடுத்தற்கெல்லாம் திருப்பதி ஏழு மலையானை மனைவி, பிள்ளை குட்டிகளுடன் நாடும் நீங்கள், ஏழு மலையானை வணங்கும் இந்நாட்டு இந்துக்களுக்கு நியாயமாக நடந்து கொள்கின்றீர்களா?"

- இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்சவிடம் கேள்வி எழுப்பியுள்ளார் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி.

பிரதமர் மஹிந்த தனது மனைவி மற்றும் இளைய மகன் குடும்பத்தினருடன் திருப்பதி ஏழு மலையானை வழிபட்ட படங்கள் ஊடகங்களில் வெளியாகியுள்ளன.

இது தொடர்பில் தனது சமூக ஊடகத் தளத்தில் பதிவொன்றை இட்டுள்ள மனோ எம்.பி.,

"நல்லதுதான். எங்கள் கடவுள் எங்களுக்கு மட்டுமே என்று எழுதி எதுவும் கொடுக்கப்படவில்லை. நாங்களும் அப்படி நினைப்பதும் இல்லை. எங்கள் மனங்களும் எங்கள் மதத்தை போல் பரந்த விசாலமானதுதான். ஆனால், புரிபடாதது, ஒன்றுதான். எடுத்தற்கெல்லாம் ஏழு மலையானை மனைவி, பிள்ளை குட்டிகளுடன் நாடும் நீங்கள், ஏழு மலையானை வணங்கும் இந்நாட்டு இந்துக்களுக்கு நியாயமாக நடந்துகொள்கின்றீர்களா? இந்துக்களை சரிசமமாக நடத்துகிறீர்களா? இந்தக் கேள்விகளை உங்கள் மனச்சாட்சி உங்களிடம் கேட்கவே கேட்காதா? மிஸ்டர் பிரைம் மினிஸ்டர்..!" - என்று குறிப்பிட்டுள்ளார். (இ)

# 'துரைவி' விருது - 2022

யாழ்ப்பாணம்,டிசெ.21

2021 ஆம் ஆண்டில் இலங்கையில் தமிழில் வெளிவந்த கட்டுரைத் தொகுப்பு மற்றும் மொழிபெயர்ப்பு நூல்களில் சிறந்தவை தேர்ந்தெடுக்கப்பட்டு 'துரைவி' விருது வழங்கப்படவுள்ளது. தெரிவு செய்யப்படும் சிறந்த நூல் ஒன்றுக்கும் தலா 10000.00 ரூபாவும், விருதும், சான்றிதழும் வழங்கப்படும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**கட்டுரைத் தொகுப்பு**

கட்டுரைத் தொகுப்பு கலை இலக்கிய விமர்சனம், ஆய்வு, கோட்பாடுகள் போன்ற வகையான ஆக்கங்கள் கொண்ட நூலாக இருத்தல் வேண்டும்

**மொழிபெயர்ப்பு நூல்**

மொழிபெயர்ப்பு நூலின் மூலப்படைப்பு உலகின் எந்த மொழியிலும் வெளிவந்தாகவும் இருக்கலாம். மொழிபெயர்க்கப்படும் நூல் ஆக்க இலக்கியமாக இருத்தல் வேண்டும்.

**விதிகள்**

விருதுக்காக அனுப்பப்படும் நூல் இலங்கையில் பதிப்பிக்கப்பட்டு இலங்கையில் ISBN இலக்கம் பெற்று இருத்தல் வேண்டும்.

நூலாசிரியர் - மொழிபெயர்ப்பாளர் இலங்கையில் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

நூலாசிரியர் - மொழிபெயர்ப்பாளர் பற்றிய விவரக்கொத்து, சமர்ப்பிக்கப்படும் நூலுடன் இணைத்து அனுப்பப்படல் வேண்டும்.

ஒவ்வொரு நூலின் மூன்று பிரதிகள் அனுப்பப்படல் வேண்டும்.

நூலின் பிரதிகள் நேரடியாகவோ தபால் மூலமாகவோ 2022ஆம் ஆண்டு ஜனவரி 15ஆம் திகதி முன்னதாக கீழ் காணும் விலாசத்திற்கு சேர்க்கப்படல் வேண்டும்.

Duraivi, c/o Vijaya General Stores, 85, Wolfendhal Street, Colombo - 13.

மேலதிக தொடர்புகளுக்கு- மேமன்கவி - 0778681464, துரைவி அலுவலகம் - 011-2327011,

மின்னஞ்சல் - duraivi1931@gmail.com

# 'தரணியெலாம் எங்கள் தாயகமாம்' சர்வதேச கவிதை போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,டிசெ.21

வலம்புரி கவிதா வட்டம் மறைந்த வகவம் ஸ்தாபக பொதுசெயலாளர் கவிஞர் கவின்கமல் ஞாபகார்த்தமாக நடத்திய சர்வதேச கவிதைப் போட்டி-2020 முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

அதன் விவரம் வருமாறு:-

முதலாம் பரிசு - ரூபா 25000.00 பணப்பரிசும் விருதும் சான்றிதழும் - புலவர் எஸ். மோகன்குமார் - தமிழ்நாடு

இரண்டாம் பரிசு - ரூபா 12500.00 பணப்பரிசும் விருதும் சான்றிதழும் - கவிமணி அ,கௌளரிதாசன் - கிண்ணியா

மூன்றாம் பரிசு - ரூபா 7500.00 பணப்பரிசும் விருதும் சான்றிதழும் - பாலமுனை பாரூக் - பாலமுனை

பத்து ஆறுதல் பரிசுகள் தலா ரூபா 1000.00 பணப்பரிசும் சான்றிதழும் -

1.எஸ்.சுதாகரன் - சாவகச்சேரி

2.மெய்யன் நடராஜா - வத்தளை

3.எம்.ஐ.அச்சி மொஹமட் - சம்மாந்துறை

4. ரீ.எல்.ஜவ்பர்கான் - காத்தான்குடி

5. திருமதி ரி.விஷ்ணு குமார் - திருகோணமலை

6.எச்.எம். அப்துல் ஹலீம் - ஏறாவூர்

7.ஏ,எச்.எம்.ஜிஹார் - புதிய காத்தான்குடி

8. எச்.எப். ரிஸ்னா - கல்கிசை

9. ஜி. கங்கனா - மட்டக்களப்பு

10.மூர்த்தி தினு - மட்டக்களப்பு.

# போதைப்பொருள் வர்த்தகர் கைது!

கொழும்பு, டிச. 26

கொழும்பிலிருந்து போதைப் பொருளைக் கடத்தி வந்து, மட்டக்களப்பு மாவட்டத்தில் பல்வேறு பிரதேசங்களுக்கு விற்பனை செய்து வந்த நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை காகித ஆலை இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய களுவாஞ்சிக்குடி விசேட அதிரடிப் படையினருடன் இணைந்து மேற்கொண்ட சுற்றிவளைப் பின்போதே குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபரிடமிருந்து 30 கிராம் ஐஸ் போதைப்பொருளும், மோட்டார் சைக்கிளும் கைப்பற்றப்பட்டன. (இ)

# புத்தாக்க அரங்க இயக்க மெய்நிகர் கதையாடல்

யாழ்ப்பாணம், டிசெ. 26

புத்தாக்க அரங்க இயக்கம் நடத்தும் மெய்நிகர் இணைய வழி அரங்க கதையாடல் நிகழ்வின் 64 ஆவது கதையாடல் நிகழ்வு இன்று ஞாயிற்றுக் கிழமை இரவு 7 மணிக்கு புத்தாக்க அரங்க இயக்கத்தின் பணிப்பாளர் எஸ்.ரி.குமரன் தலைமையில்இடம்பெறவுள்ளது.

ஓய்வுநிலை தொலைத் தொடர்பு பொதுமுகாமையாளர் வானொலி நாடகச் செயற்பாட்டளர் மறவன்புலோ செல்வம் அம்பலவாணர் வானொலி நாடகங்களும் சமூகமும் அராலியூரானின் நாடகங்களை அடிப்படையாகக் கொண்ட கருத்தாடல் என்னும் விடயப் பொருளில் கதையாடவுள்ளார் .

நிறைவுரையினை புத்தாக்க அரங்க இயக்கத்தின் நிர்வாகப் பணிப்பாளர் எஸ்.ரி.அருள் குமரன் வழங்கவுள்ளார்கள்.

இவ் இணையவழி அரங்க கதையாடல் நிகழ்வில் ஆர்வமுடையவர்களை சூம் செயலி இலக்கம் 647334 8261கடவுச் சொல் ITM ஊடாக இணைந்து கொள்ளுமாறு புத்தாக்க அரங்க இயக்கத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

## கல்வி tv CHANNEL-1

**26.12.2021 ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English வினாத்தாள் |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் வினாத்தாள் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு வணிகப்பிரிவு |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் வினாத்தாள் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 04.30 | தரம்-10 | English |

## கல்வி tv CHANNEL - 2

**26.12.2021 ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | English |
| 09.00 | தரம்-02 | அழகியல் |
| 09.45 | தரம்-03 | English |
| 10.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 01.15 | தரம்-05 | English |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | அழகியல் |
| 06.00 | தரம்-03 | English |
| 06.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-05 | English |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | English |
| 12.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | தரம்-05 | English |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu
26.12.2021 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், மார்கழி 11

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# அமெரிக்க தமிழ் - புலம்பெயர் அமைப்புக்களின் கோரிக்கை?

அமெரிக்காவை தளமாகக் கொண்டியங்கிவரும் முன்னணி தமிழ் புலம்பெயர் அமைப்புக்கள் - இலங்கைக்கான புதிய அமெரிக்க தூதுவரை நோக்கி கூட்டாகக் கோரிக்கையொன்றை முன்வைத்திருக்கின்றன. அதாவது, ஈழத் தமிழர்களின் அரசியல் பிரச்னையில் அமெரிக்காவின் தலையீட்டை கோரியிருக்கின்றனர். இலங்கை தொடர்பில் அமெரிக்கா ஒரு சில நிலைப்பாடுகளை எடுக்கவுள்ளதாக கூட்டமைப்பின் பக்கத்திலிருந்து கூறப்படுகின்றது.

அண்மையில் கூட்டமைப்பின் சார்பில், எம்.ஏ.சுமந்திரன் தலைமையில் நிபுணர் குழுவொன்று இராஜாங்கத் திணைக்கள அதிகாரிகளுடன் சந்திப்புக்களில் ஈடுபட்டிருந்தது. இதனைத் தொடர்ந்தே இவ்வாறானதொரு கருத்து தமிழ் ஊடகங்களில் செய்தியானது. எனினும் அமெரிக்க பயணம் தொடர்பில், கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் மத்தியில் வெளிப்படையான உரையாடல்கள் இடம்பெற்றிருக்கவில்லை. நிபுணர் குழுவின் நியமனத்திலும் பங்காளிக் கட்சிகள் பங்குகொண்டிருக்கவில்லை.

அதேவேளை, குறித்த சந்திப்பில், உலகத் தமிழர் பேரவையை பிரதிநிதித்துவம் செய்யும் தமிழ் புலம்பெயர் குழு ஒன்றும் பங்குகொண்டிருந்தது. குறித்த குழுவினரின் பங்குபற்றல் தொடர்பிலும் கூட்டமைப்புக்குள் வெளிப்படையான கலந்துரையாடல்கள் இடம்பெற்றிருக்கவில்லை. அனைத்தும் இரகசியமாகவே மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதேவேளை, உலகத் தமிழர் பேரவையினர் குறித்த சந்திப்புக்களில் பங்குகொண்டமை தொடர்பில், பெரும்பாலான புலம்பெயர் அமைப்புக்கள் அதிருப்திகளை வெளியிட்டிருந்தன. இது தொடர்பில் பரவலான விமர்சனங்களை காண முடிந்தது. இவ்வாறானதொரு பின்னணியில்தான், நிபுணர் குழுவிற்கு தலைமையேற்றிருந்த எம்.ஏ.சுமந்திரனின் கனடிய சந்திப்பில் குழப்பங்கள் ஏற்பட்டது.

கூட்டமைப்பின் ஓர் அங்கத்துவ கட்சியான, தமிழ் அரசு கட்சி, அமெரிக்காவை நோக்கி - தாம் இராஜதந்திர நகர்வுகளை மேற்கொண்டுவருவதாக கூறிவரும் சூழலில்தான், கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைமையில். இந்தியாவை நோக்கி கோரிக்கையொன்றை முன்வைப்பதற்கான முயற்சிகளும் இடம்பெற்றுவருகின்றன. குறித்த முயற்சி அதன் இறுதி கட்டத்தை எட்டியிருக்கின்றது. ஆரம்பத்தில் குறித்த முயற்சியை பொது வெளிகளில் விமர்சித்திருந்த, தமிழ் அரசுக் கட்சியினரும் தற்போது குறித்த முயற்சியுடன் தங்களை இணைத்திருக்கின்றனர். இரா.சம்பந்தன் ஏதாவது இடையூறுகளை ஏற்படுத்தாவிட்டால், அடுத்த வாரம் குறித்த கூட்டு கோரிக்கை இந்திய தூதுவரிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

வரலாற்றில் முதல் முறையாக - தமிழ் தேசியக் கட்சிகளும், மலையக மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகளும், முஸ்லிம் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதான கட்சிகளும் - ஒரு கோரிக்கைக்காக ஒன்றிணைந்திருக்கின்றன. இந்திய- இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே குறித்த கோரிக்கை முன்வைக்கப்படவுள்ளது. இந்திய -இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில், இலங்கை இனப்பிரச்னை விவகாரத்தில் மீளவும், இந்தியா தலையீடு செய்ய வேண்டும் என்பதே, மேற்படி கூட்டு - கோரிக்கையின் உள்ளடக்கமாகும்.

இவ்வாறான அரசியல் உரையாடல்களுக்கு மத்தியில்தான், அமெரிக்க தமிழ் புலம்பெயர் அமைப்புக்கள் ஒன்றிணைந்து - அமெரிக்காவின் தலையீட்டை கோரியிருக்கின்றனர். அமெரிக்க தூதுவருக்கான கோரிக்கையென்பது - அடிப்படையில், அமெரிக்காவிற்காக கோரிக்கைதான். இலங்கை பொருளாதார ரீதியில் மோசமான சரிவை சந்தித்துவரும் சூழலில்தான், இந்தியாவை நோக்கியும், அமெரிக்காவை நோக்கியும் சம வேளையில் கோரிக்கைகள் முன்வைக்கப்படுகின்றன. இவ்வாறான கோரிக்கைகளை அமெரிக்கா எவ்வாறு நோக்கும் என்பதற்கு அப்பால், பாதிக்கப்பட்ட மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் அமைப்புக்களிலிருந்து வெளிப்படும் இவ்வாறான வேண்டுகோள்களுக்கு ஓர் இராஜதந்திர பெறுமதியுண்டு. அதாவது, குறித்த நாடு, பிறிதொரு நாட்டின் உள் விவகாரங்களுக்குள் சில தலையீடுகளை, சில ஆலோசனைகளை முன்வைக்க வேண்டுமாயின், பாதிக்கப்பட்ட மக்களிடமிருந்து அதற்கான அழைப்புக்கள் செல்ல வேண்டும். ஆசியாவை நோக்கிய அமெரிக்க நகர்வுகளில், ஆசிய புலம்பெயர் சமூகத்தின் குரல்களுக்கும் ஓர் இடமுண்டு. இந்த அடிப்படையிலேயே, அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் புலம்பெயர் சமூகத்தினருடன் தொடர்ந்தும் உரையாடிவருகின்றது.

# மறக்கமுடியாத ஞாயிற்றுக்கிழமை

**சுனாமி நினைவு தினம் இன்று**

*2004ஆம் ஆண்டு இன்றைய தினம் போன்ற ஒரு நாள்தான் அது - கிறிஸ்மஸின் மறுதினத்தை அவ்வளவு எளிதில் இலங்கை கடல்கரைப்பகுதி மக்களால் மறக்க இயலாது. அந்த ஞாயிற்றுக்கிழமை எழும்பிய ஆழிப் பேரலை நெய்தல் நிலத்தில் துயர ரேகைகளைப் படரவிட்டது. இப்போதுவரை அந்தப் பாதிப்பில் உழன்றுகொண்டிருக்கின்ற னர் அம்மக்கள். இலங்கையில் ஏற்பட்ட மிகப் பெரிய இயற்கைப் பேரழிவுகளில் சுனாமியும் ஒன்று.*



*2004ஆம் ஆண்டு இந்தோனேஷியாவின் சுமத்ரா தீவில் உள்ள கடல்பகுதியில் அதி காலை வேளையில் திடீரென நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் 9.1 முதல் 9.3 ரிச்டர் அளவிற்குப் பதிவானது. இதன் காரண மாக ஏற்பட்ட சுனாமியால் சுமார் 14 நாடுகளுக்கு மேல் பாதிக்கப்பட்டது. இலட்சக் கணக்கான மக்கள் உயிரிழந்தனர்.*

*இலங்கையில் குறிப்பாக கடலோர மாவட்டங்கள் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டன. இன்று வரை டிசம்பர் 26ஆம் திகதி மறக்கமுடியாத நாளாக அனைவரின் உள்ளத்திலும் உள்ளது. கடலோர மக்களுக்கு அலைகள் புதிதல்ல. அன்று வந்த அலையையும் சாதாரணமாகவே நினைத்தனர். ஆனால் ஆயிரக்கணக்கான மக்களின் உயிரைப் பறிக்கும் என்று யாரும் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். சுமத்ரா தீவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தின் காரணமாக அன்று வந்த சுனாமி அலைகள் சுமார் 30 மீற்றர் (100 அடி) உயரத்துக்கு எழுந்தன.*

*இந்த சுனாமியின் பாதிக்கப்பட்ட கிட்டத்தட்ட 14 நாடுகளில் ஒட்டுமொத்தமாக சுமார் 2,29,866 பேர் உயிரிழந்தனர். மேலும் 1,25,000 பேருக்கு மேல் காயமடைந்தனர். 43,786 காணாமல் போயினர். மேலும் 17 லட்சத்துக்கும் அதிகமானோர் தங்கள் வாழ்விடத்தை இழந்து இடம்பெயர்ந்தனர்.*

*அதிகம் பாதிக்கப்பட்ட நாடான இந்தோனேசியாவில் மட்டும் 1,67,736 உயிரிழந்தனர். 37,063 பேர் காணாமல் போயினர். மேலும் இலங்கை, தாய்லாந்து, சோமாலியா, மியான்மர் போன்ற நாடுகளில் ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்தனர். இலங்கையில் 35,322 பேர் இறந்தனர்.*

*நேரடியாகப் பாதிக்கப்பட்ட நாடுகளிலிருந்த பிறநாட்டுக் குடிமகன்களில் சுவீடன் நாட்டு மக்கள் 554 பேரும், ஜேர்மன் நாட்டு மக்கள் 539 பேரும் இறந்தனர். அதேபோல் பின்லாந்து இங்கிலாந்து, சுவிற்ஸர்லாந்து, பிரான்ஸ், ஆஸ்திரியா, நோர்வே, டென்மார்க், இத்தாலி எனப் பல நாட்டு மக்களும் இந்தப் பாதிப்பில் சிக்கி இறந்தது மிகவும் சோகமான விஷயம். பல்வேறு மீனவர்கள் சுனாமியில் சிக்கி உயிரிழந்ததால் அவர்களையே நம்பியிருந்த ஆயிரக்கணக்கான குடும்பங்கள் இன்றுவரை அந்தத் துயரத்திலிருந்து மீண்டுவரமுடியாமல் தவித்து வருகின்றனர்.*

*சுனாமி என்ற வார்த்தை ஜப்பான் மொழியில் இருந்து தான் வந்தது. இதற்கு துறைமுகம் மற்றும் அலைகள் என்று பொருள். சிறிய உயரமுடைய அலைகள், சுனாமியால் பெரிய அலைகளாக மாறு கின்றன. சுனாமி ஏற்படும் போது கடற்கரை யில், அலையின் உயரம் நிலநடுக்கத்தின் அளவுக்கு ஏற்ப இருக்கும். கரையில் இருந்து அதன் உயரத்துக்கு ஏற்ப கடல்நீர், தரைப் பகுதிக்குள் ஊடுருவும். பின், இந்த பெரிய அலைகள் தரையில் பரவிய இடத்துக்கு பின்னே, தொடர்ந்து நீர் அலைகள் வேகமாக முன்னேறிக் கொண்டே இருக்கும். சுனாமி அலைகளின் உயரத்துக்கு ஏற்ப அதன் சேதம் இருக்கும். சுனாமி அலைகளின் தாக்கத்துக்கு பின், அந்த தரைப்பகுதியில் பெரிய மாற்றம் இருக்கும். இப்படி கடல்நீர் சுனாமி அலையின் மூலம் இடம்பெயர்வதால், முன்னர் நிலப்பகுதியாக இருந்தவை நீராகவும், நீர்ப்பகுதி நிலமாகவும் மாற வாய்ப்புண்டு.*


**கடலோர மக்களுக்கு அலைகள் புதிதல்ல. அன்று வந்த அலையையும் சாதாரணமாகவே நினைத்தனர். ஆனால், ஆயிரக்கணக்கான மக்களின் உயிரைப் பறிக்கும் என்று யாரும் எதிர்பார்த்திருக்கமாட்டார்கள்**

*கடற்பரப்புக்கு கீழ், கண்ணுக்கு தெரியாத சிறிய வடிவத்தில் சுனாமி உருவாகும். கடலின் மேல் பகுதியில் இருக்கும் கப்பலில் கூட, சுனாமி உருவாவதை உணர முடியாது. ஆனால், அடுத்த சில நிமிடங்களிலேயே, இந்த சுனாமி மிகப்பெரிய அளவில் உருவாகி, கடல் பரப்பு முழுவதும் வேகமாக பரவும்.*

*சுனாமி என்பது ஒரே ஒரு அலையால் மட்டும் ஏற்படுவது அல்ல. அடுக்கடுக்கான பல அலைகளால் உருவாகும். இந்த அலைகள், கடற்பரப்பு முழுவதும் பரவி, கரையை நோக்கி, மணிக்கு 1,000 கி.மீ., வேகத்தில் சீறிப் பாய்ந்து செல்லும். இந்த அலைகளின் வேகம், ஜெட் விமானத்தின் வேகத்துக்கு சமமானதாக, சில சமயத்தில் கூடுதலாக கருதப்படுகிறது.*

*சுனாமி அலைகள் கரையை நோக்கி அதிவேகமாக சீறிப் பாய்ந்து செல்லும்போது, கடலுக்குள் இருந்த தண்ணீரின் கணிசமான பகுதி காலியாகி விடும். கடலின் கீழ்ப்பரப்பில் உள்ள பவளப் பாறைகள் கூட, கண்ணுக்கு தெரியும். அந்த அளவுக்கு, தரைப் பகுதி தெரியும்.*

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'





# இந்தவார ராசிபலன் 26.12.2021 – 01.01.2022

டிசெம்பர். 26 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம் - மார்கழி - 11
நல்ல நேரம் : 7.30 - 9.00
ராகு காலம் : 4.30 - 6.00
திதி : சப்தமி

## மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

உறவினர்களுடன் இருந்த கருத்து வேறுபாடுகள் தீர வாய்ப்பு உள்ளது. அவர்களை அனுசரித்துப்போய் ஆசி பெறுவீர்கள். புதிய நட்புகளை நம்பிப் பெரிய முடிவுகள் எதையும் எடுக்கவேண்டாம். விலையுயர்ந்த ஆபரணங்கள் விஷயத்தில் சற்று கவனமாக இருங்கள். யாரையும் அலட்சியமாக நடத்த வேண்டாம். ஆசிரியர் பணியில் உள்ளவரகளை மதித்து அவர்களால் நன்மையடைவீர்கள். கணவன் - மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் தோன்றாதபடி ஒருவரை ஒருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. திடீர் நன்மைகளையும் லாபத்தையும் எதிர்பார்க்கலாம்.

## ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

புதிய மனிதர்களின் அறிமுகத்தால் பொருளாதார வளர்ச்சி கூடும். கடந்தவாரங்களில் ஏற்பட்ட சிரமங்கள் அகலும். பணியிடத்தில் உங்கள் வேலை பாராட்டப்படும், பக்கத்து வீட்டார்களிடம் ஒன்றுமை அதிகரிக்கும். நண்பர்கள், சகோதரரால் உங்கள் பிரச்னைகள் தீர ஆரம்பிக்கும். வியாபாரத்தில் புதுஒப்பந்தம் செய்வீர்கள். உறவினரிடையே உங்கள் கை ஓங்கும். சாதனைகள் செய்வீர்கள். குடும்பத்தில் இருந்த மன வருத்தம் ஒன்று நீங்கும். அண்டைவீட்டாருக்கு உதவுவீர்கள். குடும்பத்தினரின் போக்கு இனிமையாக இருக்கும்.

## மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

உழைப்பினால் வெற்றி பெறுவீர்கள். கடந்த காலக் கவலைகள் நீங்கி மனதில் நிம்மதி மேலோங்கும். வெளிநாட்டுப் பயணம் முடிவாகி மகிழ்ச்சியளிக்கும். கோபத்தைக் கட்டுப்படுத்த வேண்டும். குடும்ப நடவடிக்கைகள் திருப்திகரமாக இருக்கும். மகனின் எதிர்காலம் பற்றிய பயம் நீங்கும். உறவினர், நண்பர்களுக்குக் கொடுத்த கடன் வசூலாகும். சண்டை சச்சரவுகளில் சற்று விலகி நிற்பது நன்மை தரும். ஆரோக்கியத்தில் தனிக்கவனம் செலுத்துங்கள். மேலதிகாரி அல்லது ஆசிரியரின் பிடிவாதம் தளரும்.

## கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

சமூகத்தில் நல்ல பெயர் எடுப்பீர்கள். மூத்த சகோதரர்களுக்கு ஏற்பட்ட தடைகள் உங்கள் உதவியால் விலகும். நீண்ட நாட்களாக வாய்ப்புக்குக் காத்திருந்தவர்களுக்கு மனதிற்கு மகிழ்ச்சியான செய்திகள் வரும். மனசஞ்சலங்கள் உண்டாகும் போது, அமைதியாகச் செயல்படுவீர்கள். தன்னம்பிக்கையுடன் பொது விஷயங்களில் ஈடுபடுவீர்கள். முயற்சிகளில் வெற்றி கிட்டும். பிரச்னைகளுக்கு நல்ல தீர்வு காண்பீர்கள். வீடு வாங்குவது குறித்து யோசிப்பீர்கள். உங்கள் போக்கில் மாற்றம் நன்மை காண்பீர்கள்.

## சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

சில்லறை செலவுகள் ஏற்படும் சுபநிகழ்ச்சிகளை அடக்கமாக நடத்தி மகிழ்வீர்கள். குழந்தைகளால் மனமகிழ்ச்சி உண்டாகும். வியாபாரிகள் தங்கள் ஊழியர்களிடம் சுமுகமாகப் பழகவும். பணவரவு சுமாராக இருக்கும். செலவுகளைக் குறைத்து நிம்மதி காண்பீர்கள். கலைத்துறையில் உள்ளவர்களுக்கு வருமானம் பெருகும். புதிய முதலீடுகளில் ஈடுபடுவது பற்றி யோசிப்பீர்கள். பணவிஷயத்தில் முழுமையான அனுகூலத்தை எதிர்பார்க்க முடியாது. தொழிலில் சங்கடம் ஏற்பட்டாலும் பின்னர் நன்மை உண்டாகும்.

## கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

காணாமல் போன விலையுயர்ந்த பொருள் கிடைக்கும். உடன் இருப்பவர்களின் செயல்கள் உங்கள் கோபத்தை துாண்டலாம். குடும்பத்தினரிடம் வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. சகோதரர்கள் அல்லது சகோதரிகளுக்கு உதவி செய்விர்கள். வியாபாரத்தில் புதுதொடர்பு கிடைக்கும். சகஊழியர்கள் உங்களுக்கு எதிராகச் செய்யும் விஷயம் பலிக்காது. குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். புதியவரின் நட்பால் உற்சாகமடைவீர்கள். புதிய சிந்தனைகள் பிறக்கும். பணிச்சுமை அதிகரித்தாலும் அநாயாசமாகச் சமாளிப்பீர்கள்.

## துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

உடன் இருப்பவர்கள் ஒத்துழைப்பு தருவார்கள். எதிர்காலத்தில் உதவக்கூடிய அனுபவம் உண்டாகும். அலுவலகத்தில் ஏற்பட்ட திடீர் மனவருத்தம் நீங்கும். அக்கம் பக்கத்தினரின் உதவியால் ஒரு கஷ்டத்திலிருந்து மீளுவீர்கள். எதையும் தைரியத்துடன் எதிர்கொண்டு ஏற்றங்களை பெறுவீர்கள். மேலதிகாரிக்கு உங்கள் மேல் இருந்த நல்ல அபிப்ராயம் கூடும். பணவரவு சிறப்பாக இருக்கும். கடந்த வாரம் துவங்கிய முயற்சி நிறைவேறும். பல நாள் தேவை ஒன்று நிறைவடையும். கடன் குறையும். நல்ல தகவல்கள் கிடைக்கும்.

## விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

வியாபாரத்தில் / தொழிலில் லாபம் மகிழ்ச்சி தரும் வகையில் இருக்கும். ஆடம்பர செலவுகளை குறைப்பது நல்லது. முயற்சிகளில் சிறுதடை உண்டாகி உடனே விலகும். பணியிடத்தில் வாக்குவாதங்களை தவிர்ப்பது நல்லது. பணிமாற்றம் பற்றிய சிந்தனை இப்போது வேண்டாம் . பணவிவகாரத்தினால் வந்த சிக்கல்கள் அகலும்.எதிலும் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. சகிப்புத்தன்மை தேவைப்படும். நண்பர்களுக்கு உங்களால் நன்மை உண்டாகும். எதிர்பார்த்ததற்கு மேல் வருமானம் வரும். கடன் குறையும்.

## தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

அரசு சம்பந்தப்பட்ட முயற்சிகளில் எதிர்பார்த்த பலன் கிடைக்கப் பாடுபட வேண்டியிருக்கும். உரிய மருத்துவத்தால் தாயின் உடல்நிலை சீராகும். செல்வசேர்க்கை உண்டாகும். ஆடம்பரப் பொருட்கள் வாங்க அதிகம் செலவு செய்ய வேண்டாம். குடும்பத்தில் திருப்தியான நிலை காணப்படும். கொடுக்கல் வாங்கலில் கவனம் தேவை. கூடுதலாகப் பணியாற்றுவீர்கள். நன்மைகள் கிடைப்பதற்குச் சற்று அதிகப் பாடுபட வேண்டியிருக்கும். வெளிநாட்டு முயற்சி கைகூடும். பொறுமையும் நிதானமும் இருந்தால் பிரச்னை வராது.

## மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

உடலுக்கு ஒவ்வாத உணவுகளை தவிர்ப்பது நல்லது. சில நன்மைகள் கடைசி நேரத்தில் கைநழுவிச் சென்றால் கவலை வேண்டாம். அது நன்மைக்கே. பலகாலம் வந்த பிரச்னை ஒன்று தீரும். வெளிநாட்டு முயற்சி செய்பவர்களுக்கு சாதகமான பதில் கிடைக்கும். எடுத்த வேலையை முழுமையாக முடிக்க முடியாமல் இருந்த நிலை மாறும். பிள்ளைகளிடம் எதிர்மறையாக பேச வேண்டாம். அனுபவசாலிகளின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். பொதுசேவைகளை நடத்துவீர்கள். கவனமாக இருந்தால் பிரச்னை இருக்காது.

## கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

தேவையற்ற பொருள் வாங்குவதால் வீண்செலவு ஏற்படலாம். பொறுப்பான துறையில் பணிபுரிபவர்கள் அதிக வேலைப்பளு காரணமாக சிரமத்திற்கு ஆளாவீர்கள். நினைத்ததை நடத்தி முடிக்க நெருங்கிய நண்பர் கைகொடுப்பார். வாய்ப்புகள் வருவதில் சிறு தாமதம் இருக்கும். விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் போது கவனம் தேவை. குடும்பத்தில் உண்டாகி நீங்கும். ஆரோக்கிய தொல்லை ஏற்பட்டு மறையும். சொந்தத் தொழில் செய்பவர்கள் அதிக கவனத்துடன் செயல்படுவது நல்லது.

## மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

எதையும் நிதானித்து செய்வதால் நன்மை அடைய முடியும். நல்ல நோக்கத்துடன் நீங்கள் எடுக்கும் முடிவுகள் கூட மற்றவர்களால் விமர்சிக்கப்படலாம். கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தை திருப்பித் தருவீர்கள். . பழைய பிரச்னைகள் ஒரு முடிவுக்கு வந்து மனதில் நிம்மதி ஏற்படும். வியக்க வைக்கும் செய்திகள் வரும். சொற்களைக் கையாளுவதில் மிகுந்த கவனம் தேவை. தாயாருக்கு நன்மை ஒன்று நிகழும். வாகனம், வீடு வாங்குவதில் முன்னேற்றமான காலம். வருமானமும் வரும். தடை தாமதங்கள் இருக்கலாம்.

# உணர்வுப் பகிர்வு

பகிர்வு -9

*நுண்ணறிவு இன்மையே சமூக வீழ்ச்சிக்குக் காரணம் என்கிறார் ஒரு பொது நலன் விரும்பி. "நுண்ணுணர்வு இல்லாமை ஏனை எவை இருப்பினும் இல்லாமையையே தரும்" - என்பது ஒரு முதுமொழி.*

*நுண்ணுணர்வு இன்மை வறுமை, அஃது உடைமை*
*பண்ணப் பணைத்த பெருஞ்செல்வம் - எண்ணுங்கால்*
*பெண்அவாய் ஆண்இழந்த பேடி அணியாளோ,*
*கண்அவாத் தக்க கலம். - நாலடியார்.*

*இதன் பொருள் - ஒருவன் எண்ணுங்கால் அதாவது ஆராயுமிடத்து, நுண் உணர்வு இன்மை வறுமை - ஒருவனுக்கு நுட்ப அறிவில்லாமையே வறுமையாவது; அஃது உடைமை பண்ணப் பணைத்த பெருஞ் செல்வம் -அந் நுட்ப அறிவினை உடையவனாய் இருத்தலே அவனுக்கு மிகப் பெருகிய பெருஞ் செல்வமாகும் பெண் அவாய் ஆண் இழந்த பேடி அணியாளோ கண் அவாத் தக்க கலம் .... மற்றுப் பெண்ணியல்பு மிகுந்து, ஆணியல்பு நீங்கிய பேடியும் கண்கள் விரும்பத்தக்க அழகிய அணிகலன்களை அணிந்து கொள்ளுதல் உண்ணு அன்றோ!*

*தொடக்கத்தில் குறிப்பிட்டதற்கிணங்க சமூக முன்னேற்றத்துக்காக உருவாக்கப்பட்ட அனைத்துச் செயற்பாடுகளிலும் நுண்ணறிவு மிக்கவர்கள், நுண்ணறிவோடு செயற்படுபவர்கள் குறைந்து காணப்படுவதே சமூக வீழ்ச்சிக்குக் காரணம் எனச் சொல்லப்பட்டதிலிருந்து நுண்ணறிவின் அவசியத்தை நாம் உணர்ந்து கொள்ளலாம்.*

*மக்கள் சேவை என்ற விடயம் மென்மையான அறிவின்பால் பட்டது. அதிலே காணப்படும் நடவடிக்கைகள் அனைத்திலும் எடுக்கப் படுகின்ற முடிவுகள் எல்லாம் தர்மத்தின் வழி வந்தவைகளாக இருப்பதே சாலச்சிறந்தது. அதுவே தெய்வ சக்தி மிக்கமதாகவும்* (Divine Energy), *இயற்கையோடு இணைந்து போகக் கூடிய இயல்பு மிக்கதாகவும் இருக்கும் என்பது ஒரு இயற்கை விதி என்று சொல்லப்பட்டிருக்கிறது.*

*பிரபஞ்ச விதிக்கமைய அதன் கோட்பாட்டோடு ஒன்றிப் போகாத எந்த முயற்சியும் விசேட பலனைத் தராது. அது வெறுமனே ஒரு செயற்பாடாக மட்டுமே இருக்கும். நுண்ணறிவின்பால் ஒழுங்கமைக்கப்படும் எல்லாக் காரியங்களும் ஒரு தெய்வ சங்கற்பத்தோடு நடைபெறுவதாகக் கணிக்கப்படும். அவைகளே பிரபஞ்ச சக்திக்குட்பட்டதாகவும்., பிரபஞ்சக் கோட்பாட்டோடு இணைந்து செயற்படுவதாகவும் சொல்லப்படுகிறது.*

*பொதுக் காரியங்கள் அனைத்தும் இந்த விதிக்குட்பட்டதாக இருப்பினும் விசேடமாக, உலகத்தை வழி நடத்துகின்ற இறை சக்திக்குட்பட்ட சமய காரியங்கள் அனைத்திலும் நுண்ணறிவு முதன்மை பெறவேண்டும் என்றது மரபுவழி பேணப்பட்டு வரும் ஒரு சமூக ஒழுங்கு. தற்போது காணப்படும் சமூகச் செயற்பாடுகளில் அதுவும் நுண்ணறிவன்பால் செயற்படுத்தப்படும் மக்கள் சார்பு சமூக நடவடிக்கைகளில் குறிப்பாக ஆலயச் செயற்பாடுகளில் , அந்தச் சமூக ஒழுங்கு பேணப்படுவதாக இல்லை என்ற குற்றச்சாட்டைப் பலர் முன்வைக்கிறார்கள்.*

*புனருத்தாரணம் என்ற போர்வையில் மரபு வழி வந்த அமைப்புகளைச்சிதைத்து விடுகிறார்கள். குறிப்பாக மத வழிபாட்டுத்தலங்களில் இவ்வாறான செயற்பாடுகள் அதிகளவில் அவதானிக்கப்பட்டிருக்கிறது. அபிவிருத்தி என்ற அடிப்படையில் சமூக முன்னேற்றத்தைத் தடுக்கும் அவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுக்கும் அனைத்து சீவராசிகளுக்கும் அறிவுறுத்துவதற்காக... "பொதுச் சொத்தில் கை வைத்தால்" என்ற ஒரு முகநூல் பகிர்வு...*

*பொதுச் சொத்தில் கை வைத்தால்...*

*அயோத்தியில், இராமர் ஆட்சி நடந்து கொண்டிருந்த போது, மக்கள் யாராவது குறைகளைச் சொல்ல வருகிறார்களா? என இராமர் காவலர்களிடம் அக்கறையுடன் கேட்பது வழக்கம். "இல்லை" என்றே அவர்கள் பதிலளிப்பர்.*

*ஒருநாள் ஒரு நாய் இரத்தக்காயத்துடன் ஓடி வந்து இராமனைப் பார்க்க வேண்டும் என்று மன்றாடியது. நாய் வந்து நிற்கிறது என்ற விடயம் இராமருக்குத் தெரிவிக்கப்பட்டது. நாயை அவைக்குள் அனுமதிக்கச் சொன்னார் இராமர்.*

*இராம இராஜ்யத்தில் எல்லா உயிர்களும் சமமே. இராமா! உன் ஆட்சியில் எனக்கு ஏற்பட்ட அவலத்தைப் பார்த்தாயா! - என்று கூவி அழுதது நாய்.*

*என்ன நடந்தது? என்று இராமர் வினவ, "சாப்பிட்டுக் கொண்டிருந்த என்னை ஒரு சந்நியாசி காரணமே இல்லாமல் கல்லால் அடித்து விட்டார்" என்றது நாய்.*

*சன்னியாசி இழுத்து வரப்பட்டார். ஏன் நாயை அடித்தீர்? என இராமர் வினவினார்.*

*அதுவா இராமா! நான் பிச்சை கிடைத்தால் மட்டுமே சாப்பிடும் பழக்கமுள்ளவன். இன்று பிச்சை கிடைக்கவில்லை. நான் பட்டினி கிடக்கிறேன். இந்த நாய், என் முன்னால் தனக்கு கிடைத்ததைக் கொண்டு வந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தது. அந்த நாய்க்குக் கிடைத்தது எனக்கு கிடைக்கவில்லையே என்ற மன உளைச்சலில் அடித்துவிட்டேன். என்றார் சந்நியாசி*

*கொடியவனே! வாயில்லா ஜீவனை வதைத்திருக்கிறாயே! உனக்கு மரணதண்டனைதான் தரவேண்டும்என்றார் இராமர்.*

*அப்போது "இராமா! மரணதண்டனை போதாது. அதை விடக் கொடிய ஒரு தண்டனையை அவருக்குக் கொடுக்க வேண்டும்." - என்றது நாய்.*

*இராமர் ஆச்சரியப்பட்டார். மரணத்தை விடக் கொடியது எது? என்று கேட்டார்.*

*நான் சென்ற பிறவியில் ஒரு பொது நிறுவனத்தின் அறங்காவலராக இருந்தேன். அங்கே அறத்தைக் காக்கத் தவறிவிட்டேன். அதனால் இப்போது நாயாகப் பிறந்து, குப்பையைக் கிளறிக் கொண்டு வதைபடுகிறேன். எனவே இவரையும் ஒரு பொது நிறுவனத்தில் அறங்காவலராக நியமித்து விடுங்கள். நிச்சயம் இவர் அங்கே அறத்தைப் பேணமாட்டார். அது போதும் அடுத்த பிறவியில் இவர்????*

**- கணபதி சர்வானந்தா**

# பதுளை இளைஞர் கொலை; சந்தேகநபர்கள் ஐவர் கைது

கொழும்பு, டிசெ. 26

பதுளை-ஒலியமனடிய பிரதேசத்தில் தாக்குதலுக்கு இலக்காகி பலத்த காயங்களுக்கு உள்ளான நபரொருவர் பதுளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் 25 வயதுடைய இளைஞர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குடும்பத் தகராறு காரணமாக இந்த கொலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (அ-கே)

# கடனுதவியில் மசகு எண்ணெய் வழங்க சிங்கப்பூர் இணக்கம்

கொழும்பு, டிசெ. 26,

கடனுதவி அடிப்படையில் இலங்கைக்கு மசகு எண்ணெயை வழங்குவதற்கு, சிங்கப்பூர் அரசங்கம் இணக்கம் தெரிவித்துள்ளதாக, இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் தலைவர் சுமித் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

இதற்கமைவாக சிங்கப்பூரில் இருந்து 180 நாட்களுக்குள் கடனை செலுத்துவது என்ற ஒப்பந்தத்துக்கு அமைவாக மசகு எண்ணெய் பெறப்படவுள்ளது.

சிங்கப்பூரிலிருந்து கடனாக பெற்றுக்கொள்ளவுள்ள மசகு எண்ணெய், எதிர்வரும் ஜனவரி மாதத்தின் நடுப்பகுதியில் கிடைக்கப்பெறவுள்ளது.

எனவே, சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் தொடர்ந்து செயற்படுவதற்கான வாய்ப்பைப் பெற்றுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(கே)

# நுவரெலியாவில் கடும் பனிப்பொழிவு!

கொழும்பு, டிசெ. 26

நுவரெலியா மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் நேற்றுக் காலை கடும் பனிப்பொழிவு ஏற்பட்டது.

நுவரெலியாவில் கிட்டத்தட்ட ஒவ்வொரு வருடமும் கிறிஸ்துமஸ் காலத்தில் பூக்கள் பூத்துக் காணப்படுவதோடு, பனிப்பொழிவும் அதிகமாகவே காணப்படும். மேலும், நுவரெலியா நகரம் மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளிலும் இவ்வாறான நிலைமையே காணப்படும்.

நுவரெலியாவில் கடந்த சில நாட்களாக கடும் குளிர் நிலவி வருவதாகவும், வெப்பநிலை வெகுவாக குறைந்துள்ளதாகவும் பிரதேசவாசிகள் தெரிவித்தனர்.

நுவரெலியாவில் பெய்யும் பனிப்பொழிவு காரணமாக மலையக மரக்கறிச் செய்கை மற்றும் தேயிலை பயிர்ச் செய்கை பெரிதும் பாதிக்கப்படும் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

# பணிப்புறக்கணிப்பை தற்காலிகமாக நிறுத்த மருத்துவ அதிகாரிகள் முடிவு

கொழும்பு, டிசெ. 26

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் பணிப்புறக்கணிப்பை தற்காலிகமாக இடைநிறுத்த தீர்மானித்துள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் உள்ள அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற மத்திய குழுக் கூட்டத்தின் போதே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

சட்டபூர்வ மருத்துவ இடமாறுதல் வாரியத்தின் அனுமதியின்றி சிறப்பு மருத்துவர்களின் நியமனப் பட்டியலைத் தொகுத்தல், 2022ஆம் ஆண்டுக்கான இடமாறுதல் பட்டியலை வெளியிடாமை, வர்த்தமானி அறிவித்தலை வெளியிடாமை உள்ளிட்ட 7 கோரிக்கைகளை முன்வைத்து அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ)





# வவுனியாவில் வெடித்து சிதறிய எரிவாயு அடுப்பு

வவுனியா, டிசெ. 26

வவுனியா - காத்தார்சின்னக்குளம் பகுதியில் உள்ள வீடொன்றில் சமையல் எரிவாயு கொள்கலனுடன் தொடர்புடைய வெடிப்புச் சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

குறித்த வீட்டிலுள்ள பெண் ஒருவர், நேற்றுமுன்தினம் இரவு சமைத்துக் கொண்டிருந்த போது, சமையல் எரிவாயு அடுப்பு வெடித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து குறித்த பெண், எரிவாயு கொள்கலனை பாதுகாப்பாக அகற்றியுள்ளதுடன், சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு அறிவித்துள்ளார். பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# பொருள்களின் விலையேற்றத்தை கண்டித்து யாழில் தீபந்தப் பேரணி

கொழும்பு, டிசெ. 26

நாட்டில் அதிகரித்துள்ள பொருட்களின் விலையேற்றத்தைக் கண்டித்து யாழ்ப்பாணத்தில் தீப்பந்த போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

அதன்படி, நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நள்ளிரவு மல்லாகம் பழம் பிள்ளையார் ஆலயத்தில் ஆரம்பித்த தீபந்தப் போராட்டம் காங்கேசன்துறை வீதியின் ஊடாக சென்று சுன்னாகம் சந்தியில் நிறைவடைந்தது.

ஐக்கிய மக்கள் சக்தியின் காங்கேசன்துறை தொகுதி அமைப்பாளர் வன்னியசிங்கம் பிரபாகரனின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மேலும் குறித்த தீ பந்தப் போராட்டத்தில் விவசாயிகளும் கலந்துகொண்டு தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# பாலியல் குற்றச்சாட்டு: பொலிஸ் அதிகாரி கைது

பாலியல் குற்றச்சாட்டின் பேரில், மாத்தறை கந்தரா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி நேற்று முன்தினம் இரவு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பெண் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரை பாலியல் ரீதியாக துன்புறுத்திய குற்றச்சாட்டின் பேரில் இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கு அமைய நேற்று முன்தினம் இரவு மாத்தறை பிரதேச சிறுவர் மற்றும் பெண்கள் பணியகத்தினால் அவர், கைது செய்யப்பட்டதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இது தொடர்பில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(அ-கே)

# மார்கழி பெருவிழா ஆரம்பம்

யாழ்ப்பாணம்,டிசெ. 26

தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடமும் சைவ மாணவர் சபையும் இணைந்து நடத்திய மார்கழிப் பெருவிழா இம்முறை யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

நேற்றுக் காலை 9 மணியளவில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் சபாலிங்கம் அரங்கில் அப்பர் சுவாமிகள் அமர்வு முதலாவதாக ஆரம்பமானது.

முதலாம் அமர்வில் தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தின் நிறுவுநர் தென்னவன் பார்த்தீபன் மற்றும் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் ஸ்ரீசற்குணராஜாவின் உரையும் நவரத்தினம் பரந்தாமன் குழுவினரின் திருமுறை விண்ணப்பமும் மதுரையைச் சேர்ந்த சொ.சொ.மீ சுந்தரம் ஐயா அவர்களின் தொண்டு நெறி எனும் தலைப்பிலான சிறப்புரையும் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் சிவகுரு ஆதீன முதல்வர் வேலன் சுவாமிகள்இ பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன்இ மறவன்புலவு சச்சிதானந்தன்இ ஆன்மீக தலைவர்கள் மத பெரியவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.


மார்கழிப் பெருவிழா நேற்றும் இன்றும் நான்கு அமர்வுகளாக இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)









# தெற்கில் வலுக்கின்றது ஜே.வி.பிக்கான மக்கள் ஆதரவு!

## வெளிநாட்டு தூதரகங்களும் கழுகுப்பார்வை



கொழும்பு, டிசெ. 26

ஜே.வி.பிக்கான ஆதரவு அலை மக்கள் மத்தியில் அதிகரித்துவரும் நிலையில், கொழும்பிலுள்ள வெளிநாட்டுத் தூதுவர்களும், இராஜதந்திரிகளும் அது தொடர்பில் கழுகுப்பார்வையைச் செலுத்தியுள்ளனர்.

இந்நிலையில் முக்கியமான நாடுகளின் தூதுவர்கள் சிலர் விரைவில் ஜே.வி.பியையும் அதில் அங்கம் வகிக்கும் தேசிய மக்கள் சக்தியை சந்திக்கவுள்ளனர் எனவும், அடுத்த வருட ஆரம்பத்தில் சந்திப்பு நடைபெறும் எனவும் நம்பகரமான அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

வழமையாக கியூபா நாட்டுத் தூதுவர் உட்பட மேலும் சில தூதுவர்கள் ஜே.வி.பியுடன் சந்திப்புகளை நடத்துவது வழமை. ஆனால், இம்முறை பலம் பொருந்தி - இலங்கை அரசியலில் செல்வாக்கு செலுத்தும் நாடுகளின் தூதுவர்களை ஜே.வி.பியினரை சந்திப்பது தான் முக்கியத்துவம் மிக்கதாகக் கருதப்படுகின்றது.

இதற்கிடையில் பிரதான இரு பாரம்பரியக் கட்சிகளுள் ஒன்றான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஜே.வி.பியுடன் சங்கமிப்பதற்கு பச்சைக்கொடி காட்டியுள்ளமையும் தெற்கு அரசியலில் திருப்புமுனையாகப் பார்க்கப்படுகின்றது.

(இ)

# கடும் பொருளாதார நெருக்கடியால் தங்க நகைகளை விற்கும் மக்கள்!



கொழும்பு, டிச. 26

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக அமுல்படுத்தப்பட்ட பொது முடக்கம், பயணக் கட்டுப்பாடு, வேலையிழப்பு, வியாபாரம் பாதிப்பு மற்றும் தற்போதைய அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம் உள்ளிட்ட காரணங்களால் மக்களின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், மக்கள் அத்தியாவசியப் பொருட்களை கொள்வனவு செய்வதற்காகத் தம்வசம் வைத்திருந்த தங்க நகைகளை அடகு வைத்தல் மற்றும் விற்பனை செய்யும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. நாடு முழுவதிலும் இந்நிலைமை காணப்படுகின்றது.

சிலர் வங்கிகளிலும், மேலும் சிலர் நகை அடகு பிடிக்கும் நிலையங்களிலும் அடகு வைத்துப் பணம் பெறுகின்றனர். மேலும் சிலர் நகைகளை விற்பனை செய்துவிடும் நிலைமையும் காணப்படுகின்றது.

மக்கள் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதையே இது எடுத்துக்காட்டுகின்றது எனவும், அடுத்தாண்டாகும்போது மேலும் நெருக்கடி ஏற்படும் எனவும் நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

கொரோனா பரவல் முதல் இற்றைவரை சுமார் 600 கிலோ வரையான தங்கம் விற்பனை செய்யப்பட்டுள்ளது என உள்நாட்டு சந்தைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அதேபோல் புதிதாக தங்க நகைகள் வாங்குவதும் குறைவடைந்துள்ளது. பலர் தங்க முலாம் பூசப்பட்ட ஆபரணங்களைப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர்.

(இ)

# 2022 வசந்த காலம் ஆரம்பம் உச்சமடையும் பொருளாதாரம்

## அரசு அதீத நம்பிக்கை



கொழும்பு, டிசெ. 26

"2022ஆம் ஆண்டு முதல் மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது. அடுத்த ஆண்டு முதல் வசந்த காலம் ஆரம்பமாகப் போகின்றது."

- இவ்வாறு காணி அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்தார்.

எதிர்வரும் ஆண்டு ஜனவரி முதல் நாட்டில் மாபெரும் பயிரிடும் எழுச்சி ஆரம்பமாகும் எனவும் அவர் கூறினார்.

நுவரெலியா மாவட்ட செயலகத்தில் நேற்றுமுன்தினம் காணி உறுதிப் பத்திரங்களை வழங்கும் நிகழ்வில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"தற்போது பெரும்பாலானோர் ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட அரசு 'பெயில்' எனக் கூறுகின்றனர். அவர்கள் கூறுவது போல் எவரும் பெயில் ஆகவில்லை. பெயில் ஆகுவதாக இருந்திருந்தால் கொரோனாக் காலப்பகுதியில் அது நடந்திருக்க வேண்டும்.

கொரோனாவால் சில குறைபாடுகள் ஏற்பட்டுள்ளன. ஆனால், கடந்த நல்லாட்சிக் காலத்தில் கொரோனா போன்ற தொற்றுகள் ஏற்படவில்லை. எனினும், அவர்களால் எதையும் செய்ய முடியவில்லை.

சஹ்ரானின் குண்டுத் தாக்குதல் காரணமாகவே நன்றாக இருந்த நாடு சீர்குலைந்தது. இன்று எந்தவொரு அபிவிருத்தி வேலைத்திட்டத்திலும் தொய்வு ஏற்படவில்லை. சஹ்ரானின் குண்டுத் தாக்குதல் காரணமாக 4.5 பில்லியன் இல்லாமல் போனது. கொரோனா மிகுதியை இல்லாமல் செய்துள்ளது.

இன்று நாட்டில் டொலருக்கான பற்றாக்குறை நிலவுகின்றது. அதன் காரணமாகவே இந்தக் கஷ்டம் ஏற்பட்டுள்ளது. எது எப்படியோ தற்போதைய சூழ்நிலைக்கு முகம் கொடுப்பது அவசியமானது.

எப்போதும் வறட்சி இருக்கப்போவதில்லை வசந்த காலம் ஒன்று வரும். 2022ஆம் ஆண்டு முதல் வசந்த காலம் ஆரம்பமாகும். 2022 முதல் எதிர்வரும் மூன்று வருடங்களுக்குள் எம்மால் உயரமான இடத்துக்குச் செல்ல முடியும்" - என்றார்.

(இ)

# சு.க. வெளியேறினாலும் எமக்குப் பாதிப்பு இல்லை

## மொட்டுக் கட்சி கூறுகின்றது

கொழும்பு, டிசெ. 26

"அரச பங்காளிக் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எந்தத் தரப்புடன் இணைந்தாலும் அது ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் வெற்றிக்குத் தடையாக இருக்காது."

- இவ்வாறு இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்தார்.

ஜே.வி.பியுடன் இணைந்து செயற்பட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தயாராகவே உள்ளது என அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ள நிலையிலேயே, மொட்டு கட்சி தரப்பிலிருந்து இந்தப் பதிலடி வெளியாகியுள்ளது.

இது தொடர்பில் இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்க மேலும் கூறியதாவது:-

"சுபீட்சமான எதிர்காலக் கொள்கையைச் செயற்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது என்பதை ஏற்கின்றோம்.

கடந்த இரண்டு வருடங்களாகக் கொரோனா வைரஸ் தாக்கத்தைக் கட்டுப்படுத்தவும், அதனால் ஏற்படும் சவால்களுக்கு முகங்கொடுக்கவுமே கூடுதல் கவனம் செலுத்தப்பட்டது.

இது புரியாமல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி விமர்சனங்களை முன்வைத்துக்கொண்டிருக்கின்றது.

அவர்கள் எவருடன் இணைந்தாலும் அது எமக்கு தாக்கத்தை ஏற்படுத்தாது" - என்றார்.

(இ)

# பதுளையில் இளைஞர் கொடூரமாகக் கொலை

## சந்தேகத்தில் ஐவர் கைது

கொழும்பு, டிச. 26

பதுளையில் இளைஞர் ஒருவர் கொடூரமாகத் தாக்கப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்று பதுளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பதுளை, கருணாபுர பிரதேசத்தைச் சேர்ந்த 25 வயது நபரே இவ்வாறு மரணமடைந்துள்ளார்.

பித்தளையிலான பூந்தொட்டி மற்றும் நாற்காலியால் குறித்த இளைஞர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது எனத் தெரியவந்துள்ளது.

குடும்பச் சண்டையே இந்தப் படுகொலைக்குக் காரணம் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய ஐவரைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

பிரேத பரிசோதனைக்காக பதுளை வைத்தியசாலையின் பிரேத அறையில் சடலம் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பதுளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(இ)

# சலுகைகளுக்காக படம் காட்டும் சு.க.

## சாடுகின்றார் எஸ்.பி.



கொழும்பு, டிசெ. 26

"அரசிடமிருந்து மேலதிக சலுகைகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்கிலேயே 'புதிய கூட்டணி' கதையை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கட்டவிழ்த்துவிட்டுள்ளது. இதனை நகைச் சுவை கதையாகவே நான் பார்க்கின்றேன்."

- இவ்வாறு ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் ஊடகவியலாளர் மாநாடு நேற்றுமுன்தினம் அக்கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்றது.

இதன்போது, ஜே.வி.பியுடன் இணைவது தொடர் பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் வெளியிட்டுள்ள அறிவிப்பு தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே எஸ்.பி. திஸாநாயக்க மேற்கண்டவாறு கூறினார்.


அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"தயாசிறியின் கதைக்குப் பதிலளித்து அவரின் மனதை நோகடிக்க விரும்பவில்லை. சிரிப்பு மட்டுமே வருகின்றது. கூட்டணி அரசு இருக்கும்போது, அதனிடமிருந்து எதையாவது பெற்றுக்கொள்ளப் பங்காளிகள் இவ்வாறு செயல்படுவது வழமை. அது தொடர்பில் அலட்டிக் கொள்ளத் தேவையில்லை" - என்றார்.

(இ)




# நீண்டகால ‘தமிழர்கள் வினா’: நிரந்தர தீர்வுக்கு ஒரு வழி



- பகவான் சிங் -
தமிழகத்தின்
சிரேஷ்ட பத்திரிகையாளர்

## மீண்டும் சேர்ந்து தேரை இழுப்போம்!

தமிழரின் எதிர்காலத்தைப் பாதுகாப்பதற்காக ஓர் ஆவணம் தயாராகிவிட்டது. பதினோரு கட்சிகளின் தலைவர்களுடைய கையொப்பத்தோடு புதனன்று கொழும்பில் உள்ள இந்திய தூதரிடம் இந்த ஆவணம் சமர்ப்பிக்கப்படுகிறது. இச் செய்தியைவிட மேலான தகவல்களும் உங்களுக்கெல்லாம் முன்கூட்டியே தெரிந்திருக்கும். இங்கு இந்தியாவிலும் தமிழகத்திலும், இதுபற்றி மிக்க மகிழ்ச்சி அடைந்திருக்கிறார்கள். அதற்கு முக்கிய காரணம், ஈழத்தமிழர்களின் ஒற்றுமை. பெரும்பாலானோர் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட ஒப்புக்கொண்டிருக்கின்றனர் என்று என்னிடம் ஒரு மூத்த தமிழ் தேசிய கூட்டமைப்பு தலைவர் வெள்ளியன்று தெரிவித்தார்.

“ஆனால் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஒத்துழைக்க மறுத்துவிட்டார். அவர் கையெழுத்து போட மாட்டார். ஒன்றிய ஆட்சிக்குக் (Federal) கீழ் வரும் எந்த தீர்வையும் ஏற்க மாட்டேன் என்று கூறுகிறார்” என்று அவர் தெரிவித்தார். கவலையுடன் பேசிய அவர், “தமிழர்களுக்கு அவசியமான, நெடுங்காலமாகத் தாமதமாகியுள்ள அரசியல் உரிமையை சிங்கள அரசு தராமல் இருப்பதற்கு நம்முடைய பல தோழர்களும், அண்ணன்களும், தம்பிகளும் தொடர்ந்து நேரடியாகவும் மறைமுகமாகவும் உதவி செய்வார்கள் என்று நினைக்கிறேன்” என்றார்.

கஜேந்திரகுமார் ஒரு மதிப்புமிக்க பெரிய அரசியல் குடும்பத்தைச் சேர்ந்தவர் என்று நம் அனைவருக்கும் தெரியும். தனது கிரீடத்தில், கல்விப்புலத்திலும் அரசியலிலும் தன்னுடைய சொந்த செயல்பாடுகள்மூலம் பல இரத்தினங்களைப் பதித்திருக்கிறார் என்பது நமக்குத் தெரியும். ஆகவே, இந்தப் பெரிய குழுவிலிருந்து விலகி, தனது சொந்த வழியைப் பின்பற்றும் அவரது முடிவைப் பற்றி நான் எதுவும் கூற விரும்பவில்லை.

“ஏன் 13ஆவது திருத்தம்? ஏன் ‘ப்ளஸ் ப்ளஸ் ப்ளஸ்’ இல்லை?” என்று, சுமந்திரனும் பிற தலைவர்களும் கேள்வி எழுப்புகிறார்கள். அது சரிதான். நில நிர்வாகம், பிராந்தியங்களுக்குள் காவல்துறைக் கட்டுப்பாடு போன்ற முக்கிய அம்சங்களில் பதிமூன்றாவது சட்டத் திருத்தத்தில் சில போதாமைகள் இருக்கின்றன. ஆனால், “13ஆவது சட்டத்திருத்தம் போதாது என்று கூறிய ஜனாதிபதி, அதைவிட சிறந்த ஒன்றை நமக்கு வழங்குவதாக உறுதியளித்துள்ளார். அப்படி இருக்க, நாம் ஏன் 13ஆவது சட்டத்திருத்தத்தைக் கோரவேண்டும்?” என்று சுமந்திரன் கேள்வி எழுப்புவது சரியல்ல. புத்தக் குழுக்களும், எல்லா செல்வாக்குகளும் பெற்ற பிக்குகளோடு தொடர்புடைய அரசியல் கூட்டமைப்புகளும் சிறுபான்மையினருக்கு குறைந்தபட்ச சலுகை வழங்கினாலே கடுமையான எதிர்ப்பு தெரிவித்துவரும் சூழலில், 13ஆவது திருத்தத்திற்கும் மேலான, 13+++ கொடுக்கப்படும் என்று எப்படி எதிர்பார்க்கமுடியும்?

1987இன் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் விளைவான 13ஆவது திருத்தத்தை முதலில் பெற்றுவிட்டு, இந்தியப் பெருங்கடலில் ஆதிக்கம் செலுத்த முயற்சி செய்யும் சீனாவுக்கு எதிராகக் கைகோத்திருக்கும் இந்தியா மற்றும் அதன் ஆதரவு நாடுகளான அமெரிக்கா, பெரிய பிரித்தானியா மற்றும் பிற நாடுகளின் துணையோடு, 13ஆவது திருத்தத்தை மேம்படுத்துமாறு கொழும்புக்கு அழுத்தம் கொடுக்கலாம் என்ற யுத்தியை நிராகரிப்பது, அரசியல் ரீதியாகப் பலன் தராது என்று நினைக்கிறேன். சிறுபான்மையினரான தமிழர்கள் மற்றும் இஸ்லாமியர்களுக்குக் கூடுதல் அரசியல் சுயேச்சை, சரிசமமான வாய்ப்புகள், நிலம் மற்றும் காவல்துறை நிர்வாகம், பாதுகாப்பான வாழ்க்கைக்கான உறுதிமொழி ஆகியவை தருமாறு 13ஆவது திருத்தம் மேம்படுத்தப்படவேண்டும்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு சுமந்திரன் அளித்த ஒரு பேட்டியில், 2015ஆம் ஆண்டின் தேசிய ஒற்றுமைக் கூட்டணிக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு தந்திருப்பது பற்றியும், புதிய அரசியலமைப்புச் சட்டத்திற்காக வாக்களித்த பல கட்சிகளும் இப்போது 13ஆவது சட்டத்திருத்தத்தைக் கொண்டுவருவதற்கு ஆதரவு தருவது பற்றியும் கூறியிருந்தார். முதலில், 13ஆவது சட்டத்திருத்தத்தில் அர்த்தபூர்வமாக எதுவும் இல்லை என்று தமிழர்கள் அதை நிராகரித்தனர். பிறகு, இரண்டு சிங்கள ஆளுங்கட்சிகளைக்கொண்ட இலங்கையில் தேர்தல் வெற்றிக்காக சிறுபான்மையினரின் வாக்குகள் தேவைப்பட்டன என்பதால், சிங்களத் தலைமை 13ஆவது திருத்தத்திற்கும் மேலான ஒன்றைக் கொண்டுவருவதாக உறுதியளித்தது. தமிழர்களுக்கு எந்த அதிகாரத்தைக் கொடுத்தாலும் அது தனி ஈழத்துக்கு வழி வகுத்துவிடும் என்று சிங்களக் குரல்கள் ஓங்கி ஒலித்ததால், தெற்கின் இந்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை. 1994இல் ஒன்றிய அமைப்பு (Federal Structure) தருவதாகக்கூறி, 60வீத வாக்குகள் பெற்று, சந்திரிகா ஆட்சி அமைத்தார். 2005இல் ரணில் விக்ரமசிங்கவும் இது போன்ற ஓர் உறுதியை அளித்தார். தனியான ஈழத்தைப் போரால் வெல்லமுடியும் என்ற தங்களது கொள்கையில் உறுதியாக இருந்த விடுதலைப்புலிகள், இந்த இரு சூழல்களிலும் ஒன்றிய அமைப்பை ஏற்கவில்லை.

இப்போது போர் முடிந்துவிட்டது. வேலுப்பிள்ளை பிரபாகரனும் இல்லை. இந்தியா மற்றும் அதன் ஆதரவு நாடுகளிடம் பேசி, இலங்கைக்கு ஓர் ஒன்றிய அமைப்பு முறையே சரியானது என்று சம்மதிக்க வைப்பது சிரம மாக இருக்கும். மூர்க்கமான அண்டை நாடுகளிலிருந்து நிதி உதவி பெறும் பிரிவினைவாத அமைப்புகள் ஏற் கனவே இந்தியாவுக்குள் கடும் பிரச்னையை ஏற்படுத்தி வருகின்றன. பிராந்தியங்களுக்கான அர்த்தபூர்வமான அதிகாரங்களைப் பிரித்துக் கொடுக்கும் சமூக பொருளாதார அமைப்பே நடைமுறையில் சாத்தியமுள்ள ஒரு தீர்வாக இருக்கும். சிங்கள ஆதிக்கத்தின் இரும்புக் கதவுகளுக்குள் நுழைந்து, இந்தத் தீர்வை மட்டுமே நாம் பெற முடியும். சீனாவின் கடன் பொறியிலிருந்து இலங்கையை மீட்கக்கூடிய, கவர்ந்திழுக்கும் ஒரு பொருளாதார உதவி அமைப்பின்மூலம் ‘க்வாட்’ நாடுகள் முயற்சி செய்தால், இது நடக்கவும் வாய்ப்பு இருக்கிறது.

கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் மூலம் இந்தியாவுக்கு சமர்ப்பிக்கப்பட இருக்கிற இந்த ஆவணம், தமிழ்த் தலைவர்களின் கூட்டத்தில் முதலில் உருவாக்கப்பட்டபோது, ‘பதிமூன்றாம் சட்டத் திருத்தத்தை அமல்படுத்தக் கோருதல்’ என்றுதான் அதன் தலைப்பு இருந்ததாக எனது ஈழ நண்பர்கள் கூறுகிறார்கள். ஆனால், சுமந்திரனும் வேறு சிலரும் பதிமூன்றாம் திருத்தத்திற்கு முக்கியத்துவம் தரப்படுவது குறித்து எதிர்ப்பு தெரிவித்ததால், ‘தமிழ் பேசும் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதும், இந்திய இலங்கை ஒப்பந்தமும்’ என்று அது மாற்றப்பட்டது என்கிறார்கள். தலைவர்களுக்கிடையே சில கடுமையான விவாதங்கள் நடந்தாலும், இறுதியாக ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட்டது என்று TELO தலைவர் செல்வம் அடைக்கலநாதன் என்னிடம் கூறினார்.

செல்வம், சுமந்திரன், மாவை சேனாதிராஜா, சுரேன் குருசாமி (TELO), ஸ்ரீகாந்தா, SLMC தலைவர் ரவூப் ஹக்கீமின் பிரதிநிதி ஆகியோர் நீண்டநேரம் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு, இந்தியாவுக்கு சமர்பிக்கப்போகிற ஆவணத்தை ஒருமனதான தீர்மானமாக வடிவமைப்பதில் பெரும் உழைப்பைக் கொடுத்திருக்கின்றனர் என்று வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதில் அனைவரும் கையெழுத்திட்டு, புதன்கிழமை இந்திய தூதரிடம் ஒப்படைப்பார்கள். “அதன்பிறகு, பாரதப் பிரதமர் நரேந்திர மோடியுடன் ஒரு சந்திப்பு ஏற்படக்கூடும்” என்று என்னிடம் தெரிவித்தார் ஒரு மூத்த கூட்டமைப்புத் தலைவர்.

தமிழ்த் தலைவர்கள் காட்டிய இந்த ஒற்றுமை, இன்னும் ஆழமானதாகவும் வலுவாகவும் மாறும் என்று முழுமனதாக நம்புகிறேன். மாணவர்கள், பல்கலைக்கழக ஆசிரியர்கள், வழக்கறிஞர்கள், மருத்துவர்கள், கணக்காளர்கள் மற்றும் பிற துறைகளைச் சேர்ந்தவர்கள், குடும்பத் தலைவிகள், சமூக அமைப்புகள் என தமிழ்-இஸ்லாமிய சமூகத்தைச் சேர்ந்த பலரும் தங்களது அரசியல் தலைவர்கள் முன்னெடுக்கும் இதுபோன்ற விஷயங்களுக்கு ஆதரவு தந்து, சொந்த விருப்பு வெறுப்புகளுக்கு இடம் கொடுக்காமல் அவர்கள் செயல்படவும் ஊக்கமளிக்கவேண்டும். இறுதி இலக்கு ஒன்றுதான்: நீண்டகாலமாக அப்படியே இருக்கும் தமிழ்க் கேள்விக்கு ஒரு நிரந்தரத் தீர்வு.

எளிதில் ஏமாறக்கூடிய அப்பாவிகளான ஆபிரிக்கப் பழங்குடியினரிடமிருந்து ஆக்கிரமிப்பு செய்த பரந்த நிலப்பரப்புகளிலிருந்து கிடைக்கும் பல தனிமங்களை யும் விலையுயர்ந்த பொருட்களையும் சீனர்கள் தங்களது நாட்டுக்கு பத்திரமாகக் கப்பலில் கொண்டுசெல்வதற் குப் பாதுகாப்பான ஓர் அமைப்பாக, முத்துமாலையாக இந்தியப் பெருங்கடலில் இருக்கும் இலங்கைத் தீவு இருக்கிறது. அதற்காக சீனா இலங்கையை விழுங்கத் துடிக்கிறது, அந்த ஆபத்தை கவனமாகக் கையாளவேண்டும். நமது மாணவர்களுக்கு ‘லப்ரொப்’ மற்றும் புத்தகங்கள், மீனவர்களுக்கு வலைகள் மற்றும் கோவிட் முகக்கவசங்கள், நூலகங்களுக்குப் பரிசுகள் மற்றும் டிஜிட்டல்மயமாக்கல் உறுதிமொழிகளைக்கொண்டு, அவர்கள் யுவான் பொறி ஒன்றை உருவாக்க முயற்சி செய்கிறார்கள். அந்தப் பொறிக்குள் மாட்டிக்கொள்ளக் கூடாது. டிஜிட்டல் மயமாக நமது ஆவணங்கள் மாற்றப்பட்டால், அவற்றை எங்கோ இருந்துகொண்டு பிரதியெடுக்கவும் பயன்படுத்தவும் வாய்ப்பு இருக்கிறது, அந்த ஆபத்தையும் நினைத்துப் பார்க்கவேண்டும்.

பக்தியை உணர்த்த வேட்டியை உடுத்திக்கொண்டு, புரியாத அர்ச்சனையை நடத்திவிட்டு, தன் அரசின் காசைக் காரணத்தோடு உண்டியலில் காணிக்கை செலுத்தியதைக் கண்டு ரசித்து மயங்கிவிடாதீர்கள்.

இந்த ஆண்டு கொரோனாவில் நல்லூர் திருவிழா தேர் சிறிய விழாவாக உள்ளுக்குள்ளேயே அர்ச்சகர்களால் இழுக்கப்பட்டது. ஆனால், ஒவ்வோர் ஆண்டும் என் தமிழகத்திலிருந்தும் மற்ற நாடுகளிலிருந்தும் கந்தனின் பக்தர்கள் நூற்றுக் கணக்கானோர் வந்து, விழாவில் உங்களுடன் தேர் இழுக்கவில்லையா? பரவசத்துடன் ஓடிய அவர்களது கண்ணீர் உங்களது தோள்களை நனைக்கவில்லையா? அடுத்த ஆண்டு இதுபோல் கட்டுப்பாடுகள் இல்லாமல் கடவுளை வேண்டலாம் என்று பிரார்த்திப்போம், மீண்டும் சேர்ந்து தேரை இழுப்போம். அப்போது, நம்மில் சிலரின் வேட்டிகள் பழையதாக இருக்கலாம், கிழிந்தும் இருக்கலாம். ஆனால், நம் கண்ணீரின் ஆற்றில் மட்டும் பக்திப் பன்னீரின் மணம் எப்போதுமே இருக்கும்.

“தமிழகத்தில் பழனிக்கு அருகிலிருந்து தவில் கணேசன் ஒவ்வோர் ஆண்டும் நல்லூர் கோவில் விழாவுக்கு வருவார். கோவில் நாதஸ்வர இசைக் கலைஞர்களுடன் சேர்ந்து தவில் வாசிப்பார். இசைக்குழு மிகச்சிறப்பாகக் கோவிலை சுற்றிவரும். ஆறுமுகசாமி வாசலுக்குப் பொன்னான கூரை வேண்ட, கும்பாபிஷேகத்திற்கு சிதம்பர தீஷிதர்கள் வருகை தருவார்கள். இது நிச்சயமாக நீடிக்கும். என் நல்லை கந்தனின் அருள் நம்மை எல்லாம் எப்பொதுமே பாதுகாப்புடன் வைக்கும்” என்று யாழ். சகோதரி சாந்தி புஷ்பநாதன் நேற்று காலை தொலைபேசியில் என்னிடம் நம்பிக்கையாகப் பகிர்ந்துகொண்டார். இதுபோலவே, பல பேரின் நல்லெண்ணங்களும் சீனத்தூதர் பறக்கவிட்ட ட்ரோனைவிடப் பல மடங்கு உச்சத்தில்தான் பறந்து கொண்டு இருக்கின்றன. அந்த நம்பிக்கை வீண் போகாது.

காலம் மாறிவிட்டது, புரிந்துகொள்ளுங்கள். சீனாவின் ஆக்கிரமிப்பு சூழ்ச்சிகள் வல்லரசு நாடுகளை நம் பக்கம் திருப்பி இருக்கின்றன, அதை நாம் நம் நாட்டுக்கும், மக்களுக்கும் நல்லவிதமாக அமைத்துக்கொள்வது காலத்தின் கட்டாயம். ஐம்பதுகளில் சீனா எப்படி திபெத்தை ஆக்கிரமித்தது என்பதுபற்றி பல ஆவணங்களும் விளக்கக் கட்டுரைகளும் இணையத்தில் கொட்டிக் கிடக்கின்றன. ஆறு மற்றும் ஏழு வயதான மிகச்சிறிய திபெத்தியக் குழந்தைகளும்கூட, சீனப் பள்ளிகளில் வலுக்கட்டாயமாக சேர்க்கப்பட்டு, சீனாவின் மாண்டரின் மொழியில் அவர்களுக்குக் கம்யூனிசம் கற்றுத்தரப்படுகிறது. அவர்களது சொந்தமொழியும் கலாசாரமும் திட்டமிட்டு அழிக்கப்படுகிறது. அதுபற்றிய அச்சமூட்டும் படங்களும் கட்டுரைகளும் இணையத்தில் கிடைக்கின்றன. அவற்றைத் தேடிப் படியுங்கள். மற்றவர்கள் செய்த தவறுகளை நாம் செய்துவிடக்கூடாது என்றுதான் வரலாறு நமக்கு எச்சரிக்கவேண்டும். ஏற்கனவே யாழ்ப்பாணத்தில் உள்ள சில தொழிற்சாலைகளில் சீனப் பெயர்ப்பலகைகளைப் பார்த்து நீங்கள் வியந்திருக்கலாம்.

இந்தப் புத்தாண்டில் உங்களை ஆரோக்கியத்துடன் சந்தோஷமாய், செல்வங்களின் மழையில் வாழவைக்க இறைவனின் அருளை வேண்டி நான் பிரார்த்திக்கிறேன், மீண்டும் சந்திப்போம். வணக்கம். ●

# சீனா - ஈழத் தமிழர் உறவை எவ்வாறு கையாள்வது?

பேராசிரியர்
கே. ரீ. கணேசலிங்கம்

ஈழத்தமிழரின் அரசியல் பரப்பில் சீனாவின் இலங்கைக்கான தூதுவர் கியூ சென் ஹொங்கின் வடக்கு விஜயம் அதிக முக்கியத்துவத்தை தந்தமையை கடந்த வாரம் இப்பகுதியில் குறிப்பிட்டோம். இதைத் தொடர்ந்து ஈழத்தமிழர் - சீன உறவு பற்றிய உரையாடல் பொது வெளி யிலும் தமிழ் அரசியல் கட்சிகள் மத்தியி லும் ஏற்பட்டுள்ளது. தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப் பினர்கள் பலர் சீனாவை எதிர்க்க முனை கின்ற போக்கையும் அதன் தலைமை தந்திரோபாயமாக சீனா விடயத்தை கையாளும் உரையாடலை வெளியிட் டுள்ளமையையும் அவதானிக்க முடிகி றது. இத்தகைய சூழலில் சீனாவை தமிழ் தரப்பு எப்படி கையாளுவது சாதகமாக அமையும் என்பதை தேடுவதே இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சீனத் தூதுவரின் வடக்கு விஜயத்தைப் பற்றி குறிப்பிடும்போது இலங்கையில் வாழ்கின்ற தமிழ் மக்களும் சமத்துவத்தின் அடிப்படையிலும், நீதியின் அடிப்படையிலும், நியாயத்தின் அடிப்படையில் வாழவேண்டும் என்பது குறித்து சீனத் தரப்பினர் எதனையும் கூறவில்லை. வடக்கு மாகாணத்துக்குப் பயணம் செய்த சீனத் தூதுவரும் அவ்வாறான கருத்துக்களைக் கூறவில்லை. போரால் பெரிதும் பாதிக்கப்பட்ட எமது மக்கள் அரசியல் தீர்வு குறித்து முன்னேற்றகரமான கருத்துக்களையே எதிர்பார்க்கின்றனர். சீனத் தூதுவரின் வடக்குக்கான வருகையை நாம் எதிர்க்கவில்லை எனத் தெரிவித்தார்.

தமிழ் அரசுக் கட்சியின் பேச்சாளர் சீனத் தூதுவரின் வடக்கு விஜயம் தொடர்பில் வெளிபடுத்தியபோது சீனர்களின் செல்வாக்கை வடக்கு, கிழக்கில் தாம் விரும்பவில்லை எனக்குறிப்பிட்டிருந்தார். இதே கருத்தையு அநேக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களும் வெளிப்படுத்த முயலுகின்றனர். அவ்வாறே தமிழ் பரப்பிலும் இந்தியப் பரப்பிலும் உள்ள ஆய்வாளர்கள் உரையாட முனைகின்றனர்.

இத்தகைய உரையாடலுக்குள் தமிழ் தரப்பானது சீனாவை எப்படி அணுகுவதென்பது பிரதான கேள்வியாகும்.

முதலாவது சீனா உலக வல்லரசாக எழுச்சியடைந்து வருகிறது. அரசியலிலும் பொருளாதார, இராணுவக் கட்டமைப்பிலும் வலுவான அரசாக விளங்குவதுடன் சந்தை அமைப்பை முதன்மைப் படுத்திக் கொண்டு வர்த்தக ரீதியில் உலகப் பொருளாதாரத்தை தனது ஆதிக்கத்திற்குள் கொண்டுவந்துள்ளது. ஏறக்குறைய அமெரிக்க - ஐரோப்பிய அணிக்கு நிகராக அரசியல், பொருளாதார, இராணுவ வளர்ச்சியை சீனா எட்டியுள்ளது. சீனா முதல் வல்லரசாகும் எழுச்சியை அமெரிக்க - ஐரோப்பா - இந்தியக் கூட்டு தடுத்தாலும் அடுத்து வரும் தசாப்தங்களில் சீனா மேற்குலகக் கூட்டுக்கு சமதையான அரசாக விளங்கும். அத்தகைய உலக ஒழுங்கானது இரு துருவ அரசியலாக அமையவோ அல்லது பல துருவ உலக ஒழுங்காகவோ அமைய வாய்ப்புள்ளது.

இதில், சீனா ஒரு தரப்பாக விளங்கும் என்பதை வரலாற்றில் தவிர்க்க முடியாது. அவ்வாறின்றி சீனா தனிவல்லரசாக எழுச்சியடையுமாக இருந்தால் அதற்குள் ஈழத்தமிழர்கள் இயங்க வேண்டியது தவிர்க்க முடியாததாகும். அதேநேரம் சீனா ஈழத் தமிழருக்கான சுயநிர்ணய உரிமையையோ மனித உரிமையையோ ஜனநாயகத் தன்மை பொருந்திய அரசியல் கட்டமைப்பையோ அல்லது இவை அனைத்தும் ஒன்று திரண்ட ஓர் அரசியல் தீர்வைப் பற்றிய முடிவைத் தரப்போகும் தேசமாக இதுவரை அது காட்டிக் கொள்ளவில்லை. காரணம் அது ஓர் அரசின் இறைமையை (State Sovereignty) கொண்ட ஆட்சியைப் பின்பற்றி வருகிற நாடு.

ஏறக்குறைய 15ஆம் நூற்றாண்டு ஐரோப்பிய அரசுகளின் இறைமைக் கோட்பாட்டை பின்பற்றும் அரசாக சீனா விளங்குகிறது. அதன் பொருளாதார இலக்குக்குள் சந்தையும் வர்த்தகமும் அடிப்படையானது. சீனாவின் வெளியுறவுக் கொள்கையின் மூலாதாரமாக பொருளாதாரமே காணப்படுகிறது. சீனா, அரசுகளின் இறைமைக்கு முக்கியத்துவம் கொடுப்பதுடன் உள்நாட்டு விடயங்களில் தலையிடாத போக்கை கடைப்பிடித்து வருகிறது. மார்க்சிஷமோ அல்லது சோசலிஷமோ குறிப்பிடும் தேசிய இனங்கள் மீதான ஒடுக்குமுறையை எதிரான எந்த அணுகுமுறையையும் சீனா வெளிப்படுத்தாதது மட்டுமல்ல, ஒடுக்கப்படும் தேசிய இனங்களுக்கு ஆதரவான செயல்பாட்டை இதுவரை வெளிப்படுத்தவில்லை. அதற்காக ஏனைய வல்லரசு நாடுகள் தேசிய இனங்களின் ஒடுக்குமுறைக்கு எதிராக முழுமையான ஆதரவை வெளிப்படுதியுள்ளன என்று பொருள் கொள்ள முடியாது. ஆனால், சீனாவுடன் ஒப்பிடும் அளவுக்கு இந்தியாவும் மேற்குலகமும் தனது நலனுக்கு உகந்த வகைக்குள் தேசிய இனங்களுக்கு ஆதரவாக செயல்பட்டுள்ளன. அது மட்டுமின்றி மனித உரிமைகள், ஜனநாயகம் போன்ற அரசியல் வெளிகளை கொண்ட தேசங்களாகவும் அவை காணப்படுகின்றன.

இரண்டாவது இந்தியா புவிசார் அரசியலையும் பூகோள அரசியலையும் சமகாலத்தில் கொண்டுள்ள நாடாக விளங்குகிறது. இந்து சமுத்திரத்தில் நிலையான இருப்பைக் கொள்வது மட்டுமன்றி அமெரிக்க - ஐரோப்பிய அணியுடனான நெருக்கத்தையும் இந்தோ - பசுபிக் உபாயத்தின் பிராதன நாடுகளில் ஒன்றாகவும் காணப்படுகிறது. ஆனால், ஈழத்தமிழரின் அரசியலில் அதிக பாதிப்புகளை மேற்கொண்ட தேசமாகவும் முள்ளிவாய்க்கால் துயரத்தை பக்கபலமாக நின்று செயல்படுத்திய நாடாகவும் கருதப்படுகிறது. அதே நேரத்தில் ஈழத்தமிழரின் ஆயுதப் போராட்டம் இந்தியாவுக்கு எதிராக செயல்பட்டது என்ற குற்றச்சாட்டும் நிலவுகிறது. பரஸ்பரம் இரு தரப்பும் இத்தகைய விவாதத்தில் அதிக இழப்புக்களை எதிர்கொண்டுவருகிறது. ஆனால், இவை அனைத்தும் அரசியலில் வரலாறுகளே. இத்தகைய வரலாற்றிலிருந்து அனுபவங்களை ஈழத்தமிழர்கள் கற்றுக்கொள்ள வேண்டும். காரணம் ஈழத்தமிழர்களும் இலங்கைத் தீவும் இந்தியாவின் பாதுகாப்புக்கு அவசியமானவையே. ஈழத்தமிழர் இருப்பு என்பது இந்தியாவின் பாதுகாப்பிற்கு உத்தரவாதமானதே. தென்னிலங்கை இந்தியாவுக்கு எதிரானதாகவே எப்போதும் செயல்பட்டுவருகிறது. அவ்வப்போது இந்தியாவுடன் நெருக்கம் எனக் காட்டிக் கொண்டாலும் அடிப்படையில் முரண்பாடான உறவையே கொண்டுள்ளது. அந்த வகையில் தென்னிலங்கையின் அணுகுமுறை ஒன்றும் தவறானதல்ல. அது தனது இருப்பையும் தேசத்தையும் பாதுகாக்கும் கொள்கையில் இயங்குகிறது.

மூன்றாவது மேற்குலக சூழலும் இந்து சமுத்திரப் பிராந்திய நிலையும் சீனாவுக்கு எதிரான திட்டமிட்ட அணுகுமுறையைக் கொண்டுள்ளன. இலங்கைத் தீவிலிருந்து சீனாவை அகற்றுதல் என்பது மேற்கு உட்பட்ட இந்தியாவின் அணுகுமுறையாக உள்ளது. அதற்கான கட்டமைப்புகளையும் கூட்டுப்பாதுகாப்பு வழிமுறைகளையும்“ இந்து சமுத்திரப் பிராந்திய நாடுகளுடன் ஏற்படுத்தி வருகிறன. குவாட்-ஒன்று இரண்டு (GUAD-I,II) மற்றும் ஆக்குஷ் (AUKUS) உடன்படிக்கை என்பவை மட்டுமின்றி தற்போது ஐரோப்பிய ஒன்றியம் கட்டமைத்துள்ள உலகளாவிய நுழைவாயில் (GLOBAL GATEWAY) சீனாவுக்கு எதிரானவையே. இரண்டாம் உலக போருக்கும் போருக்குப் பிந்திய உலக ஒழுங்கை மேற்குலகம் கூட்டுப் பாதுகாப்பினூடாகவே மேற்கொண்டு வெற்றி கண்டது. சோவியத் யூனியனின் தோல்வி அத்தகைய மேற்குலகத்தின் கூட்டுப் பாதுகாப்பிலேயே நிறைவேறியது. சீனாவும் ரஷ்யாவும் மேற்குலக கூட்டுப் போன்றதல்ல. இந்தியாவுடனான ரஷ்யாவின் உறவு சீனாவைவிடப் பலமானது. எனவே, மேற்கின் கூட்டுடன் ஒப்பிட முடியாது சீன - ரஷ்யக் கூட்டை.

நான்கு, ஈழத்தமிழ் தலைமைகளின் அரசியல் தீர்மானங்கள் சீனாவை பூகோள அரசு என்ற அடிப்படையில் அணுகக் கூடியதான நடவடிக்கைகளை எடுப்பது அவசியமானது. புவிசார் அரசாக இந்தியாவையும் பூகோள அரசுகளில் ஒன்றாக சீனாவையும் ஈழத்தமிழர் நோக்குவது பொருத்தமான நடைமுறையாகும். சீனாவை முற்றாக எதிர்ப்பதை விடுத்து அதன் அணுகுமுறையில் ஈழத் தமிழர் தமது நியாயமான கோரிக்கைக்கு இசைவுபடுத்த முயற்சிப்பது அவசியமானது. கடந்த காலத்தில் அந்நாடு ஈழத்தமிழருக்கு எதிராக தென்னிலங்கையுடன் இணைந்து மறைமுகமாக இழைத்த துயரத்தை கைவிட்டுவிட்டு சமகாலத்தில் ஈழத்தமிழரின் கோரிக்கைக்கு செவிசாய்க்க வைக்க முயலுதல் பொருத்தமானதே. அத்தகைய முயற்சி சாத்தியமாகிறதா இல்லையா என்பது முக்கியமல்ல. அத்தகைய வெளியை திறப்பது அவசியமானது. அது ஓர் அரசியல் உரையாடல் மட்டுமே. அதற்காக இந்தியாவுக்கு எதிராக செயல்பட வேண்டும் என்றோ அல்லது சீனாவிடம் சரணடைய வேண்டும் என்றோ பொருள் கொள்ள வேண்டியதில்லை. எப்படி சீனாவின் கால்களில் நின்று கொண்டு தென்னிலங்கை இந்தியாவை நகர்த்துகிறதோ அதேபோன்று இந்தியாவின் அருகில் நின்று கொண்டு சீனாவை நகர்த்துவதே ஈழத்தமிழருக்கான வழிமுறையாகும்.

எனவே ஈழத்தமிழர் சீனா பொறுத்து அச்சமோ அதிருப்தியோ கொள்ள வேண்டியதில்லை. சீனா ஒரு பூகோள அரசு. இந்தியா புவிசார் அரசாகவும் பூகோள அரசாகவும் உள்ளது. அமெரிக்கா ஐரோப்பா பூகோள அரசுகளாகவே நோக்கப்பட வேண்டும். இந்தியாவுக்கு ஊடாகவே ஈழத்தமிழர் பூகோள அரசுகளை அணுகுவது ஆரோக்கியமான அரசியலாக அமையும். 1962 இல் தந்தை செல்வா சீன - இந்திய போர் நிகழ்ந்து கொண்டிருந்தபோது இந்தியாவுக்கு ஆதரவாக ஈழத்தமிழ் இளைஞர்ளை திரட்டி போருக்கு அனுப்பும் முயற்சியில் ஈடுபட்டார் என்று தெரிய வருகிறது. அப்படியான வரலாற்றிலிருந்து ஈழத்தமிழர்கள் பாடங்களை கற்றுக் கொள்ள வேண்டும்.

நன்றி - அருவி



ஈழநாடு



# அமெரிக்க விமானத்தில் ரஷ்யாவின் சிவப்பு நட்சத்திர சின்னமா?

**காட்சியகத்தில் பார்த்த சுட்டுவீழ்த்தப்பட்ட அமெரிக்க விமானத்தின் பாகத்திற்கு ரஷ்யாவின் சிவப்பு நட்சத்திரம் பதிக்கப்பட்டிருந்ததால், வரலாற்றில் இருந்த ஆர்வம் காரணமாக அதைப்பற்றி வினாவிய போது, பல விடயங்கள் தெரியவந்தன.**

அலாஸ்காவின் மிகப் பெரிய நகரமான அங்கரேய்ச்சுக்குச் சென்றபோது, அங்கே உள்ள அருங்காட்சியகத்திற்கும் ஒருநாள் சென்றிருந்தேன். வடஅமெரிக்காவின் பழங்குடி மக்கள் பற்றிய, வரலாற்று முக்கியம் வாய்ந்த பல அரிய பொருட்களை அங்கே காணமுடிந்தது. வட அமெரிக்காவின் முதற்குடிமக்களான இவர்கள், பல்லாயிரக்கணக்கான வருடங்களின் முன் ஆசியாவுடன் இருந்த நிலத் தொடர்பு காரணமாக, ஆசியாவில் இருந்து நிலம் வழியாக நடந்து வந்து இங்கு குடியேறினர். இவர்களைப் பற்றிய நிறைய தகவல்களை இந்தக் காட்சியகத்தில் சேகரிக்க முடிந்தது.

இந்தக் காட்சியகத்தில் விபத்தில் சந்தித்த மிகப் பழைய விமானங்களின் சிதைவுகளையும் ஓரிடத்தில் காட்சிப்படுத்தி இருந்தார்கள். அந்த விமானங்களின் சிதைவுகள் என்னைக் கவர்ந்ததற்குக் காரணம், ‘என்ன சொல்லப் போகிறாய்?’ என்ற எனது நாவலிலும் அலாஸ்காவில் விபத்தில் சந்தித்த ஒரு விமானம் முக்கிய இடம் பெற்றிருந்தது. அதனால்தான் அங்கே காட்சிக்கு வைக்கப்பட்ட ஒரு விமானத்தின் உடைந்த ஒரு பகுதி என்னைத் திரும்பிப் பார்க்க வைத்தது. அது என்னவென்றால் ரஷ்ய நாட்டின் சிவப்பு நட்சத்திரம் பெரிதாகப் பொறித்த, இரண்டாம் உலக யுத்தத்தின் போது சுட்டு வீழ்த்தப்பட்ட ஒரு விமானத்தின் பாகமாகும். இரண்டாம் உலக யுத்தத்தின் போது ரஷ்ய விமானத்தை இவர்கள் சுட்டு வீழ்த்தினார்களா என்ற கேள்வி எனக்குள் எழுந்தது. ஆனால் அங்கே எழுதப்பட்டிருந்த பதாதையைப் பார்த்த போது, அந்த விமானம் உண்மையிலே அமெரிக்காவின் விமானம் என்பதுதான் எனக்கு ஆச்சரியமாக இருந்தது.



FAIR BANK




**குரு அரவிந்தன்**

அமெரிக்காவுக்குச் சொந்தமான யுத்த விமானத்தில் ரஷ்யாவின் சிகப்பு நட்சத்திரமா?, எப்படி அது நடந்தது, எப்படி இது சாத்தியமாயிற்று என்ற கேள்வி எனக்குள் அப்போது எழுந்தது.

இரண்டாம் உலக யுத்தத்தின் பின் பிறந்தவர்கள் என்பதால், சிறுவயதில் பெரியவர்கள் தங்கள் அனுபவங்களைப் பற்றிச் சொன்னதைத் தவிர, அதைப் பற்றி அதிகம் அறிந்திருக்கவில்லை. இந்த யுத்தத்தின் போது ஜேர்மனியால் சுட்டுவீழ்த்தப்பட்ட அமெரிக்க விமானத்தில் ரஷ்யாவின் சிவப்பு நட்சத்திர சின்னம் எப்படி வந்தது என்ற கேள்வி எழுந்தபோது, அதைப்பற்றி அவர்கள் போட்டுக் காட்டிய விவரணப் படத்தையும் காத்திருந்து பார்த்தேன், அதன் பின் கணனியிலும் அதைப்பற்றித் தேடுதலும் செய்தேன். அப்போதுதான் எங்கள் காலத்திற்கு முந்திய பழைய வரலாற்று நிகழ்வுகள் சில தெரிய வந்தன. இரண்டாம் உலக யுத்தத்தின் போது, அமெரிக்கா முதலில் யுத்தத்தில் ஈடுபடவே இல்லை என்பதும் ஆனால், சந்தர்ப்ப சூழ்நிலை அமெரிக்காவை உள்ளே இழுத்திருந்தது என்பதும் தெரியவந்தது.

காட்சியகத்தில் பார்த்த சுட்டு வீழ்த்தப்பட்ட அமெரிக்க விமானத்தின் பாகத்திற்கு ரஷ்யாவின் சிவப்பு நட்சத்திரம் பதிக்கப்பட்டிருந்ததால், வரலாற்றில் இருந்த ஆர்வம் காரணமாக அதைப் பற்றி வினாவிய போது, பல விடயங்கள் தெரிய வந்தன.

இந்த உலக யுத்தத்தின்போது ஐரோப்பாவில் ஜேர்மனியும், இத்தாலியும் ஆசியாவில் ஜப்பானும் ஒன்று சேர்ந்து நாடுகளைப் பிடிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டன. அதாவது 80 வருடங்களின் முன், அமெரிக்காவின் எதிரிகளாக ஜேர்மனியும், ஜப்பானுமே இருந்தன. உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்த பேர்ள் ஹாபர் தாக்குதலால் உத்வேகம் பெற்ற ஜப்பான் நாடு 1942 ஆம் ஆண்டு அலாஸ்காவுக்குச் சொந்தமான மேற்கேயுள்ள அலுற்ரியன் தீவுக் கூட்டத்தில் அற்ரூ, கிஸ்கா என்ற இரண்டு சிறிய தீவுகளைக் கைப்பற்றி, அங்கு இராணுவ முகாமமைத்து அதைத் தங்கள் கட்டுப் பாட்டில் கொண்டு வந்திருந்தது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்த 40 அலுற்ரியன்களையும் ஜப்பான் சிறைப்பிடித்துச் சென்றது. அலாஸ்காவில் இருந்து 1200 மைல்களுக்கு அப்பால் இத்தீவுக் கூட்டம் இருக்கின்றது. 1943 ஆம் ஆண்டு மார்ச் மாதம் அமெரிக்க கடற்படை ஜப்பானின் ஆக்கிரமிப்பு இராணுவத்திற்கான உதவிகளை முதலில் தடுத்து நிறுத்தி முற்றுகையிட்டது. யப்பானிடம் பறிகொடுத்த அமெரிக்காவின் நிலம் இது ஒன்றுதான். இது அமெரிக்காவின் மானப்பிரச்னையாக இருந்ததால், முற்றுகையைத் தொடர்ந்து 1943 ஆம் ஆண்டு மே மாதம் அமெரிக்கா படைகள் திரும்பவும் ஜப்பானுடன் போரிட்டு அந்தத் தீவுகளை மீட்டெடுத்தன. அந்த யுத்தத்தைக் கொண்டு நடத்திய ஜப்பானிய பிரபலமான கேணல் யமாஸாக்கி இறந்ததும் இந்த யுத்தத்தில்தான். இந்த விபரங்களையும் காட்சியகத்தில் உள்ள படங்கள் மற்றும் பதாதைகளில் இருந்து தெரிந்து கொண்டேன்.

இது ஒருபுறம் நடக்க, இதே நேரத்தில் மறுபக்கத்தில் ஹிட்லரின் கட்டளைப்படி ஜேர்மனி, ரஷ்யா மீது போர் தொடுத்து, ரஷ்யாவின் பகுதிகளை ஒவ்வொன்றாகக் கைப்பற்றிக் கொண்டிருந்தது. ஜேர்மனியின் நவீன யுத்த விமானங்களான Luftwaffe விமானங்களோடு ரஷ்யாவின் யாக்-3 விமானங்கள் சரிசமனாகப் போரிட்டதால், ஜேர்மனிக்குப் பெரும் தலையிடியாக இருந்தது. இதனால் ரஷ்யாவின் ரெட் எயர்போஸ் விமானங்களைச் சுட்டு வீழ்த்துவதில் அதிக கவனம் செலுத்திப் பெருமளவில் ஜேர்மனி அவற்றை அழித்திருந்தது. விமானங்கள் எல்லாவற்றையும் இழந்த நிலையில் ரஷ்யா அமெரிக்காவின் உதவியை எதிர்பார்த்தது நின்றது. ஜேர்மனியை வீழ்த்த வேண்டும் என்ற எதிர்பார்ப்போடு இருந்த அமெரிக்கா இரகசியமாக ரஷ்யாவுக்கு உதவ முன் வந்தது. அதனால் ஜனாதிபதி பிராங்கிளின் றோஸ்வெல்ட்டின் ஆலோசனைப்படி சுமார் 8,000 விமானங்ளை 1942 ஆம் ஆண்டு ரஷ்யாவின் ‘ரெட் எயர்போஸ்’ விமானப்படைக்குக் குத்தகை அடிப்படையில் கொடுக்க அமெரிக்கா முன்வந்தது. ஆனால் அப்போது ரஷ்யாவின் அதிபராக இருந்த ஸ்டாலின் விமானங்களை மட்டுமே தரும்படியும், அமெரிக்க விமானிகளை உள்ளே அனுமதிக்க முடியாது என்றும் வேண்டுகோளை விடுத்தார். இதனால் அலாஸ்காவில் வைத்து ரஷ்ய விமானிகளுக்குப் பயிற்சிகளை அமெரிக்கா கொடுத்தது. இதன் போது குத்தகைக்குக் கொடுக்கப்பட்ட அமெரிக்க விமானங்களில் ரஷ்யாவின் சிவப்பு நட்சத்திர சின்னங்கள் பதிக்கப்பட்டன.

யுத்தகாலத்து இராணுவம் சம்பந்தப்பட்ட அரசியல் நடவடிக்கைகள் என்பதால், வெளிநாடுகளுக்கு இது தெரிந்திருக்கவில்லை. ரஷ்யாவின் விமானப் படையை அழித்துவிட்டதாக நம்பிய ஜேர்மனி, ரஷ்ய விமானப் படையின் தாக்குதல் இருக்காது என்ற நம்பிக்கையில், ரஷ்யாவில் அகலக்காலை வைக்கத் தொடங்கியது. திடீரென ரஷ்யாவின் சிவப்பு நட்சத்திரம் பதித்த அமெரிக்க விமானங்களை ஓட்டிய, அமெரிக்காவில் பயிற்சி பெற்ற ரஷ்ய விமானிகள் ரஷ்யாவின் வான்பரப்பைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததும் ஜேர்மனி குழம்பிப் போய் விட்டது. ஜேர்மனியின் உளவுத்துறையின் தகவலில் எங்கோ தப்பு நடந்து விட்டதை ஹிட்லர் புரிந்து கொண்டாலும், கடும் குளிர்காரணமாக, தாக்குப் பிடிக்க முடியாத ஜேர்மன் படைகள் ரஷ்யாவில் இருந்து பின் வாங்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

யுத்தம் முடியும் வரையும் மேலதிகமாக 3,400 விமானங்கள் அமெரிக்காவில் இருந்து ரஷ்யாவுக்குக் கொடுக்கப்பட்டன. ரஷ்யாவின் ‘ரெட் எயர்போஸ்’ என்ற விமானப்படைக்கு 20 சதவீதமான விமானங்கள் அமெரிக்காவால் குத்தகைக்குக் கொடுக்கப்பட்டது. அலஸ்காவில் இருந்து சைபீரியாவுக்குச் செல்லும் விமானப் பாதையையே இவர்கள் பாவித்தார்கள். இதில் கனன் துப்பாக்கிகள் பொருத்திய பெல் பி-39 எயர்கோப்ரா விமானங்களே அதிகமாகக் கொடுக்கப்பட்டன. ஜேர்மனியின் விமானப்படை விமானங்களைச் சுட்டு வீழ்த்த இவ்வகை விமானங்கள் அவர்களுக்குப் போதுமானதாக இருந்தது. 48 ஜேர்மனிய விமானங்களைச் சுட்டு வீழ்த்திய ரஷ்ய விமானியான அலெக்ஸாந்தர் பொக்கிறிஸ்கின் இந்த விமானங்களைப் பற்றிப் பெருமைப்பட்டார். அதிலும் கியூ-5 ரகவிமானங்கள் அதிக வசதிகளோடு மேலானவையாக இருந்ததால் அவர்களுக்குத் திருப்தியாக இருந்தது. மொத்தமாகக் கொடுக்கப்பட்ட விமானங்களில் 4719 பெல் பி-39 விமானங்கள் ரஷ்யாவுக்குக் குத்தகைக்குக் கொடுக்கப்பட்டன. யுத்தம் முடிந்த போது, இதில் 1030 பி-39 விமானங்களை ரஷ்யா இழந்திருந்தது. யுத்தத்தின் போது, பிரான்ஸ் விமானிகள் பாவித்த ரஷ்யாவின் 37 யாக்- 3 விமானங்களைப் பிரான்ஸூக்கு அன்பளிப்பாக ரஷ்யா கொடுத்திருந்தது. 1945 ஆம் ஆண்டு மே மாதம் 7 ஆம் திகதி மேற்கிலும், 9ஆம் திகதி கிழக்கிலும் ஜேர்மனி முற்றாகச் சரணடைந்தது. இதைத் தொடர்ந்து 1945 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 2 ஆம் திகதி, அமெரிக்காவின் அணுக்குண்டுத் தாக்குதலால் மிகவும் மோசமாகப் பாதிப்படைந்த ஜப்பான் நாடும் சரணடைந்தது. அத்துடன் 2 ஆம் உலகயுத்தத்திற்கு முற்றுப்புள்ளிவைக்கப்பட்டது. ■

# முறிந்துபோன தனது காதல் கதைகளை பத்திரிகைக்கு எழுதி பிரபலமான பெண் எழுத்தாளரின் கதை

**இந்தத்திரைப்படம் நகைச்சுவை கலந்த படமென்றாலும், மாறி வரும் அமெரிக்காவின் பல்லின சமூகத்தின் கலந்துரையாடல்களின் பிரதிபலிப்புகளை கொண்டுள்ளது. குறிப்பாக கதாநாயகன் உட்பட பல ஆசிய நாட்டு பின்னணி கொண்ட நடிகர்களை முக்கிய கதாபாத்திரங்களை கொண்டுள்ளது.**




ரமணி - அவுஸ்திரேலியா

நாட்டாலி அமெரிக்காவில் பிரபலமான பெண் எழுத்தாளர் ஒருவர் தன் முறிந்து போன காதல் கதைகளை பத்திரிகை ஒன்றில் எழுதி பிரபலமாகுகிறார். சலித்து போன தன் வாழ்க்கையில் உண்மையான காதல் கை கூடாதா என்ற ஏக்கத்தில் இருக்கும் போது தொலைபேசி செயலி மூலம் அவருக்கு அமெரிக்காவின் இன்னொரு மூலையில் இருக்கும் ஜோஸ் இன் அறிமுகம் கிடைக்கிறது. இது தான் தருணம் தனக்கு உண்மையான காதல் கைகூடிவிட்டது என நட்டாலி பூரிப்படைகிறார்.

அதனால் நட்டாலியும் 'வாரணம் ஆயிரம்' படத்தில் வரும் சூர்யா மாதிரி விமானத்தில் அமெரிக்காவின் இன்னொரு மூலைக்கு ஜோஸ் இற்கு நத்தார் பண்டிகை காலத்தில் இன்ப அதிர்ச்சி கொடுக்க பறந்து சென்றார். ஆனால் அங்கு நட்டாலிக்கு அதிர்ச்சி காத்திருந்தது. ஏனென்றால் அவர் தேடி வந்த ஜோஸ், தொலைபேசி செயலியில் படத்தில் இருந்த ஜோஸ் மாதிரி இருக்கவில்லை. இந்த அதிர்ச்சியில் இருந்து நட்டாலி மீளுகிறாரா? அவரின் வாழ்க்கையில் காதல் கைகூடுகிறதா? என்பதை நகைச்சுவையுடன் சொல்லும் நத்தார் கால நெட்பிலிக்ஸ் வெளியீடே லவ் ஹார்ட்.

கனடாவின் வன்கூவர் நகரில் பனிக் கொட்டும் காலத்தில் படமாக்கப்பட்ட மையால் பார்வையாளர்களை பனி கொட்டும் அமெரிக்க நத்தார் காலத்திற்கு திரைப்படம் அழைத்து செல்கிறது.

ஆங்கிலத்தில் "கேட்பிஸிங்" (Catfishing)என்ற வார்த்தைப் பிரயோகம் இப்பொழுது பிரபலமாகி கொண்டிருக்கிறது. சமூக வலைத்தளங்களில் தனிப்பட்ட ஒருவர், தன் உண்மையான தகவல்களை மறைத்து இன்னொருவரின் படங்களையும், தனிப்பட்ட தகவல்களையும் பயன்படுத்தி, பொய்யான விம்பம் ஒன்றை உருவாக்கி, இணையத்தில் உலா வருவதே "கேட்பிஸிங்"ஆகும். "காட்பிஸிங்" காரணமாக ஏற்படும் கொலைகள், கடத்தல்கள், மிரட்டல்கள், கொள்ளைகள், தற்கொலைகள், பண மோசடிகள் போன்ற பாதகமான விளைவுகள் அடிக்கடி செய்திகள் வெளிவருகின்றன. அந்த வகையில் லவ் ஹார்ட் திரைப்படம் "கேட்பிஸிங்"



மூலமாக ஏற்பட்ட காதலை மையக் கரு வாக கொண்டுள்ளது.


இந்தத்திரைப்படம் நகைச்சுவை கலந்த படமென்றாலும், மாறி வரும் அமெரிக்கா வின் பல்லின சமூகத்தின் கலந்துரையாடல்களின் பிரதிபலிப்புகளை கொண் டுள்ளது. குறிப்பாக கதாநாயகன் உட்பட பல ஆசிய நாட்டு பிண்ணனி கொண்ட நடிகர்களை முக்கிய கதாப்பாத் திரங்களை கொண்டுள்ளது. ஒரு பாரம்பரிய அமெரிக்க குடும்பம் என்றால் இப்படித்தான் இருக்கும் என்ற சிந்தனைக்கு மாறாக இருக்கும் பல் கலாசார பின்னணி கொண்ட குடும்பம் ஒன்றை பார்வையாளர்களுக்கு காட்சிப்படுத்துகிறது. வயோதிப மடத்தில் தாத்தா பாட்டிகளுக்கு இணையத்தில் காதலைத் தேடுவது எப்படி என்று நட் டாலியும் ஜோஸ்ஸூல் சொல் லிக் கொடுக்கும் காட்சிகள் சிரிக்கவும் சிந்திக்கவும் வைக்கும்.



"மின்னுவதெல்லாம்பொன்னல்ல" என்பதிற்கு இணங்க தொழில்நுட்பங்கள் மூலமும் செயலிகள் மூலமும் காதல் தேடும் இந்த காலகட்டத்தில் வெறும் முகத் தோற்றங்களையும், படங்களையும், கொடுக்கப் பட்டுள்ள தகவல்களையும் வைத்து ஒருவரை எடை போட முடியாது மற்றும் தீர விசாரிப்பதே மெய் என்ற கருத்துகளை இந்தப் படம் ஆழமாக வலியுறுத்துகிறது.

திரைப்படத்தின் முக்கிய வேடங்களில் நடித்த ஜிம்மி ஓ யாங் மற்றும் நீனாடொப்ரேவ் உங்களை சிரிக்கவும் வைப்பார்கள் அத்துடன் புன்முறுவல் பூக்கவும் செய் வார்கள். ஆயினும் பழக்கப்பட்ட கொண்டாட்டக்கால திரைக்கதை, மற்றும் "கேட்பிஸிங்" இன் பாதிப் புகளை ஆழமாக வலியுறுத்தா மையை பார்வையாளர்கள் மத்தியில் பெரிதும் விமர்ச னத்திற்கு உள்ளானது.





வருடப்பிறப்பு, மற்றும் பொங் கல் விழாக்காலங்களில் எப்படி கொண்டாட்டங்க ளையும், குடும்ப உறவையும் மையப்படுத்தி திரைப்படங்கள் வெளியிடும் வழக்கம் தமிழில் உண்டோ, அந்த மாதிரி ஹொலி வூட்டில்நத்தார் காலத்திலும், கோடை விடுமுறை காலங்களிலும் அப்படியான திரைப்படங்கள் வெளியிடும் வழக்கம் உண்டு. நத்தார் பண்டிகை விடுமுறை காலங்களில் குடும்பமாக வீட்டில் இருந்த நத்தார் சம்பந்தப்பட்ட படங்கள் பார்ப்பதை சில அமெ ரிக்க குடும்பங்கள் ஒரு வழக்கமாகவே கொண்டி ருப்பார்கள். அந்த வகையில் இந்த நத்தார் பண் டிகை காலத்தில் பல் கலாச்சார பிண்ணனியில் நத் தார் கொண்டாடும் லவ்ஹார்ட் திரைப்படமும் பல அமெரிக்க வீடுகளில் திரையில் கொண்டாடப்படும்.

இந்த நத்தார் பண்டிகை மற்றும் விடுமுறை காலத்தில் கொஞ்சம் சிரிக்க மற்றும் கொஞ்சம் சிந்திக்க, கொஞ்சம் கொண்டாட பார்க்கலாம் லவ் ஹார்ட்.

கருத்துகளுக்கு மின் அஞ்சல் -
**ramaniwrites@gmail.com**

# புலம் பற்றிய சிந்தனையோடு ஒரு செயல் வீரராக நவஜீவன்







கணபதி சர்வானந்தா



கனடாவிலுள்ள தமிழ் வர்த்தகர்களுக்கும் வாடிக்கையாளர்களுக்கும் இடையே தொடர்பினை ஏற்படுத்தும் வகையில் பிஸ்தா.கொம் (Biztha.com) என்ற இணையத்தளம் செயற்பட்டு வருகிறது. அதனை நிறுவியர் திரு. நவஜீவன் அனந்தராஜ். அத்துடன் ஈ - குருவி. கொம் (Ekuruvi.com) என்ற தமிழ் செய்தி இணையத்தளத்தையும் அவர் நடத்தி வருகிறார்.

பல விதமான சமூகச் செயற்பாடுகளையும், சமூக முயற்சியிகளையும் வெற்றிகரமாக மேற்கொண்டு வரும் ஈ - குருவி நிறுவனமானது தம் துறை சார்ந்த நடவடிக்கைகளோடு மட்டும் நின்றுவிடாது கனடாவிலும், சர்வ தேசத்திலும் இருக்கின்ற பல் துறைசார் திறமையாளர்கள் பலரை அழைத்து, அவர்களது திறமைகளைப் பாராட்டி , விருதுகள் வழங்கிக் கௌரவிக்கும் நடவடிக்கையையும் மேற்கொண்டு வருகிறது.

அந்தவ கையில் 2015 இல் அவர் நடத்திய“ஈ குருவி சந்தைப்படுத்தும் திறமைக்கான விருது 2015” என்ற விழாவில் தமிழ் உலகம் நன்கறிந்த பேச்சாளரான கலாநிதி திருமதி ஜெயந்த ஸ்ரீ பாலகிருஷ்ணன் அவர்களும் கலந்து கொண்டார். அவர் தமிழ்நாடு - கோயம்புத்தூரைச் சேர்ந்தவர். அங்கு அவர் உரையாற்றிய போது ஈ - குருவி விருது வழங்கும் நடவடிக்கையைப் பராட்டினார். “ஒருவன் வெற்றியாளராவதற்கு முன் மகோன்னதமான தோல்விகளைச் சந்தித்தாக வேண்டும்.” என்று நவஜீவனின் செயற்பாடுகள் பற்றிக் குறிப்பிட்டுப் பேசியிருந்ததை ஒருமுறை ஞாபகப்படுத்திக் கொள்ளுகிறேன்.

நவஜீவன் புலம் பெயர்ந்திருந்தாலும் புலத்திலேயே அவர் அதிகம் புலனைச் செலுத்துகிறார். அறம் செய்ய விரும்பு என்ற ஔவை இயற்றிய ஆத்திசூடியின் அறவரியை அவர் சிறுவயதிலேயே அதிகம் உள்வாங்கிக் கொண்டவர் போல அவர் நடவடிக்கைகள் அமைந்திருக்கின்றன. பிறர் சுகத்தில் இன்பம் காணும் பழக்கத்தைக் கொண்டிருக்கின்ற நவஜீவன் என்ற அந்த மனிதரை “சிவபூமி பாடசாலை” இல் சந்திக்கின்ற வாய்ப்பு எனக்குக் கிட்டியது. அறம் செய்கின்ற எண்ணத்தோடு பயணிப்பவராகக் அவர் காணப்படுகிறார். அவர் தன்னைப் பற்றியோ அல்லது தனது கடந்த காலத்தைப் பற்றியோ பேசவில்லை. நிகழ்வதைப் பற்றியும் இனி நிகழவிருப்பவைபற்றியுமே அதிகம் பேசுகிறார். அவர் உரையாடல்கள் அனைத்தும் நலிந்தவர்கள் பற்றியும் அவர்களை வளப்படுத்துகின்ற வழி வகைகள் பற்றியும் அமைந்திருக்கின்றன. எப்பொழுதும் சமூக மேம்பாட்டைப் பற்றி அதிக அக்கறையோடு பேசிக் கொண்டிருக்கின்ற அந்த மனிதனுள் ஒரு வெளிச்சத்தைக் கண்டேன்.

அவரது அந்த அற ஒழுக்கத்துக்குக் காரணமானவர்கள் அவரது பெற்றோராகத்தான் இருக்க வேண்டும். ஏனெனில் ஒரு குழந்தை அறத்தை விரும்பவும், அறம் சார்ந்து சிந்திக்கவும் அறம் பற்றிப் பேசவும் அறத்தைத் தனது வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டு செயலாற்றவும் அவரது பெற்றோரே முதல் காரணமா இருப்பர். பெற்றோரே குழந்தைகளுக்கு அறவழியில் சிந்திக்க அடிகோலுகிறார்கள். இது எனது அனுபவப் பகிர்வு. அந்த வகையில் திரு.நவஜீவனின் பெற்றோரான திரு.நடராஜா அனந்தராஜ் தம்பதிகளே அவரது முதன்மை மிக்க வழிகாட்டிகள் என நான் முழுமையாக நம்புகிறேன். திரு.அனந்தராஜ் அவர்கள் ஒரு ஓய்வு பெற்ற வடமாகாணக் கல்வித் துறைப் பிரதி இயக்குநராகப் பணியாற்றியவர். அத்துடன் ஒரு ஊடகவியல் பட்டதாரியுமாவர். அது மட்டுமல்லாது அவர் ஒரு பொது நலன் விரும்பியும் கூட. எனவே நவஜீவனுக்கு அறம் என்ற விடயம் ஒரு பரம்பரைத் தொற்றாகவே இருக்க வேண்டும் என்பதே எனது கருத்து.

2009 இல் கனடாவுக்குப் புலம் பெயர்ந்தவர் நவஜீவன். இங்குள்ள மக்கள் பட்ட துயரையும் அவலத்தையும் நேரில் கண்டவர். அதனால் புலத்து நிலைமைகளை இற்றைப்படுத்தத் தொடங்கினார். ஆரம்பத்தில் தனது பணிகளுக்கூடாக கிடைக்கப் பெறும் பணத்தோடு உதவிச் செயற்திட்டங்களை ஆரம்பித்தார். அதற்காக அவர் ஈ - குருவி என்ற அமைப்பைத் தொடங்கி அதனூடாகப் பத்திரிகை மற்றும் இணையச் செயற்பாடுகளை ஆரம்பித்தார். இன்றும் அதன் பெயரால் நிகழ்ச்சிகளை நடத்தி வருவதோடு மக்கள் மத்தியில் பொறுப்புணர்வை விதைத்து வருகிறார். அதற்காக அவர் நடத்திய விழாக்களில் “ஈ - குருவி இரவு” என்ற நிகழ்வு பிரசித்தி பெற்றது. அதன் மூலம் கிடைக்கப் பெறும் நிதியைக் கொண்டு தனது உதவிகளை செய்யத் தொடங்கினார்.

2019 ஆம் ஆண்டு இறுதியில் உலகத் தொற்றென இனங்காணப்பட்ட கோவிட் 19 என்ற நோய் இவரது செயற்பாடுகளையும் பாதித்தது. இருந்தும் இவர் தமது செயற்திட்டங்களை நிறுத்த விரும்பாதவராக அதற்கான ஒரு மாற்றுவழியைத் தேடலானார். தொற்றை அடிப்படையாகக் கொண்டு மக்கள் சுகாதாரத்தை மையப்படுத்தி அவர் தனது சிந்தனையைப் பறக்க விட்டார்.அதன் மூலம் இணையத் தொடர்புகளினூடாக “ஈ குருவி நடை” (e - kuruvi Steps) என்ற ஒரு செயற்திட்டத்தை வடிவமைத்தார்.

முதலில் “ஈ குருவி நடை” (e - kuruvi Steps) என்ற செயற்திட்டத்தின் மூலம் கிடைக்கப்பெறும் நிதியானது “சிவபூமி அறக்கட்டளை” செயற்திட்டங்களுக்கு வழங்கப்பட வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.அதன் படி ஒருவர் இந்தச் செயற்திட்டத்தில் தன்னை இணைத்துக் கொள்ள வேண்டுமாயின் அவர் இவர்களோடு தொடர்பு கொண்டு தன்னைப் பதிவு செய்ய வேண்டும். அவருக்கு சிவபூமியின் கணக்கு இலக்கம் வழங்கப்படும். அவர் தன்னால் இயன்ற ஒரு தொகையை வைப்பிலிட்ட பின் நடக்கத் தொடங்கலாம். இத் திட்டத்திலே பங்குபற்ற விரும்புபவருக்கு விதிக்கப்படும் முக்கியமானதொரு நிபந்தனை என்னவெனில் நாளொன்றுக்கு அவர் 10,000 காலடிகள் வைத்து நடக்க வேண்டும். 10,000 காலடிகள் என்பது 8 கி.மீ சமமானது. எனவே 100 நாட்களில் 800 கிலோ மீற்றர் தூரத்தை நடந்து அவர் அதனைப் பதிவிட வேண்டும். அவ்வாறு நடப்பதற்காக வைப்பிலிட்ட தொகை ஏறத்தாழ பல இலட்சம் என்கிறார் நவஜீவன். அது தொடர்பானதொரு நிதிக் கையளிப்பு நிகழ்விலேயே நான் நவஜீவனைச் சந்தித்தேன்.

அத்திட்டத்திலே உல நாடுகளில் இருந்து பலர் கலந்துகொண்டதோடு அவர்கள் சிவபூமி அறக்கட்டளைக்குத் தமது நன்கொடையையும் செலுத்தியிருந்தனர். அவ்வாறு இலங்கையிலிருந்தும் பலர் கலந்து கொண்டதாக நவஜீவன் குறிப்பிட்டார்.

அறத்தினூடாகச் சுகத்தைத் தேடுவது என்பது இதுவாகத்தானிருக்கலாம். திட்டம் ஒன்றை ஆரம்பிக்கும்போது அது மனிதவளத்தை மேம்படுத்துவதாகவும், ஆரோக்கியமானதாகவும் இருக்க வேண்டும் என்பது தர்மம். அந்த அடிப்படையிலே நவஜீவனின் செயற்திட்டங்கள் அனைத்தும் ஆரோக்கியமானவையாக இருப்பதோடு மனித வளத்தையும் மேம்படுத்துகின்றன.

தற்போது யாழ். மண்ணிலிருந்து செயற்பட்டுக் கொண்டிருக்கும் இயற்கை வழி விவசாயம் என்ற எண்ணக் கருவுக்கு வித்திட்டவர் இவர். அவர் எண்ணத்தில் அன்று உதித்த அந்தச் செயற்திட்டத்தை நோக்கியே தற்போது நாடு நகர வேண்டிய கட்டாய சூழ்நிலையை இயற்கை ஏற்படுத்தியிருக்கிறது. அது மட்டுமல்லாது சூழலியச் செயற்பாடுகளுக்கும் அவர் வித்திட்டு வருகிறார். இரசாயத்தின் பிடியிலிருந்து இயற்கையை மீட்டெடுக்க வேண்டும் என்பதே அவர் சிந்தனை. அதற்கான உதவிகளையும் ஆலோசனைகளையும் வழங்கிவருவதோடு அது பற்றிய ஆய்வுகளுக்கும் உதவ வேண்டும் என்பதே அவர் நோக்கம்.

தனிநபர் முயற்சி தொட்டு நிறுவனங்கள் என்ற வகையில் அவரின் உதவித் திட்டங்கள் நீட்சி பெறுகின்றன. ஒருவரது உள வளம் தொட்டு அவரது வாழ்வாதாரம் வரை நவஜீவன் அதிக கவனம் செலுத்துகிறார். அந்த அடிப்படையிலேயே அவர் தனது செயற்திட்டங்களை உருவாக்கி நடைமுறைப்படுத்துகிறார். அவரது நடவடிக்கையிலே காணப்படும் தொடர் கண்காணிப்பு (Followup) என்ற விடயம் என்னைக் கவர்ந்திருக்கிறது. உதவித் திட்டங்களைக் கொடுப்பதோடு நின்றுவிடாது அவற்றை மேம்படுத்த அவர் தனது நண்பர்கள் மூலம் அவற்றைக் கண்காணித்து வருகிறார்.ஒருவருக்கு உற்பத்திக்கான வளங்களைச் செய்து கொடுக்கும்போது அவற்றைச் சந்தைப்படுத்துகின்ற வழிவகைகளையும் ஆராய்ந்து அதற்கான ஆலோசனைகளையும் வழங்கிவருவது அவர் சிறப்பு.

சக மனிதனை நேசிப்பதென்ற விடயம் வெறுமனே அவன் பற்றிச் சிந்திப்பது மட்டுமல்ல அச் சிந்தனைகளுக்குச் செயல் வடிவம் கொடுக்க வேண்டும் என்ற வகையிலும் முன்னுரிமைபெறுகிறது. அதிலும் அச் செயல் வடிவங்கள் சகல வழிகளிலும் அவனை நிரந்தரமாக ஆராக்கியப்படுத்த வேண்டும் என்ற விடயமும் மிகவும் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியதொன்று.

எனவே நல்ல எண்ண அடிப்படையிலே நவஜீவனால் உருவாக்கப்படுகின்ற அனைத்துச் செயற்பாடுகளும் நிரந்தரமானவையும் ஆரோக்கியமானவையுமாகக் காணப்படுகின்றன. அது மட்டுமல்லாது ஒரு ஆணின் வெற்றிக்குப் பின்னால் ஒரு பெண் இருக்கிறாள் என்றதை மெய்ப்பிக்கும் வகையில் அவர் பாரியார் அவரைப் பின்தொடர்கிறார். அதுவே அவரது வெற்றியின் இரகசியம் எனலாம்.



## 12,150 கோடி வசூலித்த ஸ்பைடர்மான்

ஸ்பைடர்மான் நோ வே ஹோம் திரைப்படம் வெளியாகிய ஒரு வாரத்தில் 60 கோடி டொலர்களை உலகம் முழுவதும் வசூலித்துள்ளது. இது நம் நாட்டு மதிப்பில் சுமார் 12,150 கோடி இலங்கை ரூபாய். இதன்மூலம் அதிக வசூலைப் பெற்ற மூன்றாவது ஹொலிவூட் படம் என்ற பெருமையையும் இந்தப் படம் பெற்றுள்ளது.

# திரை விமர்சனம்

**திரைப்படம் : ஸ்பைடர்மான் நோ வே ஹோம்**
**இயக்கம் : ஜோன் வாட்ஸ்**
**நடிகர்கள் : ரொம் ஹொலந்த், ஜென்டயா, பெனெடிக்ட் கம்பர்பாட்ச்**
**வெளியான நாள் : 16 டிசம்பர் 2021**




ஸ்பைடர்மான் வருகையில் ஐந்தாவது படம் இது. மார்வெல் ஸ்ரூடியோஸ் நிறுவனத்தின் 27ஆவது படம் இது.

தான்தான் ஸ்பைடர்மான் என்ற உண்மை இந்த உலகத்திற்குத் தெரிந்துவிட்டதால் சில பிரச்னைகளை எதிர்கொள்கிறார் ஸ்பைடர்மான். அதனால், டாக்டர் ஸ்ட்ரேன்ஜை சந்தித்து தன்னைப் பற்றிய நினைவுகளை இந்த உலக மக்களின் நினைவுகளிலிருந்து எடுக்கச் சொல்கிறார். அதற்கு டாக்டர் ஸ்ட்ரேஜூம் சம்மதிக்கிறார். இந்த நிலையில் ஸ்பைடர்மானை தாக்குவதற்காக டாக்டர் ஒக்ரோபஸ் வருகிறார். அவரிடமிருந்து தப்பிக்கும் ஸ்பைடர்மான், ஒக்ரோபஸை டாக்டர் ஸ்ட்ரேன்ஜ் உதவியால் சிறைபிடிக்கிறார். அதுபோல சான்ட் மான், எலக்ட்ரோ, க்ரீன் காப்ளின் ஆகியோரையும் சிறைபிடிக்கிறார்கள்.

ஸ்பைடர்மான் கேட்டுக் கொண்டபடி உலக மக்களின் நினைவுகளிலிருந்து ஸ்பைடர்மானை அழிக்கும்போது சிறைபிடிக்கப்பட்டவர்களில் சிலர் இறக்க நேரிடும் என்கிறார் டாக்டர். ஆனால், அவர்கள் அப்படி இறக்கக்கூடாது என ஸ்பைடர்மான் கேட்கிறார். அதற்கு டாக்டர் உடன்படவில்லை. எனவே, மந்திரப் பெட்டியை தூக்கிச்சென்று விடுகிறார் ஸ்பைடர்மான். ஒக்ரோபஸ், சான்ட் மான், எலக்ட்ரோ, க்ரீன் காப்ளின் ஆகியோரை தனது இருப்பிடத்திற்கு அழைத்துச் சென்று அவர்களை பழைய நிலைக்கு மாற்ற முயற்சிக்கிறார். ஆனால், அது தோல்வியில் முடிகிறது. அவர்கள் நால்வருமே ஸ்பைடர்மானுடன் சண்டையை ஆரம்பிக்கிறார்கள். இந்த சண்டையில் தனது அத்தையை பறி கொடுக்கிறார் ஸ்பைடர்மான். பின்னர், இந்த ஸ்பைடர்மானுக்கு உதவியாக முந்தைய பாக ஸ்பைடர்மான்களும் வருகிறார்கள். மூன்று ஸ்பைடர்மான்களும் பிரச்னையை எப்படி சமாளித்தார்கள் என்பதுதான் படத்தின் மீதிக் கதை.

3டி படம் என்பதால் ரசிகர்கள் ரசிப்பதற்காக பல பிரமாண்ட கிராபிக்ஸ், ஸ்பெஷல் எபெக்ட்ஸ் காட்சிகள் படம் முழுவதும் இருக்கிறது. அதிலும் குறிப்பாக ஸ்பைடர்மான், டாக்டர் ஸ்ட்ரேன்ஜ் இடையில் நடக்கும் சண்டையை 3டியில் பார்ப்பது பிரமிப்பை ஏற்படுத்துகிறது. அது மட்டுமல்ல உச்சக்காட்சிக்கு முன்பாக 3 ஸ்பைடர்மான்களும் ஒருவர் மாற்றி மற்றொருவர் சண்டையிடுவது ரசிகர்களின் கைத்தட்டல்களை அள்ளுகிறார்கள்.

ஒரு ஸ்பைடர்மான் என்றாலே ரசிகர்களுக்குக் கொண்டாட்டமாக இருக்கும். அதிலும் எதிர்பாராமல் திடீரென மேலும் இரண்டு ஸ்பைடர்மான்கள் வர ரசிகர்களின் ஆரவாரம் திரையரங்குகளில் அதிகம் கேட்கிறது. படத்தில் வில்லன்கள் அறிமுகமானால் கூட ரசிகர்கள் கைதட்டுகிறார்கள். இயக்குநர் ரசிகர்களை சந்தோசப்படுத்த மட்டுமே இந்தப் படத்தை உருவாக்கியிருக்கிறார். ஆரம்பத்தில் பற்றவைத்த பரபரப்பும் - விறுவிறுப்பும் இறுதிவரை அப்படியே தொடர்கிறது. ரொம் ஹொலந்த் வழக்கம்போல் காட்சிக்கு காட்சி பிரமிக்க வைக்கிறார். அத்தையை பறிகொடுக் கும் காட்சியில் ரசிகர்களையும் கண்கலங்க வைக்கிறார்.

அவஞ்சர்ஸ் நாயகர்களில் ஒருவரான டாக்டர் ஸ்ட்ரேன்ஜ் கொஞ்ச நேரமே வந்தாலும் அவரின் மந்திர வித்தைகளுக்கு ரசிகர்கள் கட்டுண்டு போகிறார்கள்.

ஸ்பைடர்மேன் காதலியான எம்ஜே மற்றும் நண்பர் நெட் லீட்ஸ் இருவரும் வழக்கம் போல உதவி செய்து மனதில் இடம் பிடிக்கிறார்கள்.

தமிழாக்கத்துக்கும் ஆங்கில நேரடி படத்துக்கும் பெரிய வித்தியாசம் இல்லை. தமிழ் படத்தை பார்க்கும் உணர்வையே வசனங்கள் ஏற்படுத்துகின்றன.



## தனுஷின் புதிய நாயகி!

தமிழ், ஹிந்தியில் முன்னணி நாயகர்களில் ஒருவராக உள்ளார் தனுஷ். தெலுங்கு படங்களிலும் நடிக்கத் தற்போது ஆர்வம் காட்டி வருகின்றார். தெலுங்கு படம் ஒன் றில் ஒப்பந்தமாகியுள்ள அவர், தற்போது வெங்கி அட்லுரி என்ற தெலுங்கு இயக்குநரின் படத்திலும் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்.

தமிழ், தெலுங்கில் இந்தப் படம் தயாராகிறது. இந்தப் படத்திற்கு தமிழில் 'வாத்தி' என்றும் தெலுங்கில் 'சேர்' எனவும் பெயரிட்டுள்ளனர். இந்தப் படத்தின் நாயகியாக மலையாள நடிகையான சம்யுக்தா மேனன் நடிக்கவுள்ளார் என்று கூறப்படுகின்றது.

இவர் தமிழில் களரி, ஜூலை காற்றில் ஆகிய படங்களில் நடித்துள்ளார். தற்போது தெலுங்கில் "பீம்லா நாயக்" படத்தில் நடித்து வருகிறார்.

## விஜயுடன் இணையும் ராஷ்மிகா

விஜயின் 66ஆவது படத்தை தெலுங்கு இயக்குநர் வம்சி இயக்கவுள்ளார். இந்தப் படத்தின் படப்பிடிப்பு ஜனவரியில் தொடங்கவுள்ளது. இந்தப் படத்தின் ஏனைய நடிகர், நடிகைகள் தொடர்பாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை.

படத்தின் நாயகி குறித்து பல்வேறு தகவல்கள் வெளியாகி வரும்நிலையில், ராஷ்மிகா மந்தனா இந்தப் படத்தில் நடிக்கவுள்ளார் என்றொரு தகவல் வெளியாகியுள்ளது. மாஸ்டர் படத்தில் ராஷ்மிகா விஜயுடன் நடிக்க முயற்சி எடுத்தபோதும் வாய்ப்புக் கிடைக்கவில்லை. இந்த நிலையில் தற்போது தெலுங்கின் முன்னணி நாயகியாக ராஷ்மிகா இருப்பதால் விஜய் பட வாய்ப்பை அவர் பெற்றுவிட்டார் என்று கூறப்படுகின்றது.





## கிறங்கடிக்கும் எஸ்தர்

மலையாளத்தில் பல படங்களில் குழந்தை நட்சத்திரமாக நடித்தவர் எஸ்தர் அனில். மோகன்லால் -மீனா நடித்த த்ரிஷ்யம் படத்தின் இரு பாகங்களிலும் அவர்களின் இளைய மகளாக நடித்தவர், அதன்பிறகு அந்தப் படம் தமிழில் மீளுருவானபோது பாபநாசம் படத்திலும் கமலின் இளைய மகளாக நடித்தார்.

தற்போது 20 வயதை அடைந்துள்ள எஸ்தர் அனில் கதாநாயகியாக நடிப்பதற்கு முயற்சி செய்கிறார். இதனால், தனது கவர்ச்சிப் படங்களை அவ்வப்போது சமூகவலைத்தளங்களில் வெளியிட்டு வரும் அவர், தற்போது படுகவர்ச்சியான படங்களை வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளார். அந்தப் படங்கள் சமூகவலைத்தளங்களில் வேகமாக வலம் வருகின்றன.



## அயலானுக்கு இடைக்கால தடை

ஆர். ரவிக்குமார் இயக்கத்தில் சிவகார்த்திகேயன், ரகுல் ப்ரீத் சிங் நடிப்பில் உருவாகியுள்ளது 'அயலான்" படம். வேற்றுக்கிரகவாசியுடன் தொடர்புடைய கதையான இந்தப் படம் ஜனவரி 3 ஆம் திகதி வெளியாகவிருந்தது.

இந்நிலையில் படத்தை தயாரித்த 24 ஏ. எம். ஸ்ரூடியோஸ் நிறுவனம் 5 கோடி (இந்திய) ரூபாய் கடனை வட்டியுடன் 6 கோடியே 92 இலட்சம் ரூபாயாக திருப்பி அளிக்க வேண்டும். அந்தப் படத்தை வெளியிடவோ, விநியோகிக்கவோ கூடாது என்று கோரி சென்னை உயர்நீதிமன்றில் வழக்கு தொடர்ந்துள்ளது.

இதையடுத்து அயலான் படத்தை ஜனவரி 3ஆம் திகதி வரை வெளியிட நீதிமன்றால் இடைக்கால தடை விதிக்கப்பட்டுள்ளது.

# ஆயுள் கைதிகளின் விடுதலையை ஆராய தமிழக அரசு அமைத்த குழு

## 34 ஆண்டுகளை கடந்தவர்களுக்கு பலன் உண்டா?

ஆயுள் சிறைக் கைதிகளின் முன் விடுதலை தொடர்பாக தமிழ்நாடு அரசு அமைத்துள்ள குழுவை, மனித உரிமை ஆர்வலர்கள் வரவேற்றுள்ளனர். "கைதிகளின் மனநிலையில் ஏற்பட்டுள்ள மாற்றத்தை அறிவதற்கு பல மாநிலங்களில் பல்வேறு அளவுகோல்கள் உள்ளன. தமிழ் நாட்டில் அப்படி எந்த அளவுகோள்களும் இல்லை," என்கின்றனர் வழக்கறிஞர்கள். தமிழ்நாடு அரசின் இந்த குழுவால் முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக சிறையில் உள்ளவர்களுக்கு ஏதேனும் நன்மை ஏற்படுமா? இந்த குழுவால் என்ன நடக்கும்?

தமிழ்நாட்டின் முன்னாள் முதல்வர் அண்ணாவின் 113 ஆவது பிறந்தநாளையொட்டி நல்லெண்ண அடிப்படையில் நீண்டகாலம் சிறைவாசம் அனுபவிக்கும் 700 கைதிகளை அரசு விடுதலை செய்ய உள்ளதாக கடந்த செப்டம்பர் மாதம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்திருந்தார்.

இதையடுத்து, முன்விடுதலையை பெறுவதற்குத் தகுதியானவர்கள் தொடர்பான அரசாணையும் வெளியானது. அதில், வகுப்பு மோதல், சாதி மோதல், பாலியல் வன்கொடுமை, அரசுக்கு எதிரான செயல்பாடுகள், குண்டு வெடிப்பு, ஊழல் உள்பட 17 வகையான குற்றங்களில் தொடர்புடையவர்களை விடுதலை செய்வதற்கு வாய்ப்பில்லை என தெரிவிக்கப்பட்டிருந்தது. இதை ஆய்வு செய்வதற்கு குழு ஒன்றையும் தமிழ்நாடு அரசு அமைத்தது.

அரசாணையில் குறிப்பிட்டுள்ள தகவலின்படி பார்த்தால், இஸ்லாமிய சிறைக் கைதிகள், 30 ஆண்டுகளாக சிறையில் இருக்கும் வீரப்பன் அண்ணன் மாதையன், முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சிறையில் உள்ள ஏழு பேர் ஆகியோரது முன்விடுதலை சாத்தியமில்லாமல் போய்விட்டதையும் மனித உரிமை ஆர்வலர்கள் சுட்டிக் காட்டினர். தவிர, பழைய அரசாணையையே புதிய அரசும் புதுப்பித்துள்ளதாகவும் இதற்கென தனியாக குழு அமைக்க வேண்டும் எனவும் கோரிக்கை வைத்தனர்.

### ஆதிநாதன் குழுவில் 6 பேர்

இந்நிலையில், ஆயுள் சிறைவாசிகளின் முன்விடுதலை தொடர்பாக ஓய்வு பெற்ற நீதியரசர் ஆதிநாதன் தலைமையில் குழு ஒன்றை அமைத்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார். இந்தக் குழுவில் மனநல மருத்துவர், மருத்துவக் கல்வி இயக்குநர், சிறைத் துறையின் தலைமை நன்னடத்தை அலுவலர், குற்றவியல் சட்டத்தில் நிபுணத்துவம் உள்ள மூத்த வழக்கறிஞர், சிறை மற்றும் சீர்திருத்தத் துறையில் துணைத் தலைவர் பதவி உள்ள ஒருவர் என ஆறு பேர் இடம்பெற உள்ளதாகவும் அரசு தெரிவித்துள்ளது.

இந்தக் குழுவினர் தமிழ்நாடு சிறைகளில் பத்து மற்றும் 20 ஆண்டுகளில் தண்டனை முடிந்தும் விடுதலை ஆகாமல் உள்ளவர்களில் வயது முதிர்ந்தவர்கள், பல்வேறு இணை நோய்கள் உள்ளவர்கள், உடல்நலம் குன்றிய சிறைவாசிகள், மாற்றுத் திறனாளிகள் ஆகியோரது நிலைமையை மனிதாபிமான அடிப்படையில் கருத்தில் கொண்டு உச்ச நீதிமன்றத் தீர்ப்புகள் மற்றும் நடைமுறையில் உள்ள சட்டவிதிகளின்படி முன்விடுதலைக்கு பரிந்துரை செய்வதற்கான பணிகளை மேற்கொள்ள உள்ளதாகவும் அரசு தெரிவித்துள்ளது.

### கடந்த கால பாரபட்சங்கள்

இதுதொடர்பாக, மனிதநேய மக்கள் கட்சியில் தலைவர் பேராசிரியர் ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ வெளியிட்டுள்ள அறிக்கையில், "கடந்த காலங்களில் வெளியிடப்பட்ட அரசாணைகள் மூலம் பயன்பெற முடியாத வாழ்நாள் சிறைவாசிகளை மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்வதற்கு வழிவகுக்கும் வகையில் இந்தக் குழு அமைக்கப்பட்டுள்ளதாக அரசு தெரிவித்துள்ளது. கடந்த கால பாரபட்சங்களால் கண்ணீர் நிரம்பிய சிறைவாசிகள் குடும்பத்தினரின் இல்லங்களுக்கு ஆதிநாதன் குழு விரைவில் வழிவகுக்கும் என்ற நம்பிக்கை பிறந்துள்ளது" எனக் குறிப்பிட்டுள்ளார்.



இதுதொடர்பாக, பேரறிவாளனின் தாயார் அற்புதம்மாள் வெளியிட்டுள் ருவிட்டர் பதிவில், "சிறை என்பது தவறிழைத்த மனிதனை நல்வழிப்படுத்தி சமூகத்தில் தகுதியானவனாக மாற்றுவதற்கே என்பது நாகரிக சமூகம் ஏற்றுக் கொண்ட கருத்தியல் ஆகும். அதிலும் குற்றமற்றவர்கள்கூட சில நேரங்களில் நீதிப் பிழையால் சிறைத் தண்டனை அடைந்துவிடும் நேர்வுகளை இந்த உலகம் கண்டிருக்கிறது என்பதால் சிறைகள் ஒருபோதும் பழிவாங்கும் இடமாக இருக்கக் கூடாது என்பதே நியதி" என்கிறார்.

மேலும், "ஒரு மனிதனை எட்டு ஆண்டுகளுக்கு மேல் சிறையில் வைத்திருப்பதே அதிகப்படியானது என மறைந்த நீதியரசர் வி.ஆர்.கிருஷ்ணய்யர் சொல்வார். ஒரு நாடு நாகரிமடைந்துவிட்டது என்பதை சிறைவாசிகளை அந்த அரசு எவ்வாறு கையாள்கிறது என்பதில் தான் அடங்கிருக்கிறது என்பார்கள். தண்டனை குறைப்பு என்பது அரசின் அதிகாரத்துக்குட்பட்டதே என பல்வேறு தீர்ப்புகளில் உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது. ஆயுள் சிறைவாசிகள் முன்விடுதலை தொடர்பில் முதலமைச்சரின் அறிவிப்பு தமிழக வரலாற்றில் ஒரு மைல்கல்" என ருவிட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

### சமூகநீதி பேசும் மாநிலம்தான்... ஆனால்?

"சிறையில் உள்ளவர்களை இருவகையாக பார்க்கலாம். குற்றம் செய்துவிட்டு சிறையில் உள்ளவர்கள், குற்றத்தில் தொடர்பில்லாத சில நிரபராதிகள் என பிரித்துப் பார்க்கலாம். சிறை என்பதே சீர்திருத்தத்திற்கான இடம். ஒரு மனிதன் தன்னுடைய இயல்பு நிலையில் இருந்து தவறி ஒரு செயலைச் செய்யும்போது அதற்காக அவரை அடைத்துவைக்கும் இடமாக சிறை உள்ளது. ஆயுள் தண்டனைக் கைதிகள் விவகாரத்தில் இந்தியாவில் உள்ள பல மாநிலங்களில் அந்தக் கைதி எந்தளவுக்கு மாறியிருக்கிறார் என்பதைப் பார்ப்பதற்கு அளவுகோல்கள் உள்ளன. தமிழ்நாட்டில் அதுபோன்ற அளவு கோள்களே இல்லை. இத்தனைக்கும் சமூக நீதி பேசக் கூடிய மாநிலமாக தமிழ்நாடு உள்ளது" என்கிறார், மனித உரிமை செயற்பாட்டாளரும் வழக்கறிஞருமான சிவக்குமார்.

தொடர்ந்து பேசியவர், "இங்குள்ள சிறைவாசிகளும் நீதிமன்றத்துக்குச் சென்று, வெவ்வெறு தீர்ப்புகளை சுட்டிக்காட்டி தனக்கு நீதி கேட்பதுதான் நடக்கிறது. மேலும், சிறைத்துறைக்கும் காவல்துறை அதிகாரிகளுக்கும் இடையில் வித்தியாசம் உள்ளது. சிறைத்துறை என்பது முழுக்கவே சீர்திருத்தம்தான். சிறைத்துறையும் காவல்துறையும் இரண்டறக் கலந்ததால் இதற்கான வித்தியாசங்களே இல்லாமல் போய்விட்டது" என்கிறார்.

"சமூகத்தோடு சேர்ந்து வாழ்வதற்கான சூழலுக்கு ஒரு கைதி வந்துவிட்டாரா என்பதை உளவியல் நிபுணர், சிறை நன்னடத்தை அலுவலர், சிறைத் துறை அதிகாரிகள் ஆகியோர் பார்க்கலாம். "சிறைக் கைதிகளின் நன்னடத்தையை அளவிடுவதற்கு ஒரு குழுவை அமைத்து, அதற்கேற்ப விடுதலை செய்யலாம்" என நீண்டகாலமாக பேசி வருகிறோம். தமிழ்நாடு முதல்வரின் அறிவிப்பை மிக முக்கியமான ஒன்றாகப் பார்க்கிறோம்.

### அரசு கவனிக்க வேண்டிய அம்சங்கள்

சிறைக் கைதிகள் சிறையில் என்ன செய்தார்கள், அவர்களின் உடல்நிலை எப்படி உள்ளது ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு அவர்களின் வாழ்க்கைக்கான அறிவிப்பாகவும் இதனைப் பார்க்கிறோம். மனிதனை மேம்படுத்தும் இடமாக சிறை உள்ளது என காந்தி சொல்வார். பள்ளிக்கு ஒரு மாணவர் செல்கிறார் என்றால், அவர் நல்லபடியாக படிக்க வேண்டும் என்பது அடிப்படை. அதேபோல், ஒருவர் சிறைக்குச் செல்கிறார் என்றால் அவர் திருந்தி நல்லபடியாக வர வேண்டும் என்பதே மக்களின் மனநிலையாக இருக்க வேண்டும். அரசின் முடிவை வரவேற்கிறோம். இந்தக் குழுவில் மிகச் சிறந்த நிபுணர்களை முதலமைச்சர் நியமிப்பார் எனவும் நம்புகிறோம்," என்கிறார் வழக்கறிஞர் சிவக்குமார்.

தமிழ்நாடு அரசு அமைத்துள்ள ஆதிநாதன் குழு குறித்து பிபிசி தமிழிடம் பேசிய மூத்த பத்திரிகையாளர் சிவசுப்ரமணியம், "கைதிகள் முன்விடுதலை விவகாரத்தில் அரசு நேரடியாக முடிவெடுக்க முடியாத சூழல் வரும்போது, ஒரு குழு அமைத்து அந்தக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் எடுப்பது என்பது வரவேற்கத்தகுந்த முடிவு. ஆனால், அந்தக் குழுவின் நோக்கம் நீண்டகால சிறைவாசிகளை விடுதலை செய்யும் வகையில் இருக்க வேண்டும். அரசியல் நோக்கங்களுக்காக இல்லாத குழுவாக அது இருந்தால் நல்லது" என்கிறார்.

தொடர்ந்து பேசுகையில், "அரசாணையில் 17 வகையான குற்றங்களைக் குறிப்பிட்டுள்ளதால், அது தொடர்புடைய வழக்குகளில் கைதானவர்களை முன்விடுதலை செய்வதில் சிக்கல்கள் உள்ளன. இதனைக் களையும் வகையில் அரசு அமைத்துள்ள குழுவானது, வழக்கோடு தொடர்புடைய ஆவணங்களையும் பார்க்க வேண்டும். வீரப்பன் தொடர்பான வழக்கில் அவரது அண்ணன் மாதையன் உள்பட 3 பேர் சிறையில் நீண்டகாலம் உள்ளனர். இதில் சம்பவம் நடந்த இடத்தில் மாதையன் இல்லை. ஆனால், அவர் இருந்ததாக போலீஸார் சான்றுகளை சமர்ப்பித்தனர். இதனை விசாரிக்கும்போது அவருக்குத் தொடர்பில்லை என்றால் விடுவிக்கலாம். அவ்வாறு இல்லாவிட்டால் அவரது வயது, உடல்நிலை ஆகியவற்றைக் கணக் கில் கொண்டு தளர்வுகளை கொடுத்தால் வரவேற்க வேண்டிய விஷயம்" என்கிறார்.

மேலும், "இஸ்லாமிய சிறைக் கைதிகள் மீது கோவை குண்டுவெடிப்புச் சம்பவம் சொல்லப்படுகிறது. அவர்கள் விவகாரத்தில் அரசு கருணை உள்ளத்தோடு நடந்து கொள்ள வேண்டும். அவர்களை விடுதலை செய்த பிறகும்கூட அரசு கண்காணிக்கலாம். இறுதிக் காலத் தில் குடும்பத்தினருடன் அவர்கள் தங் களது வாழ்நாள்களை கழிப்பதற்கு அர சின் இந்த நடவடிக்கை பலன் கொடுக் கும். இவர்களில் பலர் குடும்பத்துடன் தொடர்பில்லாமலும் உள்ளனர் என் பதுதான் வேதனையானது," என்கிறார்.

### அறிவுரைக் குழுக்களின் அலட்சியம்

ஓய்வுபெற்ற நீதியரசர் ஆதிநாதன் தலைமையிலான குழுவின் பணிகள் குறித்து அரசு வழக்கறிஞரும் சிறைத் துறை வழக்குகளைக் கையாண்டு வரும் வழக்கறிஞர் கண்ணதாசனிடம் பிபிசி தமிழ் சார்பில் பேசினோம். "இப்படியொரு குழுவை எந்த அரசும் அமைத்ததில்லை. மாவட்டங்களில் உள்ள அறிவுரைக் குழுவை வலுப்படுத்துவதை முக்கியமான ஒன்றாகப் பார்க்கிறேன். சிறைவாசிகளின் உடல்நிலை, வயது ஆகியவற்றைக் கருத்தில் கொள்ள வேண்டும். உயிர் துறக்கக்கூடிய நிலையில் உள்ள அபாய நோய்கள், தொடர் சிகிச்சையில் உள்ளவர்கள் எல்லாம் 20 ஆண்டுகளைக் கழித்துவிட்டால் அவர்களை விடுதலை செய்யலாம் என்ற விதி உள்ளது.

மாவட்டத்தில் உள்ள அறிவுரைக் குழுவுக்கு கலெக்டர், தலைவராக இருக்கிறார். அந்தக்குழு ஆய்வு செய்து அரசுக்குப் பரிந்துரை செய்யும். கடந்த காலங்களில் அந்தப் பரிந்துரைகளின் பேரில் எந்த முடிவுகளும் எடுக்கப்படவில்லை. அறிவுரைக் குழுவும் ஆண்டுதோறும் கூடுவதில்லை. இதனால் கைதிகள் மிகுந்த மனஉளைச்சலுக்கு ஆளாகின்றனர். அறிவுரைக் குழுவுக்கு அரசால் நியமிக்கப்பட்ட குழு, பரிந்துரைகளை வழங்கினால் சிறப்பாக இருக்கும் எனக் கருதுகிறோம். வீரப்பன் அண்ணன் மாதையன் 30 ஆண்டுகளுக்கும் மேலாக சிறையில் இருக்கிறார். இந்தக்குழுவின் பரிந்துரைகள் சிறைத் துறை வரலாற்றில் மிக முக்கியமானதாக இருக்கும்" என்கிறார். •

**ஆ. விஜயானந்த்**



# ஏன் ஓர் இலக்கியவாதியை நாம் கொண்டாடவேண்டும்?

## மெல்பனில் மல்லிகை ஜீவா நினைவுரை

**ஆஸ்திரேலியா மெல்பனில் கடந்த 19 ஆம் திகதி ஞாயிறன்று நடைபெற்ற மல்லிகை ஜீவா நினைவரங்கில் நிகழ்த்தப்பட்ட உரை**

**நடேசன்**

காட்டில் வசிக்கும் யானை தாகம் தணிக்க நீர் நிலைகளையும், தனக்குத் தேவையான உணவையும் தேடி நடந்த பாதையிலேயே ஏனைய மிருகங்களும் நடக்கும் என்பதால் யானைகளே உலகில் முதல் பாதை அமைத்த சிவில் எஞ்ஜினியர்கள். அதே போன்று நமது வாழ்வு இலக்கியங்களின் வழியே நடக்கிறது. ஒரு இலக்கிய புத்தகத்தை தனது வாழ்வில் வாசிக்காதவர்கூட அதை ஒட்டியே நடக்கிறார்.

எப்படி ?

எந்த ஒழுக்கமுமில்லாதவனும் கூட தனது மனைவி சீதையாக இருக்கவேண்டும் என்றே விரும்புகிறான். அவனுக்கு வால்மீகியையோ கம்பரையோ தெரிந்திருக்கவேண்டிய அவசியமுமில்லை.

ஒருவரது பொருளைத் திருடுவது நல்லதல்ல என எமது குழந்தைகளுக்குச் சொல்லுகிறோம். அதற்காக பாரதம் படிக்கத் தேவையில்லை.

ஒருவன் அரசனாகவோ தலைவனாகவோ இருந்தாலும் நியாயமாக நடக்க வேண்டும் என்கிறோம். அவன் செய்த கொடுமை அவனைக் கொன்றது என்கிறோம். எமக்கு இளங்கோ அடிகளின் சிலப்பதிகாரம் தெரியத் தேவையில்லை.

நமது நாடுகளில் ஒழுக்கம் விழுமியம் பண்பாடு எனத் தூக்கிப் பிடிப்பவர்கள், மேற்கு நாடுகளிலும் அப்படியா..? எனக் கேட்கலாம்.

மேற்கு நாடுகளிலும் அப்படியே. எப்படி?

இலியட் காவியத்தில், ரோய்யில் (Troy) பத்து வருடகாலம் போர் நடத்தி விட்டு கிரேக்க அரசன், அகமெனன் (Agamemnon) வீடு திரும்பி வந்தபோது அவரது மனைவியான க்ளைடெம்மென்ஸ்ரா (Clytemnestra ) தனது காதலனுடன் சேர்ந்து அகமனன்னை கொலை செய்கிறாள். சில காலம் அவர்கள் இருவரும் அரசாள்கிறார்கள். கொலை நடந்த காலத்தில் வெளிநாட்டிலிருந்த அந்த மன்னனின் மகன் ஒரெஸ்டஸால் (Orestes) அந்தத் தாயும் அவளது காதலனும் (Aegisthus) கொலை செய்யப் படுகிறார்கள். தாயை கொன்ற துக்கத்தில் அந்த மகன் தெய்வமான அப்போலோவிடம் சரணடையவும், அதற்கான வழக்கு ஆதீனா என்ற தெய்வத்தால் நீதி மன்றத்திற்கு வருகிறது.

அப்போலோ மகன் ஒரெஸ்டஸுக்கு சார்பான வக்கீல்.

சாதாரண குடி மக்கள்தான் ஜூரர்கள். முடிவில் அந்த ஜூரர்கள் இரண்டாக பிரிந்தபோது, தீர்ப்பு கிடைக்கவில்லை. இறுதியில் நீதிபதியான அதீனா, தனது வாக்கைச் செலுத்தி, அந்த மகனை விடுவிக்கிறார்

இந்தக் கதை புகழ்பெற்ற மூன்று துன்பியல் நாடகங்களாக எழுதப்பட்டது. எழுதியவர் ஏசிக்கிளஸ் (Aeschylus 458 bc...Father of Tragedy also warrior in the war of Marathon) அவரது மூன்று நாடகங்கள்- The Oresteia,The libation Bearers and The Eumenides என்பன.

இந்த நாடகத்திலிருந்தே நீதிமன்றத்தில் நடந்த வழக்குகளில் ஜூரர்கள் முறை வந்தது. அதுவரையும் நடந்த குற்றங்களுக்கு இரத்தப் பழி வாங்கல்கள் தான் நடந்தன. ஆங்கிலத்தில் காங்காருக் கோட்டு என்போம். கொலைகள், திருட்டுக்கள், அரசிற்கு எதிரான குற்றங்கள், அல்லது சட்ட மீறல்கள் என்று தற்போதைய நீதிமன்றம், வக்கீல்கள், ஜூரர்கள் உருவாகுவதற்கு இங்கு இலக்கியம் வழிகாட்டியுள்ளது.

ஏன் டொமினிக் ஜீவாவை நாம் கொண்டாடவேண்டும்?

டொமினிக் ஜீவா இந்த ஆண்டு தொடக்கத்தில் இறப்பதற்கு ஒரு சில வருடங்கள் முன்பாகவே, நினைவுகளை இழந்து வாழ்ந்தவர். அவரது நினைவுகள் அந்திமத்தில் இருந்த காலத்தில், கொழும்பின் புறநகரில் அவரது ஏகபுதல்வன் திலீபனின் வீட்டில் அவரை என்னால் சந்திக்க முடிந்தது.

அவரது இறப்பை ஒரு வரமாக அவரை நேசிப்பவர்கள் கொண்டாட வேண்டும். ஆனால், அவர் போன்ற இலக்கியவாதியின் சாதனைகள் இறப்போடு முடிவதில்லை. நமது சமூகத்தில் இறந்த பின்பே இலக்கியவாதியை நினைவு கூர்வார்கள். அதுதான் மகாகவி பாரதிக்கும் நடந்தது.பலருக்கும் நடக்கும். அந்த விதியை யாராலும் மாற்ற முடியுமா? டொமினிக் ஜீவா, யாழ்ப்பாணத்தில் கஸ்தூரியார் வீதியில் ஜோசப் சலூன் என்ற சிகையலங்கார நிலையம் வைத்தி ருந்தவர் என்பதே 99 சதவீதமான யாழ்ப் பாணத்தவர்களது நினைவாக இருந்திருக்கும்.

பக்கத்திலிருந்த நகைக் கடைகள் மற்றும் புடவைக் கடைகள் வைத்திருந்த வர்களுக்கு, இதென்ன மயிர் வெட்டுபவன் இதற்குள்ளே இருக்கின்றான்..? என்ற மனநிலைதான் அப்போது இருந்திருக்கும். அந்த 1968- 70 வருட காலத்தில் நான் வாரத்தில் இருமுறையாவது அந்த வீதியால் நடப்பவன்.

அந்த வீதியிலே,கடை வைத்திருப்போருக்கோ அல்லது யாழ்ப்பாண சமூகத்திற்கோ கடந்த அரை நூற்றாண்டு காலத்தில் மன நிலையில் மாற்றம் ஏற்பட்டதா இல்லையா என்பது நமது கவலையல்ல. அவரை நேசித்த நாம், எப்படி அவரை நினைவு கூருவது என்பதே எனது வினா?

கிட்டத்தட்ட அரை நூற்றாண்டுகள் தனியொருவனாக மல்லிகை என்ற கலை, இலக்கிய இதழை வெளியிட்ட இதழ் ஆசிரியராக அவரை பலர் நினைவு கூரலாம்.

நமது நண்பர் முருகபூபதி போன்றவர்களது முதல் ஆக்கம் மல்லிகையில் தான் வெளியானது. அத்துடன் மல்லிகையின் ஆஸ்திரேலிய சிறப்பு மலர் வெளியிட்டு, இங்குள்ளவர்களது ஆக்கங்களையும் ஜீவா பிரசுரித்தார்.

பெரிய பத்திரிகைகள், இதழ்கள் மறைந்துவரும் தற்போதைய கணினி உலகிது . நித்திய ஜீவியாக ஜீவா வாழ்ந்தாலும்கூட மல்லிகை நின்று பிடிப்பது கடினமாகியிருக்கும்.

அவரால் ஐம்பதுக்கு மேற்பட்ட புத்தகங்கள் பதிக்கப்பட்டது. அந்த புத்தகங்களால் அவற்றின் படைப்பாளிகளது மனதில் ஜீவா நிலைத்திருக்கமுடியும். எனது வண்ணாத்திக்குளம் நாவலையும் அவர் பதிப்பித்து வெளியிட்டார்.

அவர் ஒரு சிறுகதை எழுத்தாளர். அழகியல் தன்மை கொண்ட கதைகள் பலவற்றை அவர் எழுதியுள்ளார். ஆனால், அவரது கதைகள் பரவலாக பேசப்படாதற்கு முக்கிய காரணம் அவரது மற்றைய அவதாரங்களே. என்னைப் பொறுத்தவரை அவரது கதைகள் அக்காலத்தை நமக்குக் காட்டும் வரலாற்றுக் கண்ணாடிகள்.

அக்காலத்தில் கம்யூனிஸ்ட் கட்சியின் செயற்பாட்டாளராக அவர் இருந்து, யாழ்ப்பாண சாதி விதிமுறைகளுக்கு எதிராகப் போர் கொடியேற்றினார் என்பதால் அவரை இடதுசாரிகள் கொண்டாடி தம்மில் ஒருவராக வைத்துக் கொள்ள விரும்பலாம். அது அவர்களது உரிமை. ஆனால், இடதுசாரியமானது ஏட்டில் அல்லது கணினியில் மட்டும் உறங்கிப் போய்விட்ட நிலை. சாதியம் நிச்சயமாக தற்போதும் இருந்த போதிலும், அவர் காலத்தில் இருந்தது போல் இல்லை.

அவர் பாடசாலையில் கற்ற காலத்தில், ஒரு ஆசிரியர் 'சிரைக்கப் போ' எனச் சொன்னதுபோல் இன்று எவரும் சொல்ல முடியாது. இப்படியான இறங்கு நிலையில் அவரை வெறுமனே சாதியப் போராளியாக மட்டும் நினைத்தால் அவர் குறித்த நினைவுகளும் மங்குமே!

சாதியத்துக்கு மட்டும் எதிரான செயற்பாட்டாளராக அவரை நிறுத்தினால் அவரது நினைவு அடுத்த தலைமுறை வரையும் கடக்காது.

இவற்றுக்கப்பால் அவரிடமிருந்த விடயம் குருஷேத்திரப் போரில் கலந்து கொள்ளாது, விதுரன் வில்லொடித்த போல், தமிழ்த் தேசியத்தின் பேரால் முப்பது வருடங்கள் நடந்த குருதிப் போரில் கலந்து கொள்ளாது, முற்றாக ஒரு முனிவராக வாழ்ந்து அதனைப் புறக்கணித்தார். இது சாதாரணமான விடயமல்ல. எழுத்தாளர்கள், மத வாதிகள் , பேரா சிரியர்கள், அறிவுஜீவிகள் தங்களை மறந்து போருக்குத் துணை போன போது, அந்த சுனாமியில் இருந்து விலகி நின்றார். அவர் மாறாக தமிழ்த் தேசியராக இருந்திருந்தால் உலகமெங்கும் வலம் வந்திருப்பார். அதற்கான அழைப்பைப் புறக்கணித்து கொழும்புக்கு இடம்பெயர்ந்தார். அதற்கப்பால் சிங்கள அறிவுஜீவிகள் எழுத்தாளர்களை மல்லிகையில் தொடர்ச்சியாக அறிமுகப் படுத்தி வந்தார்.

அவரிடம் செவ்வி எடுத்த சிங்கள எழுத்தாளர் மடுள்கிரியே விஜயரத்தினா, தமிழர் உரிமையைப் பற்றி அவரிடம் கேட்டபோது , "நீங்கள் சிறுபான்மையினராகவும் நாங்கள் பெரும்பான்மையினராகவும் இருந்தால், நீங்கள் எம்மிடம் எதைக் கேட்பீர்களோ அதையேதான் நாமும் கேட்கின்றோம்" என ஆணித்தரமாகப் பதிலளித்தார் என்பதை மடுள்கிரியே விஜயரத்தினா என்னிடம் சொன்னார்.

இதற்கப்பால் அவரை நான் மெச்சுவது, இளம்வயதில் உனக்கு படிப்பெதற்கு சிரைக்கப்போ என அந்த ஆசிரியர் சொன்னபோது பாடப் புத்தகத்தை எறிந்துவிட்டு, தந்தையின் தொழிலைத் தொடர்ந்துவிட்டு, எழுத்தாளராகப் பேச்சாளராக வந்து புகழ்பெற்ற பின்னர் அவர் என்றைக்குமே தன்னை புறக்கணித்தவர்கள் மீது காழ்ப்புணர்வு கொண்டவராக வாழ்ந்திருக்கவில்லை.

மதம், சாதி, இனம் ஏன் வர்க்கம் என்று பேசுபவர்கள் பலர் தங்களுக்கு எதிரான கொள்கை உடையவர்கள் மீது அழுக்காறும் குரோதமும் கொண்டு மனதில் கொலை வெறிகொண்டு இயங்குவார்கள். இது நான் எனது சொந்த வாழ்வின் அனுபவத்தில் பார்த்த விடயம்.

உலகத்தில் காந்தி மண்டேலா போன்ற மிகச் சிலராலே கொள்கை நிலையை எதிர்த்தும், அதேவேளையில் கொள்கையைக் கொண்ட மனிதர்களை சகோதரர்களாகப் பாவிக்க முடியும். அப்படியான ஒருவராக டொமினிக்ஜீவாவை என்னால் பார்க்க முடிந்தது.

என்னைப் பொறுத்தவரை டொமினிக் ஜீவாவை இடதுசாரியாகவோ, சாதி எதிர்ப்பாளராகவோ பதிப்பாளராகவோ அல்லது மல்லிகை ஆசிரியராகவோ பார்க்க விரும்புவது பருந்தின் செட்டையை வெட்டி கிளிபோல் கூண்டுக்குள் அடைப்பதற்கு ஒப்பான விடயமாகும்.

டொமினிக் ஜீவா, முழு இலங்கைக்கும் சொந்தமான தீர்க்கதரிசனமும் மனிதாபிமானமும் கொண்ட தமிழ் இலக்கியவாதி என நான் கருதுகிறேன். அவரை நாம் பல சந்ததிகள் கடந்தும் நினைவு கூரல்வேண்டும்.

மு. தயாளன்



# அவள் தயாராகிவிட்டாள்

அந்தப் பொலிஸ் நிலையம் பரபரப்பாக இருந்தது.

அங்குள்ள ஒரு அறையில் அவள் அழுது கொண்டிருந்தாள். அவளின் கண்கள் கண்ணீரை உகுத்தாலும் முகத்தில் தான் செய்தது சரியென்ற வைராக் கியம் தெரிந்தது. அவள் விசார ணைக்குத் தயாராகவே இருந்தாள்.

பச்சைநிற சாரி கட்டியிருந்தாள். அவளின் மேற் சட்டை சிறிது கிழிந்திருந்தது. தலைமயிர் குழம்பி நெற்றியில் விளையாடிக் கொண்டிருந்தது. இடைக்கிடை அந்தத் தலைமயிரைத் தள்ளி விட்டுக் கொண்டிருந்தாள்.

ஒரு பொலிஸ்காரன் அவளுக்கு அருகில் வந்து தேநீர் வேண்டுமாவெனக் கேட்டான். அவள் வேண்டாமெனத் தலையாட்டினாள். அவன் ஏதோ தனக்குள் முணுமுணுத்துக் கொண்டு போய்விட்டான்.

இரு பெண் பொலிசார் வந்து அவள் மீதான விசாரணையைத் தொடங்கினார்கள். இந்த விசாரணை அந்தப் பொலிஸ் நிலையத்தின் இடப்பக்கத்திலுள்ள அறையில் நடந்து கொண்டிருந்தது.

“ உன்னுடைய பெயர் என்ன?”

“ அன்னம்”

“ எத்தனையாம் வகுப்பு படிச்சிருக்கிறாய்?”

“ பத்து மட்டும் படிச்சனான்”

“ ஏன் மேலை படிக்கேல்லை?”

“ எனக்குப் படிக்க விருப்பமிருந்தது. ஆனால் அப்பாவும் அம்மாவும் கலியாணம்கட்டி வைச்சிட்டினம்”

“ எத்தினை வயதிலை கட்டினனீ?”

“ பதினெட்டு வயதிலை”

“ ஏன் அவசரப்பட்டுக் கட்டி வைச்சவை”

“ லண்டன் மாப்பிள்ளை வந்ததாலை கட்டி வைச்சவை”

“ உனக்கு விருப்பம் இருந்ததா?”

“ இல்லை. நான் படிக்கத்தான் விரும்பினனான். அப்பாவும் அம்மாவும் என்னைக் கட்டாயப்படுத்தித்தான் செய்து வைச்சவை. “

“ நீ கட்டேக்கை உன்ரை புருசன் லண்டனிலையே இருந்தவர்”

“ இல்லை. லண்டனுக்குப் போக முயற்சி பண்ணிக் கொண்டிருந்தவர்”

“ உன்னைக் கட்டேக்கை அவர் என்ன வேலை செய்து கொண்டிருந்தவர்”

“ அதுதான் முதல் சொன்னன் தானை. லண்டனுக்குப் போக முயற்சி பண்ணிக் கொண்டிருக்கிறார் எண்டு”

“ அது ஒரு வேலையா?”

“ ஓம் அப்பிடித்தான் இப்ப எல்லாரும் கட்டுகினம்.”

“ அப்ப வீட்டுச் சிலவுக்கு என்ன செய்யிறனீங்கள்?”

“ அவற்றை ஆக்கள் லண்டனிலை இருக்கினம். அவை ஒரே காசு அனுப்புவினம். அவைதான் அவரை லண்டனுக்குக் கூப்பிடவும் போகினம்”

“ எப்பிடி லண்டனுக்குப் போவார்”

“ களவாய்த்தான்”

இரு பொலிசாரும் ஆளைஆள் பார்த்துக் கொண்டனர்.

“ உன்ரை மனிசன் என்ன படிச்சவர்?”

“ அவர் எட்டாம் வகுப்போடை படிப்பை விட்டதாய்ச் சொன்னவர். “

“ ஏன்?”

“ அவரின்ரை நாலு அண்ணன்மார் லண்டனிலை இருக்கினம். மாதா மாதம் கனகாசு அனுப்பிவினமாம். அதனாலை படிப்புத் தேவையில்லை எண்டு நினைச்சாராம். “

“ உங்கடை கல்யாணம் பெரிசாய் நடந்துதோ?”

“ ஓம்.. குதிரை வண்டிலிலை மாப்பிள்ளை பொம்பிளை அழைப்பு நடந்தது. அவற்றை அண்ணன்மார் இருவர் லண்டனிலையிருந்து வந்தவை. அவை காசைத் தண்ணி மாதிரிச் செலவழிச்சினம். நானும் நல்ல வாழ்க்கை என்று சந்தோசப்பட்டன்” என்று கூறிவிட்டுக் கண்ணைக் கசக்கினாள்.

“அவர் பகலிலை வீட்டை என்ன செய்யிறவர்?”

“ சரியான சோம்பேறி. எந்த நேரமும் படுத்தபடி இருப்பார். பின்னேரம் வெளியிலை போவார். நல்ல வடிவாய் வெளிக்கிட்டுப் போவார்”

“வடிவாய் எண்டால்..”

“ கையிலை இரண்டு பவுண் மோதிரம். கழுத்திலை ஐஞ்சு பவுண் சங்கிலி. இடது பக்கக் காதிலை பவுண் தோடு. அந்த நேரம் அவர் நல்ல வடிவு.”என்று கூறிவிட்டு மீண்டும் கண்ணைக் கசக்கினாள்.

“ உப்பிடி வெளிக்கிட்டு எங்கை போறவர்?”

“ அவற்றை பிரண்ட்ஸ்ஸோடை போய் கள்ளுக் குடிப்பார்”

“ கள்ளுக் குடிச்சிட்டுவந்து உன்னை அடிப்பாரா?”

“ சிலவேளை அடிப்பார்”

“ அவருக்கும் உனக்கும் இடையிலை உறவு எப்படி இருந்தது”

“ அவ்வளவு நல்லம் இல்லை. அவருக்கு தான் லண்டன் மாப்பிள்ளை எண்டு கொஞ்சம் திமிர் இருந்தது.”

“ அதனாலை ஏதும் பிரச்னை இருந்ததா?”

“ சிலவேளை வரும். அவரின்ரை அப்பா அம்மா அவரைத் தூண்டிவிட இவர் வந்து எனக்கு அடிப்பார்”

“ அதனாலை உன்ரை மனசிலை உள்ளுக்குள்ளை ஒரு கோபம் வளர்ந்து வந்தது. உண்மைதானே.”

“ ஓம்”

“ எப்ப உன் புருசன் கூடக் குடிக்கத் தொடங்கினவர்”

“ அது இரண்டு மாதம் இருக்கும். லண்டனிலையிருந்து அவை காசு அனுப்பிறதைக் குறைச்சிட்டினம். “

“ ஓ... ஏன் குறைச்சவை”

“ இவர் இஞ்சை பொறுப்பில்லாமல் நடக்கிறதை நான் அவைக்கு எழுதிப் போட்டனான் ”

“ ஏன் அப்பிடிச் செய்தனீ?”

“ அவை காசு அனுப்பினதாலைதான் இவர் வேலை செய்யாமல் இருந்தவர். இவரின்ரை அப்பா அம்மா என்ரை அப்பா அம்மா விட்டை லண்டனுக்குப் போற மாப்பிள்ளை எண்டு சீதனம் வாங்கினவை”

“ ஓ.. அதுவும் நடந்ததோ..எவ்வளவு குடுத்தவை.”

“ 50 லட்சமும் வீடும்.”

“ அவைக்கு எங்காலை உவ்வளவு காசு”

“ என்ரை அண்ணா லண்டனிலையிருந்து அனுப்பிறவர்”

“ ஓ... நீங்களும் லண்டன் காசிலைதான் வாழிறியள்”

அவள் மௌனமாக இருந்தாள்.

“ சரி..காசு வராததாலை என்ன நடந்தது. “

“ காசு நல்லாய்ச் செலவழிச்சவருக்கு செலவழியாமல் இருக்க முடியவில்லை. இவரின்ரை நண்பர்களிட்டைக் கடன் வாங்கிக் குடிக்கத் தொடங்கியிட்டார். “

“ அவரின்ரை நண்பர்களாலை உங்களுக்கு ஏதும் பிரச்னை வந்ததா?”

“ அவை என்னைத் தவறாக நோக்கத் தொடங்கியிட்டினம்.”

“ அதை அவரிட்டைச் சொன்னியா”

“ சொன்னனான் அவர் அதைப் பொருட்படுத்த வில்லை. ஒரு நாள் இரண்டு மணியிருக்கும். அவர் நண்பனோடை வீட்டை வந்தார். இருவருக்கும் நல்ல வெறி. அவரின்ரை நண்பன் என்னோடை தவறாக நடக்க முயற்சித்தார். நான் தப்பி வெளியிலை ஓடியிட்டன்.”

“ அப்புறம் என்ன நடந்தது?”

“ நான் இரவு முழுக்க வெளியிலைதான் இருந்த னான். காலைமை வெறி முறிஞ்சு அவர் வெளி யிலை வந்தவர். அதுக்கிடையிலை அவரின்ரை நண்பர் வெளியிலை ஓடியிட்டார்.”

“ உனக்கு நடந்ததை அவரிட்டைச் சொன் னியா?”

“ சொன்னன். தனக்குத் தெரியும் எண்டார். நீ கொஞ்சம் விட்டுக் குடுத் தால் என்ன என்று எனக்கு அடிச்சார்” என்று கூறிவிட்டு அவள் அழுதாள்.

இவள் சொல்வதெல்லாவற்றையும் கேட்டுக் கொண்டு பதிவு செய்து கொண்டிருந்த பொலிஸ் பெண்ணின் கண்களிலிருந்தும் கண்ணீர் வழிந்தது.

“ பிறகு என்ன நடந்தது?”

“ நான் என்ரை அப்பா அம்மாவுக்குச் சொன்னன்”

“ அவை என்ன சொன்னவை?”

“ பொறுமையாய் இரு. லண்டன் போனால் எல்லாம் சரி வரும் எண்டு சொன்னவை”

“ நீ ஏதும் திருப்பிச் சொன்னியா”

“ இல்லை..”

“ ஏன்?”

“ என்னாலை முடியவில்லை. எல்லாரும் லண்டன்....லண்டன்.. எண்டு... ”

என்று சொல்லிவிட்டு அவள் அழுதாள்.

“ பிறகு என்ன நடந்தது?”

“ அடுத்தநாளும் அதே மாதிரி... ஆனால் இந்தமுறை நான் தயாராய் இருந்தன்...அவன் என்னை நெருங்க கையிலை இருந்த கத்தியாலை ஓங்கி வெட்டி னன்.. பிறகு என்ரை மனிசனெண்டவனையும் கலைச்சுக் கலைச்சு வெட்டினன்.”

அதனைச் சொன்னபோது அவளின் உடல் நடுங்கியது.

“நீ செய்தது பிழைதானை”

“ இல்லை நான் பிழை செய்யேல்லை”

“ நீ கொலை செய்திருக்கிறாய்”

“ இல்லை நான் வெட்டினது மனிசரையில்லை. விச ஜந்துக்களை”

இரு பெண் பொலிசாரும் பேசாமல் இருந்தனர்.

“ கோட்டுக்குப் போனால் உனக்குத் தூக்குத்தான் கிடைக்கும்”

“ பரவாயில்லை. நான் வாழ விரும்பயில்லை”

அவள் பலமாகக் கத்திச் சொன்னாள்.

பொலிஸ் நிலையத்திலிருந்த எல்லோரும் திரும்பிப்பார்த்தனர்.

அருகிலிருந்த பெட்டி ஒன்றைத் தூக்கி எறிந்தாள். வெறி பிடித்தவள்போல்

“ என்ரை புருசன் ஒரு கொடியவன். என்ரை புருசன் ஒரு மிருகம்..”

அவள் கத்திக் கொண்டேயிருந்தாள்.





# பன்றித்தலைச்சி அம்மன் கோவில் மார்கழி திருவாதிரை மஹோற்சவம்

சரித்திர பிரசித்தி பெற்ற மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோவில் மார்கழி திருவாதிரை மஹோற்சவ விழா சிறப்பாக நடந்தேறிய நிகழ்வை படங்களில் காணலாம்..



# கல்முனை பற்றிமாவிலிருந்து பல்கலைக்கழகம் சென்ற 114மாணவருக்கு பாராட்டுவிழா!









கிழக்கில் புகழ்பூத்த கல்முனை கார்மேல் பற்றிமா தேசியகல்லூரியிலிருந்து கடந்த இருவருடங்களில் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவான 114 மாணவர்களைக் கௌரவிக்கும் விழா கல்லூரி அதிபர் வண. சனோ.சந்தியாகு தலைமையில் நடைபெற்றது.கிழக்குமாகாண கல்விப்பணிப்பாளர் திருமதி நகுலேஸ்வரி புள்ளநாயகம் பிரதமஅதிதியாகக்கலந்தகொண்டுசிறப்பிப்பதையும் மாணவர்கள் பாராட்டப்படுவதையும் காணலாம்.

**படங்கள்: ( வி.ரி.சகாதேவராஜா)**

# மெல்பனில் நடந்த மல்லிகை ஜீவா நினைவரங்கு அக்கினிக்குஞ்சு யாழ். பாஸ்கருக்கு விருது

ஆஸ்திரேலியா விக்ரோரியா மாநிலத் தலைநகர் மெல்பனில் மூத்த பிரஜைகள் மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை ஞாயிற்றுக்கிழமை மாலை, மெல்பன் வாசகர் வட்டத்தின் ஒருங்கிணைப்பாளர் திருமதி சாந்தி சிவக்குமார் தலைமையில் மல்லிகை ஜீவா நினைவரங்கு நடைபெற்றது.

பாரதி நினைவு நூற்றாண்டை முன்னிட்டு, பாரதியாரின் உருவப்படத்திற்கு மங்கல விளக் கேற்றி விழா நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின.

இந்த ஆண்டு தொடக்கத்தில் பெருந்தொற்றால் மறைந்த ஈழத்தின் மூத்த எழுத்தாளரும் மல்லிகை இதழின் ஆசிரியருமான டொமினிக்ஜீவா அவர்களின் உருவப்படத்திற்கும் கலை, இலக்கிய வாதிகள் விளக்கேற்றி மலரஞ்சலி செலுத்தினர்.



திருமதி சரண்யா மனோசங்கரின் தமிழ் வாழ்த் துடனும் திருமதி மேகானந்தா சிவராசாவின் வரவேற்புரையுடனும் தொடங்கிய இந்நிகழ்வில் மல்லிகை ஜீவா நினைவுரையை எழுத்தாளர் நடேசன் நிகழ்த்தினார்.

சட்டத்தரணியும் சமூக ஆர்வலரும் அரசியல் விமர்சன எழுத்தாளருமான செ. ரவீந்திரன் எழுத்தாளர் முருகபூபதியின் பாட்டி சொன்ன கதைகள், நடந்தாய் வாழி களனி கங்கை , கதைத் தொகுப்பின் கதை ஆகிய நூல்களை வெளியிட்டு வைத்து உரையாற்றினார்.

தமிழ்க்குழந்தைகளுக்கு பாட்டி சொன்ன கதைகள் ( சிறுவர் இலக்கியம் ) நூலின் பிரதிகள் வழங்கப்பட்டது.



செல்வன் ஹரீஜன் பசுபதிதாசன் பாட்டி சொன்ன கதைகள் நூலையும், திரு. கிறிஸ்டி நல்லரெத்தினம் நடந்தாய் வாழி களனி கங்கை நூலையும் திரு. அசோக் ஜனார்த்தனன் மற்றும் திருமதி கலாதேவி பால சண்முகன் ஆகியோர் கதைத் தொகுப்பின் கதை நூலையும் அறிமுகப்படுத்தி திறனாய்வுரை நிகழ்த்தினர்.

நூல்களின் ஆசிரியர் முருகபூபதி ஏற்புரை வழங்கினார்.

இவ்வரங்கில் மூன்றாவது நிகழ்ச்சியாக ஆஸ்திரேலியாவில் நீண்ட காலமாக அக்கினிக்குஞ்சு இணைய இதழை மிகுந்த அர்ப்பணிப்புடன் நடத்திவரும் எழுத்தாளரும், நாடகக் கலைஞருமான திரு. யாழ். பாஸ்கர் மல்லிகை ஜீவா நினைவு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.



# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
வி னாத்தான்

நேரம் : 1 மணித்தியாலம்

6. முதலில் தரப்பட்ட உருவை முகம் பார்க்கும் கண்ணாடியில் பார்க்கும் போது அது தோற்றும் விதத்தைத் தெரிவு செய்க.



(1) (2) (3)


- 7, 8 ஆகிய வினாக்களில் கட்டத்தினுள் உள்ள தொகுதியுடன் சேர்ப்பதற்கு மிகப் பொருத்தமான உரு எது?

7.




(1) (2) (3)

8.



(1) (2) (3)

9.





ஒரு விரிக்கப்பட்ட சதுரமுகியின் உரு இங்கு காணப்படுகிறது. இதனை ஒரு சதுரமுகியாக மறுபடியும் தயார் செய்யும் போது எதிர்முகங்களில் இருக்கும் எண்களின் கூட்டுத்தொகை 7 ஆக அமைவதற்கு உருவின் A, B ஆகிய முகங்களில் வரவேண்டிய எண்கள் முறையே எவை?

(1) 4, 6 (2) 5, 4 (3) 4, 5

10. ஒரே அளவுடைய 7 அட்டைப் பெட்டிகளின் சில முகங்களில் பசையைப் பூசி அவற்றை ஒட்டி ஆக்கப்பட்ட உரு ஒன்று அருகே தரப்பட்டுள்ளது.

பசை பூசி இணைக்கப்பட்ட பெட்டிகளின் முகங்கள் எத்தனை?


(1) 6
(2) 10
(3) 12



18. அருகே சதுரமுகிகளின் அடுக்குகள் இரண்டு தரப்பட்டுள்ளன.


இந்த இரண்டு அடுக்குகளிலும் காணப்படும் சதுரமுகிகளின் மொத்த எண்ணிக்கை யாது?

(1) 28
(2) 39
(3) 29




- 19, 20 ஆகிய வினாக்களில் உள்ள கோலத்திற்கேற்ப அடுத்து வரவேண்டிய உருவைத் தெரிவு செய்க.

19.



(1) (2) (3)

20.



(1) (2) (3)

### விடைகள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 6. | (3) |
| 8. (1) | 9. (3) | 10. (3) | 11. (1) | 12. (2) | 13. | (2) |
| 15. (1) | 16. (2) | 17. (1) | 18. (2) | 19. (3) | 20. | (1) |

# புரட்சிகரமான மாற்றம் வேண்டும்!

## பேராயர் மல்கம் ரஞ்சித் அழைப்பு

கொழும்பு, டிசெ. 26

**“நாடு தற்போது பயணித்துக்கொண் டிருக்கும் வழி மாற்றப்பட வேண்டும். புரட்சிகரமான மாற்றமொன்று கட்டாயம் வேண்டும்.”- என்று பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.**

நத்தார் பண்டிகையை முன்னிட்டு ராகம தேவத்த தேசிய பசிலிக்கா தேவாலயத்தில் பிரதான திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. பேராயர் தலைமையில் தேவ ஆராதனைகள் இடம்பெற்றன.

இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

“உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் 269 பேர் கொல்லப்பட்டனர். மதமொன்றின் பெயரால், மக்கள் கொலை செய்யப்படுவார்களேயானால், அப்படியான மதத்தில் எந்த வித பயனும் கிடையாது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்தின் பின்னணியில் செயற்பட்டவர்கள் இன்னும் அடையாளம் காணப்படவில்லை. இது ஏன்?” - எனவும் பேராயர் கேள்வி எழுப்பினார். (அ)



# பொதுஜன பெரமுன கூட்டுக்குள்ளிருந்து விமல், வாசு, கம்மன்பில வெளியேற்றம்?

## பஸில் ராஜபக்ஷ வியூகம்

கொழும்பு, டிசெ. 26

அமைச்சர்களான விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில மற்றும் வாசுதேவ நாணயக்கார ஆகிய மூவரையும் அமைச்சரவையில் இருந்து நீக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம், நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ கோரிக்கை விடுத்துள்ளாரென அரசியல் வட்டாரங்களை மேற்கோள் காட்டி சிங்கள இணைய ஊடக மொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பஸில் ராஜபக்ஷ அமெரிக்கா பயணிப்பதற்கு முன்னர் இது தொடர்பான யோசனையை ஜனாதிபதியிடம் முன்வைத்துள்ளாரெனவும், இவர்கள் மூவரையும் வைத்துக்கொண்டு நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல முடியாதெனவும் பஸில் ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளாரென அந்த செய்தியில் கூறப்பட்டுள்ளது.

2022 ஜனவரி முற்பகுதியில் அமைச்சரவை மற்றும் அரச நிறுவனங்களின் பிரதான பதவிகளில் மறுசீரமைப்பு இடம்பெறவுள்ளது. இதன்போதே மேற்படி மூவரையும் நீக்குமாறு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

# 12 வயது பாடசாலை மாணவனை தூக்கி ஆற்றில் வீசிய பல்கலை. மாணவன் கைது

கொழும்பு, டிசெ. 26

12 வயதுடைய பாடசாலை மாணவர் ஒருவரை அவரது கால்களைப் பிடித்து பாலத்திலிருந்து ஆற்றில் வீசிய பல்கலைக்கழக மாணவன் ஒருவரைக் கைது செய்ததாக கொடக்கவெல பொலிஸார் தெரிவித்தனர்.

கல்வி நடவடிக்கைக்காக சென்றுக்கொண்டிருந்த தரம் 7 இல் கல்வி கற்கும் மாணவர் ஒருவரே இவ்வாறு ஆற்றில் வீசப்பட்டுள்ளார். பிரதேச மக்களால் மீட்கப்பட்ட இம் மாணவன் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

காவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த சந்தேக நபரான பல்கலை மாணவன் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். சம்பவம் குறித்து கொடக்க வெல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# புதிதாக 54 மருத்துவ அதிகாரிகள் வடக்கு மாகாணத்துக்கு நியமனம்

யாழ்ப்பாணம், டிசெ. 26

வடக்கு மாகாண மருத்துவமனைகளுக்கு புதிதாக 54 மருத்துவ அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர் என்று மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மத்திய சுகாதார அமைச்சினால் உள்ளகப் பயிற்சியை நிறைவு செய்த வைத்திய அதிகாரிகளுக்கு கடந்த 23.12.2021 அன்று நாடளாவிய ரீதியில் புதிய நியமனங்கள் வழங்கப்பட்டன.

இந்நியமனத்தில் வடமாகாணத்திற்கு புதிதாக 54 மருத்துவ அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். இதில் 15 பேர் யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு உட்பட்ட மருத்துவமனைகளுக்கும், 14 பேர் மன்னார் மாவட்ட மருத்துவமனைகளுக்கும், 10 பேர் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைகளுக்கும், 8 பேர் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைகளுக்கும், 7 பேர் வவுனியா மாவட்ட மருத்துவமனைகளுக்கும் நியமிக்கப்பட்டுள்ளனர்.



இதற்கு மேலதிகமாக மேலும் 6 மருத்துவ அதிகாரிகள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஒக்ரோபர் மாதம் மத்திய சுகாதார அமைச்சினால் புதிதாக வழங்கப்பட்ட மருத்துவ அதிகாரிகளின் நியமனத்தின்போது வடமாகாணத்திற்கு 188 மருத்துவ அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# முல்லைத்தீவுப் பாடசாலை ஒன்றில் மாணவிகளுக்கு பாலியல் தொந்தரவு

## ஆசிரியர் பொலிஸாரால் கைது

முல்லைத்தீவு, டிசெ. 26

முல்லைத்தீவில் பாடசாலை ஒன்றில் கடமையாற்றும் ஆசிரியர் ஒருவர் பாடசாலை மாணவிகளுக்கு பாலியல் தொந்தரவு கொடுத்த குற்றச்சாட்டில் முல்லைத்தீவு பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளதோடு பாடசாலை சிறுமிகள் மீது ஆசிரியர் பாலியல் துஸ்பிரயோகத்துக்கு முயற்சித்தாக தெரிவிக்கப்பட்டு, சிறுவர் பெண்கள் பாதுகாப்புப் பிரிவுக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டை தொடர்ந்து நேற்று முன்தினம் முல்லைத் தீவு பொலிஸாரால் குறித்த ஆசிரியர் கைதுசெய்யப்பட்டார்.

கைதுசெய்யப்பட்ட ஆசிரியர் விசாரணைகளின் பின்னர் நேற்று முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட போது அவரை எதிர்வரும் ஜனவரி 4ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டார். (அ)

# இரும்பு கதவு விழுந்ததில் 3 வயது குழந்தை மரணம்

குருணாகல், மதுராகொட பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தொடம்கஸ்லந்த பிரதேசத்திலுள்ள வீடொன்றில், மூன்று வயது குழந்தை மீது இரும்பு கதவு விழுந்ததில் குழந்தை பரிதாபகரமாக உயிரிழந்தது.

இந்த சம்பவத்தில் படுகாயமடைந்த சிகிச்சை பலனின்றி மரணமடைந்தது. சடலம் பிரேதப் பரிசோதனைக்காக குருணாகல் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது (கே)

## ‘ஒன்லைன்’ வகுப்புக்கான போனை விற்று

# காதலியை ஹோட்டலுக்கு அழைத்துச் சென்ற சிறுவன்

கம்பளை, டிசெ. 26

தனது அண்ணாவின் தேசிய அடையாள அட்டையைப் பயன்படுத்தி, சிறுமியை ஹோட்டலுக்கு அழைத்துச் சென்று அறையொன்றை எடுத்து, அதில் இரண்டு நாட்கள் தங்கியிருந்த பாடசாலை மாணவன் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

15 வயதான பாடசாலை மாணவரே, கண்டி, உடுநுவர சிறுவர் தடுப்பு மத்திய நிலையத்தில், கம்பளை நீதிவான் மற்றும் மாவட்ட நீதிவான் சினித் விஜேசேகரவின் உத்தரவின் பேரில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

கம்பளை நகரிலுள்ள பிரபலமான பாடசாலையில் தரம் 10 இல் கல்வி பயிலும் மாணவன், மற்றுமொரு மகளிர் பாடசாலையில் தரம் 10 இல் கல்வி பயிலும் மாணவியையே இவ்வாறு ஹோட்டலுக்கு அழைத்துச் சென்று இரு நாட்கள் தங்கியுள்ளார்.

8 மாதங்களாக இவர்களுக்கிடையில் காதல் மலர்ந்துள்ளது. கடந்த 19ஆம் திகதி மேல திக வகுப்புக்குச் செல்வதாகக் கூறி, இருவரும் நாவலப்பிட்டியில் நீர்வீழ்ச்சியொன்றுக்குச் சென்று மாலை வரையிலும் நேரத்தைக் கழித்துள்ளனர். அதன்பின்னர் நுவரெலியா சென்றுள்ளனர்.

ஒன்லைன் ஊடாக கற்பதற்கு பெற்றோர் வாங்கிக் கொடுத்த கையடக்கத் தொலைபேசியை 7 ஆயிரம் ரூபா வுக்கு விற்பனை செய்துவிட்டே நுவரெலியா சென்றுள் ளனர்.

ஹோட்டலில் சிறார்களுக்கு அறைகள் கிடைக்காது என்பதால் தனது அண்ணாவின் தேசிய அடையாள அட்டையைத் திட்டமிட்ட அடிப்படையில் எடுத்துச் சென்றுள்ளார்.

சிறுமியின் தாய் செய்த முறைப்பாட்டையடுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் இந்த விடயம் தெரியவந்துள்ளது. (இ)

# மணல் கடத்தலில் ஈடுபட்டவர்கள்மீது அரியாலை நெளுக்குளம் பகுதியில் சூடு

## ஒருவர் படுகாயம்

யாழ்ப்பாணம், டிசெ. 26

அரியாலை நெளுக்குளம் பகுதியில் உழவு இயந்திரத்தில் மணல் கடத்தலில் ஈடுபட்டோரை சிறப்பு அதிரடிப்படையினர் மறித்தபோதும் நிறுத்தாமல் சென்றதனால் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

சம்பவத்தில் உழவு இயந்திரத்தில் பயணித்த ஒருவர் படுகாயமடைந்ததுடன் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் அரியாலை முள்ளியைச் சேர்ந்த 27 வயதுடைய யசிந்தன் என்பவரே காயமடைந்தார். அவர் பொலிஸ் காவலில் யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

அத்துடன், மணல் ஏற்றிய பெட்டியுடன் உழவு இயந்திரம் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது. (அ)

## கிறிஸ்தவர்,...

வலிகாமம் பகுதியில் களவாடப்பட்ட பிள்ளையார் சிலைகள் தொடர்பில் பொலிஸார் ஒருவரை கைது செய்தனர். இதைத் தொடர்ந்து பல சைவ ஆலயங்களில் களவாடப்பட்ட சிலைகள் மீட்கப்பட்டன. இது குறித்து நேற்று மறவன்புலவு சச்சிதானந்தம் விடுத்த அறிக்கை அப்படியே வருமாறு,

“சூசைராசா கஜீபன் கிறித்தவர். வலிகாமத்தில் உடைத்த பிள்ளையார் சிலைகள் தொடர்பில் முதலில் கைதானவர் சூசைராசா. அந்தப் பிள்ளையார் சிலைகள் போய்ச் சேர்ந்தன முகமதியரின் வணிக நிறுவனத்திடம். கொழும்பு ஆர்மர் தெரு பாத்திமா பள்ளிக்கு முன்புள்ள முகமதியர் வளாகத்தில் வலிகாமம் சிலைகள் உள்ளிட்ட 17 பிள்ளையார் சிலைகள் பல சிவலிங்கங்கள் மற்றும் சைவக் கோயில் சிலைகளை இன்று (நேற்று) கண்டுபிடித்த காவல்துறையினரைப் பாராட்டுகிறேன்.

“இந்தச் சிலைகள் பல்லாயிரம் ஆண்டுகளாக தமிழர் வழிபட்ட தொல்லியல் கூறுகள். இவற்றை உடைத்தவர், இவற்றைப் பெயர்த்தவர், இவற்றைக் கொண்டு சென்ற வாகனத்தார், சேமித்து வைத்த முகமதிய வளாகத்தார் யாவரையும் தொல்பொருளியல் சட்டங்களில் பிணையில் விடமுடியாத சட்டங்களின் கீழ் கைது செய்து உடனடியாக சிறையில் அடைக்குமாறு காவல்துறையை கேட்டுக்கொள்கிறேன்

“சைவர்களின் நம்பிக்கையின் அடையாளம் பிள்ளையார். சைவர்களின் உணர்வுகளின் உறைவிடம் பிள்ளையார். கிறித்தவர் உடைக்கிறார். முகமதியர் பின்னணியில் உள்ளார். ஆபிரகாமிய மதத்தவர் இலங்கைச் சைவ மரபுகளை உடைத்தெறியும் கண்ணோட்டத்தின் வெளிப்பாடு எனக் கொள்ளலாமா?

“வலிகாமத்தில் நிகழ்ந்தவை முதல் நிகழ்வுகள் அல்ல. ஏற்கனவே வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, தீவுப்பகுதி, வன்னியில் போர்க்காலத்தில் உயர்பாதுகாப்பு வலயங்களின் நிகழ்வுத் தொடர்ச்சியே கடந்தவாரம் வலிகாமத்தில் 5 பிள்ளையார் கோவில் சிலைகள் உடைப்பு. கிறித்தவரும் முகமதியரும் சைவ மரபுகளை அழிக்க உந்துதல் கொடுப்பவர் யார்?

“வவுனியா செட்டிகுளம்

மன்னார் தள்ளாடி, ஆட்காட்டிவெளி, வெள்ளாங்குளம், சிலாவத்துறை, மடு - பரப்புக்கடந்தான்,

பூநகரி கேரதீவு, தென்மராட்சி - மிருசுவில், அம்பாறை கஞ்சிக்குடியாறு

எனத் தொடர்ச்சியாகப் பிள்ளையார் சிலைகளை உடைப்பதிலும் பிள்ளையார் கோயில்களை அகற்றுவதிலும் ஆகக் கிறித்தவரும் முகமதியரும் இணைந்து முனைந்துள்ளனர்.

“கிறித்துவ மதத் தலைவர்களோ முகமதிய மதத் தலைவர்களோ தத்தம் மதத்தவர் இவ்வாறு செய்வதால் இலங்கையில் மத நல்லிணக்கம் சிதறும் தமிழரிடையே பிளவு வரும் என்பதை வெளிப்படையாகக் கூறவில்லை. சைவரிடம் இதுகாறும் மன்னிப்புக் கோரவில்லை.

“கிறித்தவ மதத் தலைவர்கள் மன்னார், வவுனியா, கிளிநொச்சி மாவட்டங்களிலும் பிள்ளையார் சிலைகளை உடைப்பதை ஊக்குவிக்கிறார்கள். இப்பொழுது வலிகாமத்தில் நிகழ்ந்தவற்றை கிறித்தவ, முகமதிய மதத்தலைவர்கள் ஊக்குவிக்கிறார்களா? வெளிப்படையாக அவர்கள் சொல்ல வேண்டும்.

“பிள்ளையார் கோயில்கள் சாத்தானின் கோயில்கள் எனக் கிறித்தவர் கருதினால், பிள்ளையார் கோயில்கள் உருவ வழிபாட்டு இடங்கள் காபிர்களின் உறைவிடங்கள் என முகமதியர் கருதினால், இலங்கை அவர்களுக்குரிய நாடு அல்ல. அவர்கள் கருத்தும் அவர்கள் நோக்கமும் கொண்ட நாடுகள் பல உலகில் உள்ளன.

“சைவக் கோயில்கள் உள்ள நாடுகளே திருக்கயிலாயம் தொடக்கம் கதிர்காமம் வரை நீண்டு காந்தாரம் தொடக்கம் ஐராவதி வரை அகன்ற பரத கண்டம். யுகங்கள் ஊடாகப் பிள்ளையாரை வழிபட்டு வந்தவர்கள் வருபவர்கள் இந்த நிலப்பரப்பில் வாழ்பவர்கள். தமிழர், சிங்களவர் என வேறுபாடின்றி அனைவரும் பக்தியோடும் பரவசத்தோடு உணர்வோடும் மண்ணின் மைந்தர்களாய்ப் பிள்ளையாரை வழிபடுகின்ற தீவே இலங்கைத் தீவு.

“இங்குள்ள பிள்ளையார் கோவிலை இடிக்க முயல்பவர்கள் ஆபிரகாமிய மதத்தைச் சேர்ந்தவர்கள். பிள்ளையார் கோவிலை உடைக்க ஊக்குவிக்கும் ஆபிரகாமிய மதக் கும்பல்கள் இந்த நாட்டை விட்டு வெளியேறினால் சைவர்கள் தம் உணர்வின் அடையாளங்களை, தம் நம்பிக்கையின் இருப்பிடங்களைப் பக்தியோடும் வழிபாட்டோடும் பண்பாட்டோடும் இணைத்துத் தம் முன்னோர் விட்ட வழியில் வாழ்வர்” - என்றுள்ளது. (ஐ)

## மேலும்...

கள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரச தகவல் திணைக்களம் நேற்று விடுத்துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இவ்வாறு மரணமடைந்த 19 பேரில் 7 ஆண்களும், 12 பெண்களும் உள்ளடங்குகின்றனர்.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா மரணங்களின் மொத்த எண்ணிக்கை 14 ஆயிரத்து 871 ஆக அதிகரித்துள்ளது. (இ)

## சக...

பொலிஸ் நிலையத்திலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

விடுமுறை தொடர்பான பிரச்னை காரணமாக பொலிஸ் உத்தியோகத்தர் இந்த துப்பாக்கிச் சூட்டை நடத்தியுள்ளார். இதில், சம்பவ இடத்திலேயே மூன்று பொலிஸார் உயிரிழந்தனர். பொறுப்பதிகாரி உட்பட மூவர் காயமடைந்தனர். இவர்கள், திருக்கோவில் மற்றும் அக்கரைப்பற்று மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். காயமடைந்தவர்களில் ஒருவர் நேற்று உயிரிழந்தார்.

தாக்குதலை நடத்திய பொலிஸ் உத்தியோகத்தர், அதற்கு பயன்படுத்திய ரி -56 ரக துப்பாக்கியுடன் எத்திமலை பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார். அவரிடமிருந்து 19 தோட்டாக்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து விசேட அதிரடிப் படையினர் பொலிஸ் நிலையத்தை தமது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவந்துள்ளனர். மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ஐ)

## இந்து...

சம்பவங்கள் தொடர்பில் காங்கேசன்துறை பிராந்தியத்துக்குப் பொறுப்பான மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் உப பொலிஸ் பரிசோதகர் நிதர்சன் தலைமையிலான மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இந்த நிலையில் காங்கேசன்துறை நல்லிணக்கபுரத்தைச் சேர்ந்த 34 வயதுடைய ஒருவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டார். அவரின் அலைபேசியில் திருடப்பட்ட இந்து விக்கிரகங்கள் பலவற்றின் ஒளிப்படங்களும் காணப்பட்டன. தொடர்ந்து முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் நேற்றுமுன்தினம் இரு விக்கிரகங்கள் கைப்பற்றப்பட்டன. அவை இரண்டும் தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டன.

இந்த நிலையில் கொழும்பு விரைந்த உப பொலிஸ் பரிசோதகர் நிதர்சன் தலைமையிலான குழுவினர் அங்கு வர்த்தகர்களுக்கு விற்பனை செய்யப்பட்ட மேலும் 20இற்கு மேற்பட்ட விக்கிரகங்களை மீட்டனர். அவற்றை கொள்வனவு செய்த வர்த்தகர்கள் தலைமறைவாகியுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். அவற்றில் பல இராணுவ மற்றும் கடற்படையின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களின் இந்து ஆலயங்களின் விக்கிரகங்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையோரைக் கைது செய்யும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். மீட்கப்பட்ட விக்கிரகங்களை யாழ்ப்பாணத்துக்கு கொண்டுவரப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

## ஐ. நாவின்...

கொண்டுவருகின்றன என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் குற்றஞ்சாட்டியுள்ளது.

அத்துடன், இந்த நாடுகளின் முயற்சிகளைத் தோற்கடித்து மனித உரிமைகள் சார் செயல்திட்டங்களுக்கு உரியவாறு நிதி ஒதுக்கப்படுவதை உறுதி செய்யவேண்டும் என்று ஐ. நா. உறுப்பு நாடுகளிடம் அந்த அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

அந்த அமைப்பு இது குறித்து வெளியிட்ட அறிக்கையில் மேலும் கூறியிருப்பவை வருமாறு,

ஐக்கிய நாடுகள் சபையின் 2022 ஆம் ஆண்டிற்கான வரவு - செலவுத்திட்டம் தொடர்பான விவாதம் நடைபெற்றுவரும் நிலையில், மனித உரிமைகள்சார் நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்படும் நிதியைக் குறைப்பதற்கு ரஷ்யா மற்றும் சீனா தலைமையிலான நாடுகளால் முன்னெடுக்கப்படக்கூடிய நடவடிக்கைகளுக்கு எதிரான உறுதியான நிலைப்பாட்டை உறுப்பு நாடுகள் வெளிப்படுத்தவேண்டும்.

ஒவ்வொரு வருடமும் டிசெம்பர் மாதம் ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின்கீழ் இயங்கும் நிதிச்சபையின் ஐந்தாவது குழு, ஐக்கிய நாடுகள் சபையின் வரவு - செலவுத் திட்டம் குறித்த கலந்துரையாடல்களில் ஈடுபடும். கடந்த வருடம் அக்கலந்துரையாடல்களில் பங்கேற்ற ஒருவரால் வழங்கப்பட்ட நம்பத்தகுந்த தகவல்களின் பிரகாரம், மனித உரிமைகளுடன் தொடர்புடைய குறித்த சில விவகாரங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதியைக் குறைப்பதற்கான அழுத்தம் ரஷ்யா மற்றும் சீனாவால் வழங்கப்பட்டன என அறியமுடிகின்றது.

இவ்வருடம் இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல் பொறிமுறைக்காக ஒதுக்கப்படவுள்ள நிதி மற்றும் ஆளணியில் குறைப்பைச் செய்வதற்கு மேற்படி இரு பாதுகாப்புச்சபை உறுப்புநாடுகளும் இலங்கையும் தீவிரமாக முயற்சிக்கின்றன.

சுயாதீனமாக இயங்குவதாகக் கூறிக்கொள்கின்ற ஐக்கிய நாடுகள் சபைக்கான வரவு - செலவுத் திட்டத்தை மதிப்பீடு செய்யும் குழு, மனித உரிமைகள்சார் செயல்பாடுகளுக்கான நிதிவழங்கலைக் குறைக்கக்கூடிய வகையிலான அரசியல் மயப்படுத்தப்பட்ட பரிந்துரைகளை வழங்குவதன் ஊடாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் செயல்திட்டங்களுக்கான நிதியைத் திரட்டும் முயற்சியில் பாதிப்பை ஏற்படுத்திவருவது மிகுந்த விசனத்திற்குரிய விடயமாகும். (ஐ)

## சர்வதேச...

அமெரிக்காவை தளமாகக் கொண்டியங்கிவரும் முன்னணி தமிழ் புலம்பெயர் அமைப்புக்களான வடஅமெரிக்க தமிழ் சங்கம் (FeTNA), இலங்கை தமிழ் சங்கம், ஒருங்கிணைந்த தமிழ் அமெரிக்கர்கள் அரசியல் நடவடிக்கை குழு (TAUPAC) அமெரிக்க தமிழ் செயல்பாட்டு குழு (USTAG), நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் மற்றும் உலகத் தமிழர் அமைப்பு ஆகிய ஆறு முன்னணி அமெரிக்க தமிழ் அமைப்புக்களே இந்தக் கோரிக்கைளை முன்வைத்திருக்கின்றன. முதன்முறையாக, அமெரிக்காவில் இயங்கிவரும் தமிழ்நாடு தமிழர்களை பிரதிநிதித்துவம் செய்யும் முன்னணி புலம்பெயர் அமைப்புக்களும், ஈழத் தமிழர் புலம்பெயர் அமைப்புக்களும் ஒன்றிணைந்து இந்தக் கோரிக்கைகளை முன்வைத்துள்ளன. இதில், பெட்னா என அழைக்கப்படும் வட அமெரிக்க தமிழ் சங்கம், அமெரிக்காவில் 40இற்கு மேற்பட்ட இந்திய தமிழ் புலம்பெயர் அமைப்புக்களை உள்ளடக்கியிருக்கும் பிரதான இந்திய தமிழ் புலம்பெயர் அமைப்பாகும்.

இலங்கைக்கான அமெரிக்க தூதுவராக இருந்த அலைனா ரெப்லிஸின் பதவிக்காலம் முடிவடைந்து வெளியேறியிருக்கும் நிலையில், புதிய அமெரிக்க தூதுவராக அறிவிக்கப்பட்ட ஜூலி -ஜியோன் சுங்கின் நியமனம், தற்போது உறுதிசெய்யப்பட்டுள்ளது. ஜூலி, விரைவில் அவரின் கடமைகளை பொறுப்பேற்கவுள்ளார். இவ்வாறானதொரு பின்னணியிலேயே அமெரிக்க தமிழ் புலம்பெயர் அமைப்புக்கள், புதிய தூதுவருக்கான வாழ்த்துச் செய்தியுடன், மேற்படி கோரிக்கைகள் அடங்கிய, கடிதத்தை அவருக்கு அனுப்பி வைத்துள்ளன.

## அரசைக்...

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி. தெரிவித்தார்.

“எதிர்த்தரப்பினர் தனித்துப் பயணிக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பமும் அரசுக்குச் சாதகமாகவே அமையும். எனவே, அரசுக்கு எதிரான பாரிய அரசியல் அரங்கைக் கட்டியெழுப்புவதற்கு ஒன்றிணைந்து செயற்படுவதற்கு மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கின்றோம்” எனவும் அவர் கூறினார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஜே.வி.பியுடன் இணைந்து பயணிக்கத் தயார் என்று தெரிவித்துள்ள நிலையில், இது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“ஜே.வி.பி. இந்தச் சந்தர்ப்பத்திலேயே பொறுப்புடன் செயல்பட வேண்டும். நாட்டில் ஏற்பட்டுள்ள சில நிலைவரங்களுக்கு அவர்களும் பொறுப்புக்கூற வேண்டும். எதிர்தரப்பிலுள்ள அனைவரும் ஒரே நிலைப்பாட்டுக்கு வருவார்களாயின் எதிர்க்கட்சியினர் மாத்திரமின்றி, ஆளுந்தரப்பில் அரசுக்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்டவர்களையும் இணைத்துக்கொண்டு பயணிக்க நாம் தயார்.

அரசுக்கு எதிரான அனைத்துத் தரப்பினரையும் ஒன்றிணைந்து பாரிய அரசியல் அரங்கைக் கட்டியெழுப்புவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தயாராகவுள்ளது. எதிர்காலத்தில் இது நடைபெறும்.

நாட்டு மக்கள் தற்போது எதிர்கொண்டுள்ள நெருக்கடிகளிலிருந்து அவர்களை மீட்பதற்கு அரசியல் அரங்கொன்று கட்டியெழுப்பப்பட வேண்டும். ஜே.வி.பி. உள்ளிட்ட ஏனைய அனைத்துக் கட்சிகளுக்கும் அதற்கான வாய்ப்பு திறந்தே காணப்படுகின்றது.- என்றார். (இ)

## மோடிக்கான...

திகதி - புதன்கிழமை கொழும்பில் தலைவர்கள் கைச்சாத்திட ஏற்பாடுகள் நடைபெறுகின்றன என்று ஏற்பாட்டாளர்களான தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) சார்பில் இச்செயல்பாட்டின் ஒருங்கிணைப்பாளர் குருசுவாமி சுரேந்திரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த 21ஆம் திகதி கொழும்பு குளோபல் ரவர் ஹோட்டலில் தமிழ் பேசும் மக்களின் கட்சித் தலைவர்கள் இந்திய பிரதமருக்கு அனுப்பும் கோரிக்கைகள் அடங்கிய இறுதி செய்யப்பட்ட வரைவை சீர்செய்யும் நோக்கத்திற்காக கூடினர். அன்றைய கூட்டத்தில் கலந்துகொண்ட தமிழ் அரசுக் கட்சி சமர்ப்பித்த வரைவும் பரிசீலிக்கப்பட்டது. இரண்டு வரைவுகளுக்கு இடையிலும் பெரிய வித்தியாசங்கள் காணப்படாமையினால் தமிழ் அரசுக் கட்சியால் சமர்ப்பிக்கப்பட்ட வரைவில் உள்ள விடயங்களையும் சேர்த்துக் கொள்ள இணக்கம் காணப்பட்டது.

அன்று மாலைவரை நடந்த கலந்துரையாடலில் தலைவர்கள் ஒன்றிணைந்து கடிதத்திற்கான வரைவை இறுதி செய்தனர். இணக்கம் காணப்பட்ட விடயங்களுடன் திருத்தியமைக்கப்பட்ட வரைவு மறுநாள் தலைவர்களால் என்னிடம் சமர்ப்பிக்கப்பட்டது. அவை அனைத்தும் ஒருங்கிணைக்கப்பட்டு சீர் செய்வதற்காக அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அனைத்து தலைவர்களுடைய வழிகாட்டுதலோடும் வரைவு இறுதி கட்டத்தை அடைந்துள்ளது. எதிர்வரும் 29-12-2021, அனைத்து தலைவர்களின் வசதிக்கேற்ப கொழும்பில் இக்கடிதத்தில் கைச்சாத்திட ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

இவ்விடயத்தை செவ்வனே நிறைவேற்றி தமிழ் பேசும் மக்கள் முகம்கொடுத்திருக்கும் பாரிய அரசியல் அச்சுறுத்தல்களை எதிர்கொண்டு தம் மக்களை மீட்க விட்டுக்கொடுப்போடும், அர்ப்பணிப்போடும் ஒருமித்து செயலாற்ற அனைத்து தலைவர்களும் உறுதி பூண்டுள்ளனர் - என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu




# 2022இல் பஞ்சம் ஏற்படுமா? அரசுக்குள் கருத்து முரண்





கொழும்பு, டிசெ. 26

**2022இல் நாட்டில் உணவு பஞ்சம் ஏற்படும் என்று முன்னாள் விவசாயத்துறை அமைச்சரும் தற்போதைய சுற்றாடல்துறை அமைச்சருமான மஹிந்த அமரவீர அறிவித்துள்ள நிலையில், அதற்கான சாத்தியமில்லை என்று தற்போதைய விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார். உணவுத் தட்டுப்பாடு ஏற்படும் என்பதால் அனைவரும் உற்பத்தி நடவடிக்கையில் ஈடுபடவேண்டும் என்று அமைச்சர் மஹிந்த அமரவீர அழைப்பு விடுத்துள்ளார்.**

அதேபோல் நாட்டில் உணவுத் தட்டுப்பாடு ஏற்படும் எனவும், அந்த நிலைமையை இல்லாது செய்வதற்குத் தற்போதே தயாராக வேண்டும் எனவும் விவசாயத்துறை அமைச்சின் முன்னாள் செயலாளர் பேராசிரியர் உதித் கே ஜயசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆனால், நாட்டில் உணவுத் தட்டுப்பாடு ஏற்படாது என்பதை விவசாயத்துறை அமைச்சர் என்ற வகையில் பொறுப்புடன் கூறிக் கொள்ள விரும்புகின் றேன் என்று அமைச்சர் மஹிந்தானந்த அளுத் கமகே அறிவித்துள்ளார்.

“இரசாயன உர நிறுவனங்களின் பிரதிநிதிகளே இவ்வாறான அறி விப்புகளை விடுத்து வரு கின்றனர். 25 மாவட்டங்களில் உள்ள விவசாய அதிகாரிகளுடன் நான் பேச்சு நடத்தினேன். உற்பத்தி நட வடிக்கை தொடர்பில் மீளாய்வும் செய்தேன்.

உற்பத்தியில் ஓரளவு வீழ்ச்சி ஏற்படும் என்றபோதி லும் உணவு தட்டுப்பாடு ஏற்படாது. உரத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக் கப்பட்டுவருகின்றது” என்றும் விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தா னந்த மேலும் தெரிவித் துள்ளார்.

அதேவேளை, பெருந்தொற்று ஏற்பட்டால் உணவுத் தட்டுப்பாடு உள்ளிட்ட பிரச்சினைகள் ஏற்படுவது வழமை என்று ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்கவும் சுட்டிக்காட்டி யுள்ளார். (இ)

# டொலர் சிக்கலால் துறைமுகத்தில் தேங்கிக்கிடக்கும் கொள்கலன்கள்



கொழும்பு, டிச. 26

துறைமுகத்தில் தேங்கிக் கிடக்கும் 30 வீத அத்தியாவசிய உணவுக் கொள் கலன்கள் விடுவிக் கப்பட்டுள்ளன என்று அத்தியாவசியப் பொருட் கள் இறக்குமதியாளர்கள் சங்கம் தெரி வித்துள்ளது.

வங்கிகள் பல கட்டங்களாக டொலர் களை வழங்கு வதால் துறைமுகத்தில் தேங்கியுள்ள கொள்கலன்களை விடுவிப்பது தாமதமாகி யுள்ளது எனக் குறித்த தொழிற்சங்கம் சுட்டிக் காட்டி யுள்ளது.

துறைமுகத்தில் தேங்கியுள்ள அத்தியாவசிய உணவுப் பொருட்கள் அடங்கிய கொள்கலன் களை விடுவிக்க தேவையான ஏற்பாடுகள் செய் யப்படும் என்று வர்த்தக அமைச்சர் பந்துல குண வர்தன அண்மையில் தெரிவித் திருந்த போதிலும் அதற்கான ஏற்பாடுகள் இதுவரை கிடைக்கப்பெற வில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன் காரணமாக வங்கிகள் டொலர்களை வழங்கும் முறையின் பிரகாரம் கொள்கலன்கள் விடுவிக்கப்படு கின்றன என்று அத்தியாவசியப் பொருட்கள் இறக்கு மதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதன்படி, கொள்கலன்களை விடுவிப்பதில் ஏற்படும் தாமதத்துடன், நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் அடங்கிய கொள்கலன் களின் எண்ணிக்கை அதிகரிக்கும் என தொழிற்சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

அதன்படி, வங்கிகளால் உடனடி யாக டொலர்கள் வழங்கப்பட்டால் துறைமுகத்தில் இருந்து கொள்கலன் களை விரைவில் விடுவிக்க முடியும் எனவும், எதிர்வரும் ஜனவரி மாதத் துக்குள் தேவையான ஏற்பாடுகளை மத்திய வங்கி மேற்கொள்ளும் என எதிர்ப்பார்ப்பதாக வும் அத்தியாவசிய பொருட்கள் இறக்குமதியாளர் சங்கம் தெரிவித்துள்ளது. (இ)

# மனைவியால் கணவன் அடித்துப் படுகொலை!

## நுவரெலியாவில் பயங்கரம்

நுவரெலியா, பீட்ரு பகுதியில் மனைவியால் கண வன் அடித்துப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

கணவன் - மனைவி இடையே நேற்றுமுன்தினம் இரவு ஏற்பட்ட முரண்பாடு மோதலாக மாறியதை யடுத்தே இந்தப் படுகொலை இடம்பெற்றுள்ளது.

மூன்று பிள்ளைகளின் தந்தையே (வயது - 44) இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபரின் மனைவிக்கும் பிறிதொரு நபருக்கும் இடையில் தகாத உறவு இருந்து வந்துள்ளது. இந்த விடயம் தெரியவர, அது தொடர்பில் மனைவியிடம் கணவர் வினவியுள்ளார். இதன்போது இருவருக்கும் இடையில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

இதனால் ஆத்திரமடைந்த மனைவி, அவரைப் பொல்லால் கடுமையாகத் தாக்கி கொன்றுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் நுவரெலியா பொலி ஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

# ரயில் திணைக்களத்தினருக்கு தினசரி ஒரு கோடி ரூபாய் நட்டம்

கொழும்பு, டிசெ. 26

ரயில் நிலைய அதிபர்களின் தொழிற்சங்க நட வடிக்கை காரணமாக ரயில் திணைக்களத்துக்கு நாளாந் தம் சுமார் 10 மில்லியன் ரூபாய் நட்டம் ஏற்படுகின்றது என ரயில் நிலைய அதிபர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

தொழிற்சங்க நடவடிக்கையால் பயணச்சீட்டு விநி யோகம் மற்றும் பொதி களைப் பொறுப்பேற்றல் என் பன இடைநிறுத்தப் பட்டுள்ளமையால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது என அந்தச் சங்கம் தெரி வித்துள்ளது.

பதவி உயர்வு, பயணி களுக்கான வசதிகள் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளுக்குத் தீர்வு வழங்குமாறு வலியுறுத்தி ரயில் நிலைய அதிபர்கள் தொழிற்சங்க நடவடிக் கையில் ஈடுபட்டு வரு கின்றமை குறிப்பிடத்தக் கது. (இ)

# மரண அறிவித்தல்

மலர்வு
24 - 11 - 1930



உதிர்வு
23 - 12 - 2021

## அகஸ்ரின் ஞானப்பிரகாசம்

**(இளைப்பாறிய சுங்க அதிகாரி)**

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், கனடா Scarborough ஐ வதிவிடமாகவும் கொண்ட அகஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்கள் 23.12.2021 வியாழக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஞானப்பிர காசம் - அக்னஸ் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வரும், காலஞ்சென்றவர்களான யேகப் மேரி ரோசா தம்பதிய ரின் அன்பு மருமகனும்,காலஞ்சென்ற அற்புதம் அவர் களின் அன்புக் கணவரும், சுமதி, மாலதி, நிலாந்தி ஆகி யோரின் அன்புத் தந்தையும், சுகுமார், ஜெயரட்ணம், தயாபரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென் றவர்களான அருளானந்தம், விக்ரர், சிறில், அன்ரன் மற்றும் பேணாட், பற்றிக், செல்வரட்ணம், நவரட்ணம், தர்மரட்ணம், மரியநாயகம் ஆகியோரின் அன்புச் சகோ தரனும், காலஞ்சென்றவர்களான வில்பிரட், சார்ள்ஸ், பிறிட்டோ, றங்கா மற்றும் றெஜினா, ரீற்றா, தங்கராசா, சாரதா, மேனகா, சுசி, சகுந்தலா ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரனும், மாகிறற், காலஞ்சென்ற திரே சம்மா, லூர்தம்மா, இந்திரா, Kathleen, ஏணஸ்ரின், தர்மலோஜினி, காலஞ்சென்ற மாகிறற் மற்றும் Cathy, காலஞ்சென்றவர்களான திரேசம்மா, திரவியநாயகம், சௌந்தரநாயகம் மற்றும் றெஜினா, மனோகரநாயகம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், Cynthia Johnathan, Niroshini, Shiromi, Shannahan, Sandra, Sharon, Sabrina ஆகியோரின் அன்புப் பேரனும், Nivethan, Divian, Leila, Amara ஆகியோரின் அன்பு பூட்டனும் ஆவார்.

*பார்வைக்கு*
Tuesday, 28 Dec 2021 6:00 PM - 8:30 PM
Wednesday, 29 Dec 2021 8:45 AM - 9:00 AM
Ogden Funeral Homes 4164 Sheppard Ave E, Scarborough, ON M1S 1T3, Canada

*திருப்பலி*
Wednesday, 29 Dec 2021 9:30 AM
St. Thomas the Apostle Roman Catholic Church 14 Highgate Drive, Markham, ON L3R 3R6, Canada

*நல்லடக்கம்*
Wednesday, 29 Dec 2021 10:00 AM
Christ the King Catholic Cemetery 7770 Steeles Ave E, Markham, ON L6B 1A8, Canada

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தொடர்புகளுக்கு:*
**சுகுமார் - மருமகன்**
Mobile : +14168544760

*தகவல்:*
**குடும்பத்தினர்.**




*இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 26.12.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.*

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : அறிந்தும் அறியாமலும்
11.00 மணி : BEAT BOX
11.30 மணி : தடை அதை உடை-தற்காப்புக்கலை

**பகல்**
12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி



1.30 மணி : வீக் என்ட் மூவி-கிரீடம்
4.30 மணி : காட்டூன் தமிழ்
5.00 மணி : COFFE WITH பிரமுகர்



6.00 மணி : கலக்கல் ஸ்ரார் - திறமையாளர்களுக்கான களம்
7.00 மணி : SPOTLIGHT - செய்திகள் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முண்ணனியின் தலைவர்-சுரேஸ் பிரமச்சந்திரன்
08.00 மணி : இரவுச் செய்திகள்
09.00 மணி :செல்லாடுகளம்
10.00 மணி:- நேர்கொண்ட பார்வை- ஞானசார தேரர்




## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## சிவ நிலி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி :கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : இயேசுவின் போதனைகள் (மறுஒளிபரப்பு)
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: விவிலியம் அறிவோம் (திருகோணமலை)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: மறைக்கல்வி(மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
7.00 மணி : ஞானவழி
7.30 மணி : படம்

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு